பக்கங்கள்: பதனாறு

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆடி 02 சனிக்கிழமை (17-07-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:235

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வற்புறுத்தி மக்கள் இயக்கம்

## அதற்கான பிரசாரத்துக்காக தயாராகின்றனர் புத்திஜீவிகள்

கொழும்பு,ஜூலை17

**கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கக்கோரும் மக்கள் இயக்கம் ஒன்றை பாரிய அளவில் முன்னெடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதற்கான பிரசார நடவடிக்கைகளுக்கு புத்திஜீவிகள் தயாராகி வருகின்றனர்.**

அடிப்படை மனித உரிமைகளை மோசமாக மீறும் வகையிலும், மனித உரிமை விழுமியங்களைக் கேலிக் கூத்தாக்கும் போக்கிலும், நீதித்துறையில் சுயாதீனமான செயற்பாட்டைக் கேவலமான திசைக்கு வழிப்படுத்தும் பாங்கிலும் விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இச்சட்டம் வழிசெய்துள்ளது என்பது சட்ட அறிஞர்களினதும் சமூகத் தலைவர்களினதும் கருத்தாகும்.

1979இல் பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டமாக அப்போதைய ஜனாதிபதி

(16ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு., அம்பாறை தமிழ் எம்.பிக்கள் புலிகளுடன் சந்திப்பு

மட்டக்களப்பு,ஜூலை17

மட்டு. - அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சந்திப்பு இன்று சனிக்கிழமை கிளிநொச்சியிலுள்ள சமாதானச் செயலகத்தில் முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராசசிங்கம், பா. அரியநேத்திரன், த.கனகசபை, எஸ்.ஜெயானந்தமூர்த்தி, செல்வி க.தங்கேஸ்வரி, அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.பத்மநா

(16ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் இன்று இந்தியா பயணம்

கொழும்பு,ஜூலை17

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று இந்தியா பயணமாகிறார்.

மூன்றுநாள் விஜயமாக இந்தியா செல்லும் பிரதமர், இந்திய உயர் அதிகாரிகளைச் சந்தித்து இலங்கை - இந்தியா இருதரப்பு விவகாரங்கள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் உள்ளிட்ட ஏனைய துறை அமைச்சர்களையும், இந்திய காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியையும் இந்த விஜயத்தின்போது ராஜபக்ஷ சந்திக்கவுள்ளார்.

இலங்கைப் பிரதமரோடு வர்த்தக, வாணிப, நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ்

(16ஆம் பக்கம் பார்க்க)

## இயக்கங்களுடன் தனக்குத் தொடர்பு இல்லை என்கிறார் சிறையில் சச்சு மாஸ்டரைச் சுட்டவர்

### துரோகி எனக் கருதியதாலேயே சுட்டார் எனவும் வாக்குமூலம்

மட்டக்களப்பு,ஜூலை17

தனக்கு இயக்கங்கள் எவற்றுடனும் தொடர்பு இல்லை என்று நேற்று முன்தினம் மட்டக்களப்பு சிறையில் சச்சு மாஸ்டரை சுட்டுக்கொன்றவரான மகேந்திரன் புவிதரன் பொலீஸாரிடம் தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகின்றது. சச்சு மாஸ்டரை ஒரு துரோகி எனக் கருதியதனாலேயே தான் அவரைச்சுட்டுக் கொன்றார் என்றும் அவர் தெரிவித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு நீதிமன்றத்தில் அவரை நேற்றுப் பொலீஸார் ஆஜர்ப்படுத்தினர். எதிர்வரும் 27ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் எம்.எச்.எம்.அஜ்மீர் உத்தரவிட்டார்.

சச்சு மாஸ்டரைச் சுட்டவரான மகேந்திரன் புவிதரன் மட்டக்களப்புப் பொலீஸாரிடம் வழங்கிய வாக்கு மூலத்தில் தெரிவித்தார் எனக்கூறப்படுவதாவது:-

"சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர் துப்பாக்கி, கிரனேட், கையடக்கத் தொலைபேசி என்பன அடங்கிய பார்சல் ஒன்று சிறையில் இருந்த சச்சு மாஸ்டருக்கு வந்தது. அதை அவர் என்னிடம் தந்து வைத்திருந்தார்.

"தேவையேற்படும் போது மட்டும் கைத்தொலைபேசியை என்னிடம் பெற்றுப்பயன்படுத்துவார். ஏனைய நேரங்களில் அது என்னிடமே இக்கும்.

"எனக்கு சச்சு மாஸ்டர் மற்றும் சகா தீபனுக்கும் (இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டவர்கள்) மட்டுமே ஆயுதங்கள் எங்கே இருந்தன என்ற விபரம் தெரியும். வேறு எவருக்கும் இது பற்றித் தெரியாது.

"நான் தனிமனிதன் எனக்கு எந்தவோர் இயக்கத்துடனும் தொடர்பு இல்லை.

(16ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு நிலைமை கவலையளித்தாலும் அமைதி முயற்சிக்குப் பாதிப்பில்லை

### சமாதானச் செயலகத் தலைவர் தெரிவிப்பு



மட்டக்களப்பு,ஜூலை17

கிழக்கு மாகாண நிலைமை கவலையளிக்கிறது. ஆனாலும் அதனால் சமாதான முயற்சிகள் பாதிக்காது.

- இவ்வாறு தெரிவித்தார் இலங்கை சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஜயந்ததனபால.-

கிழக்கு மாகாண நிலைமைகளை நேரில் கண்டறிவதற்காக நேற்று மட்டக்களப்பிற்கு அவர் விஜயம் ஒன்றினை மேற்கொண்டார். அங்கு முப்படைகளினதும் தளபதிகள், பொலீஸ் அதிகாரிகளுடன் மட்டக்களப்பின் பாதுகாப்பு நிலைகுறித்துக் கலந்தாலோசித்த அவர் மட்டு. ஆயர், இராமகிருஷ்ண மிஷன் ஜீவானந்த சுவாமி, அரச அதிபர் வி.சண்முகம் ஆகியோரையும் சந்தித்துப் பேசினார். யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரையும் சந்தித்தார்.

அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் கூறியதாவது:-

கிழக்கு மாகாண நிலைவரம் யுத்த நிறுத்த உடன்பாட்டுக்கு பாதகமாக அமைந்துள்ளது; அது கவலையளிப்பதாக உள்ளது. ஆனாலும் இந்த நெருக்கடி நிலை சமாதான செயற்பாடுகளுக்கு இடைஞ்சலாக இருக்கும் எனக்கருத

(16ஆம் பக்கம் பார்க்க)

## சச்சு மாஸ்டரைச் சுட்டவர் மீண்டும் மட்டு. சிறையில்!

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கருணாவின் சகாவான சச்சு மாஸ்டர் மற்றும் அவரது உதவியாளரைச் சுட்டுக்கொன்றவர் என்று கருதப்படும் மகேந்திரன் புவிதரன் மீண்டும் அதே சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

சிறைச்சாலைக்குள் துப்பாக்கி வந்த விதம் குறித்து அவரிடம் துருவித்துருவி விசாரணை மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகின்றது. எனினும், அதுபற்றிய விசாரணையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை என மட்டக்களப்பு பொலீஸ்நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

மட்டக்களப்புச் சிறைச்சாலையைச் சுற்றி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட கணபதிப்பிள்ளை மகேந்திரன் (சச்சு மாஸ்டர்), சரவணமுத்து சாந்தகுமார் ஆகியோரின் சடலங்கள்

(16ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்தில் இதய சுத்தியுடன் செயற்பட அரசுக்கு அமெரிக்கா அழுத்தம் தர வேண்டும்

### கூட்டமைப்பு எம்.பிக்கள் தூதரக அதிகாரியிடம் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூலை17

சமாதான முயற்சிகளில் குழப்பங்களை ஏற்படுத்தாமல் இதயசுத்தியுடன் செயற்படுமாறு இலங்கை அரசுக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுக்கவேண்டும்.

- இவ்வாறு தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்றுத் தம்மைச் சந்தித்த அமெரிக்க தூதரக அரசியல் அதிகாரி கோடி சி டெயிலர் அம்மையாரிடமே அவர்கள் இக்கோரிக்கையை வலியுறுத்தினர்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அம்மையார் தமிழத் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை கூட்டமைப்பு அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல் சந்தித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, என். ரவிராஜ், எம்.கே.சிவாஜிலிங்கம், மா.க.ஈழவேந்தன், எஸ்.சிவநேசன், எஸ்.கஜேந்திரன், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

அவர்கள் முன்வைத்த கோரிக்கைகள் வருமாறு:-

★ விடுதலைப் புலிகள் மீதான தடையை அமெரிக்கா நீக்கவேண்டும்.

★ இலங்கை அரசுக்கு இராணுவ உதவிகளை வழங்கி அரசு - புலிகள் சமநிலையை வலுவிழக்கச் செய்யக்கூடாது.

★ விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகப பிரதிநிதிகளாக ஏற்று அரசு மீண்டும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## துறைமுகப்பாதுகாப்பு தொடர்பாக அமெ. - இலங்கை பேச்சு

கொழும்பு,ஜூலை17

இலங்கைத் துறைமுகங்கள் ஊடாக சட்ட விரோத கதிர் வீச்சுப்பொருள்கள் கொண்டு செல்லப்படுவதை தடைசெய்வது குறித்த அமெரிக்க அரசின் திட்டம் குறித்து அமெரிக்காவும் இலங்கையும் விரையில் பேச்சு நடத்த உள்ளன.

அமெரிக்காவின் சக்திவளத்திணைக்களம் கதிர் வீச்சுப் பொருள்கள் சட்டவிரோதமாக நாட்டுக்கு நாடு கடத்தப்படுவதைத் தடுக்க உலகளவில் இத்திட்டத்தைச் செயற்படுத்த உள்ளது. இது தொடர்பாக இலங்கை அதிகாரிகளுடன் பேச்சு நடத்த அமெரிக்க குழு ஒன்று விரைவல் இலங்கை வரவுள்ளது. (ஓ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் கலைவிழாவின் ஆரம்பநாள் நிகழ்வு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் நல்லை ஆதீனக் குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, கழகத் தலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராசா ஆகியோர் மங்களவிளக்கேற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# உண்மை நிலைமையை அறிய புலிகளைச் சந்தித்துப் பேசுங்கள்

## அமெரிக்க அதிகாரிக்கு மாணவர் அமைப்புகள் மகஜர்

யாழ்ப்பாணம்,ஜுலை17

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அமெரிகக தூதரகத்தின் அரசியல் பிரிவு அதிகாரி கோடி டேய்லர் அம்மையாருக்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை நேற்று அனுப்பியிருந்த கடிதம் ஒன்றில் யாழ்ப்பாணத்திற்கு அமெரிக்க அதிகாரிகள் வருகை தந்து இலங்கை இராணுவத்திற்குப் பயிற்சியளிப்பதைக் கடுமையாக ஆடசேபித்துள்ளனர்.

இத்தகைய கடிதத்தை யாழ்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் கொடி சி.டேய்லர் அம்மையாருக்கு அனுப்பிவைத்துள்ளது.

வடபிரதேச நிலைமைகள் பற்றி அறிந்து கொள்ள வந்துள்ள கொடி அம்மையாரை இவ்விரு ஸ்தாபனங்களும் வரவேற்றுள்ள அதேவேளை, தமிழ்மக்களின் உண்மையான நிலையை அறிந்துகொள்ள வேண்டுமானால் தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளைச் சந்தித்துப் பேசுவதன் மூலமே உண்மை நிலைமையை புரிந்துகொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளன.

இதேவேளை, யாழ்.விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஆகியவையும் டெய்லர் அம்மையாருக்கு மகஜர்களை அனுப்பியுள்ளன.

கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தனது மகஜரில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிடம் இடைக்கால நிர்வாகம் கையளிக்கப்படும் வரை இலங்கைக்கு அமெரிக்கா உதவிகள் எதனையும் வழங்கக்கூடாதென்றும் தமிழீழ விடுதலைப் புலிகளை அமெரிக்கா பயங்கரவாத அமைப்புக்கள் பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் என்றும், ஈழத்தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும்படியும் கோரப்பட்டுள்ளது.

பொது அமைப்புக்களின் ஒன்றியம் தனது கடிதத்தில் ஈழத்தமிழர்கள் தமது தாயகத்தில் நிரந்தர அமைதியுடனும் கூடிய வாழ்வையே வேண்டி நிற்கின்றனர். இலங்கைப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சின் மூலம் இறுதித் தீர்வு ஒன்று எட்டப்பட வேண்டும் என்று அமெரிக்கா விரும்பினால் விடுதலைப் புலிகள் மீதான தடையை அமெரிக்க அரசு நீக்கவேண்டும். என்று கோரியுள்ளது. (ப-ஒ)

# நாடாளுமன்ற அமர்வைப் பார்க்க பொதுமக்களுக்கு அனுமதி இல்லை!

## அநாகரிகம் அம்பலமாவதைத் தடுக்க நடவடிக்கை

கொழும்பு,ஜுலை17

எதிர்வரும் செவ்வாயன்று கூடும் நாடாளுமன்றத்தின் அடுத்த அமர்வைப் பொதுமக்கள் பார்வையிட முடியாது. இவ்வாறான தீர்மானமொன்று கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்டிருக்கின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர் இடம்பெற்ற மூன்று நாடாளுமன்ற அமர்வுகளின்போதும் அங்கு நிகழ்ந்த குழப்பங்கள் மற்றும் அநாகரிகமான செயற்பாடுகளைக் கருத்திற்கொண்டே இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

கடந்த ஜுன் எட்டாம் திகதி இடம்பெற்ற நாடாளுமன்றத்தின், மூன்றாவது அமர்வின் போது ஏற்றப்பட்ட குழப்பம் காரணமாக, கலரியில் அமர்ந்திருந்த பொதுமக்கள் வெளிமண்டபத்துக்கு வெளியேற்றப்பட்டதுடன், அங்கிருந்து வெளியே செல்லவிடாது சுமார் ஐந்து மணித்தியாலங்கள் அவர்கள் பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டுமிருந்தனர். அதனால், நாடாளுமன்ற அமர்வுகளில் சுமுகநிலையொன்று ஏற்படும்வரை பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை நாடாளுமன்ற அமர்வுகளைப் பார்வையிட அனுமதிப்பதில்லை என முடிவு செயயப்பட்டிருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் பிரியாணி விஜேசேகர அறிவித்துள்ளார்.

அதேவேளை, எதிர்வரும் 20 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளும் புதிய எம்.பிக்களின் உறவினர்களுக்கு மட்டும் அன்றைய அமர்வைப் பார்வையிட அனுமதி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சபாநாயகர் தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-க)

# மகேஸ்வரன் எம்.பி. இன் யாழ்.நகர வீட்டில் திருட்டு

யாழ்ப்பாணம்,ஜுலை17

கொழும்பு மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனின் யாழ்.பலாலி வீதியில் அமைந்துள்ள வீட்டில் இருந்து பெறுமதி வாய்ந்த பொருள்கள் திருடப்பட்டுள்ளதாக நேற்று யாழ். பொலீஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த 9ஆம் திகதி இரவு இடம்பெற்றதாக அந்த வீட்டைப் பராமரித்து வரும் தி.மகேஸ்வரனின் உறவினர் ஒருவர் பொலீஸில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.

வீட்டின்பின் கதவை உடைத்து உட்சென்ற நபர்கள் அங்கிருந்த மின்சாரப்பிறப்பாக்கி, தொலைக்காட்சிப்பெட்டி, குளிர்சாதனம் உட்படப் பல பொருள்களை எடுத்துச் சென்றுள்ளனர் என்றும் -

பகல் நேரங்களில் மட்டுமே வீட்டுக்கு வந்து செல்லும் பிரஸ்தாப உறவினர் சம்பவதினத்துக்கு மறுநாள் காலை பொருள்கள் திருடப்பட்டதை அறிந்தார் என்றும் -

இது தொடர்பாக தி.மகேஸ்வரனுக்குத் தகவல் தெரிவித்துவிட்டு, அதன் பின்பே பொலீஸில் முறைப்பாடு செய்யத் தீர்மானித்து நேற்று முறைப்பாடு செய்தார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலீஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ஒ-6)

# பாரம்பரியக் கலைவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள்

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின கலைவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணிககு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா முதன்மை விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். வலயக் கல்விப பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், கலாசாரத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி என. ஸ்ரீதேவி, யாழ்.மாவட்ட புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் சு.ஜெயராஜ், தமிழீழ கல்விக்கழகத்தைச் சேர்ந்த க.அருள்மாஸ்ரர் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து மூத்த கலைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இணுவில் கந்தசுவாமி கோயில் தொண்டர் சபையினரின் "மயான காண்டம்" வாகீஸ்வரி நாடகமன்றத்தின் "பூதத்தம்பி" இசைநாடகமும் இடம்பெறும்.

இதேவேளை, கலைவிழாவின் முதலாம் நாள் நிகழ்வுகள் நேற்று நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் ஆசியுரையுடன் ஆரம்பமாகின.

சிறப்பு விருந்தினராக தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரியல்துறைப் பொறுபபாளர் சி.இளம்பரிதியும் கலந்துகொண்டார்.

தொடர்ந்து மாதனை வேணுகான சபா வழங்கிய "காத்தவராயன் கூத்து", நாவாந்துறை புனித நீக்கிளாஸ் நாடகமன்றத்தின் "ஏரோடியாள் சபதம்" என்னும் தென்மோடி நாட்டுக்கூத்தும் மேடையேற்றப்பட்டது.

தொடர்ந்து பாரம்பரிய கலைகள் மேம்பாட்டு கழகத்தினரால் நடத்தப்பட்ட கலைப்போட்டிகளில் பரிசு பெற்றவர்களுக்குப் பரிசில்களும், மூத்த கலைஞர்களுக்கு "மரபுக்கலைச் சுடர்" பட்டமும் வழங்கப்பட்டது. (எ-13)

# சிநேகபூர்வ உதைபந்தாட்டம் சுவிஸ் குழு யாழ். அணியிடம் தோல்வி

வலி.வடக்கு,ஜுலை17

புலம்பெயர்ந்து சுவிஸ் நாட்டில் வசிக்கும் ஈழத்தமிழர்களின் உதைபந்தாட்ட அணி ஒன்றுக்கும் யாழ்ப்பாண அணி ஒன்றுக்கும் இடையே நேற்று யாழ்.பொது விளையாட்டு மைதானத்தில் (துரையப்பா விளையாட்டரங்கு) இடம்பெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாண அணி வெற்றிபெற்றது.

முதல் பாதி ஆட்டத்தின்போது யாழ்ப்பாண அணி 3 கோல்களையும் இரண்டாம் பாதி ஆட்டத்தின்போது 4 கோல்களையும் பெற்று 7:0 என்ற கோல் கணக்கில் சுவிஸ் அணியை வெற்றிகொண்டது. 15 வயதுக்குட்பட்டவர்களுக்கு இடையே இப் போட்டி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

சுவிஸ் அணியின் முன்னணி வீரர்கள் கோலகளைப் பெறுவதற்கு பெரும் பிரயத்தன முயற்சிகளை மேற்கொண்டபோதிலும் அவர்களது முயற்சி வெற்றியளிக்கவில்லை.

சுவிஸ் அணியினர் கிளிநொச்சியில் இன்று மாவட்ட அணிகளிடையே இடம்பெறும் போட்டியில் கலந்துகொள்வதற்காக செல்கின்றனர்.(ஒ-86)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜுலை17

புலோலி மேற்கு, அவ்வொல்லைப் பிள்ளையார் கோயில் வைரவர் ஆலய வேள்வியை முன்னிட்டு இன்று சனிக்கிழமை காலை பொங்கல் விழா நடைபெறும். (எ-17-78-201)

★ ★ ★

நவாலி,ஜுலை17

நவாலி ஸ்ரீ கதிர்காமமுருகன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை காலை 8.00 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. (எ-100-201)

★ ★ ★

குடத்தனை,ஜுலை17

துன்னாலை வடக்கு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை 'கிருஷ்ணபக்தி' என்னும் தலைப்பில் கலாவிநோதன், வில்லிசைப்புலவர், கே.என்.கணபதிப்பிள்ளை (சின்னமணி) சொற்பொழிவாற்றவுள்ளார். (எ-78-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜுலை17

உடுப்பிட்டிச்சந்தியில் உள்ள உலக இரட்சகர் தேவாலய வருடாந்தத் திருவிழா கடந்த 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிக்குத் திருப்பலிப் பூசையையடுத்து நற்கருணை ஆராதனை இடம்பெறும். நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 7.00 மணிக்குத் திருநாள் திருப்பலி, திருச்சொரூபபவனி என்பவற்றுடன் விழா நிறைவடையும். (எ-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜுலை17

காரைநகர் கருங்காலி - கேசடை கதிர்காமசுவாமி ஆலய 108 கலச சங்காபிஷேகம் நாளைமறுதினம் திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. (எ-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜுலை17

இமையாணன் ஸ்ரீமுருகன் ஆலய வருடாந்த பெருநதிருவிழா இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 31ஆம் திகதி தேர் உற்சவமும், மறுநாள் முதலாம்திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும். (எ-5)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜுலை17

யாழ்.கொமர்ஷல் வங்கியின் அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் 16 வயதுப்பிரிவினருக்கு நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நேற்று ஆரம்பமானது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று ஆரம்பமான இந்த இறுதியாட்டத்தில் யாழ்.இந்துக்கல்லூரியும் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் மோதுகின்றன.

இன்று காலை ஆரம்பமாகும் 2ஆம் நாள் ஆட்டத்தின் முடிவில் இடம்பெறும் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக ஈ.எஸ்.பி. நிறுவன உரிமையாளர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் கலந்து கொள்வார்.

கடந்த ஏழு வருடங்களாக யாழ்ப் பாண பாடசாலைகள் துடுப்பாட்டச்சங்கம் நடத்தும் இப் போட்டிகளுக்கு கொமர்ஷல் வங்கி அனுசரணை வழங்கிவருகின்றது.

யாழ்.குடாநாட்டில் உள்ள சிறந்த துடுப்பாட்டவீரர்களை மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் வளர்த்தெடுக்கும் நோக்குடன் இந்த அனுசரணையை வழங்கி வருகின்றோம் என வங்கியின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார். (ஐ-86)

★ ★ ★

வலி.வடக்கு,ஜுலை17

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கினால் அமரர் தம்பிராசா ஞபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்காக லீக் முறையில் நடத்தப்படும் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

★ அளவெட்டி விநாயகர் வி.க. எதிர் தெல்லிப்பழை நியூஸ்ரார் வி.க.

★ சுன்னாகம் லம்போதரா வி.க எதிர் அராலி ஐக்கிய வி.க. (ஐ-86)

# கும்பகோணம் தனியார் பள்ளியில் நேற்றுக்காலை பெரும் தீ விபத்து!

## 80 இற்கும் மேற்பட்டோர் உடல் கருகிப் பலி?

கும்பகோணம்,ஜூலை17

கும்பகோணத்தில் உள்ள கிருஷ்ண மகளிர உயர்நிலைப் பாடசாலையில் நேற்றுக் காலை ஏற்பட்ட தீ விபத்தில் சுமார் 80 மாணவிகள் பலியானார்கள்; ஏராளமானோர் காயமுற்றனர். காயமுற்றவர்கள் அருகிலுள்ள அரச மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் பள்ளியின் வகுப்பறை ஒன்றில் திடீரென்று தீப்பிடித்தது. இந்தத் தீ மற்ற வகுப்பறைகளுக்கும் பரவியது. தீப்பிடித்ததைப் பார்த்ததும் ஆசிரியர்களும், மாணவிகளும் வகுப்பறையில் இருந்து அலறி அடித்துக்கொண்டு வெளியே ஓடி வரத் தொடங்கினார்கள்.

இருப்பினும், சில வகுப்பறைகள் தீயில் எரிந்து அப்படியே விழுந்து மாணவிகளை அமுக்கியது. இதில் ஏராளமான மாணவிகள் உடல் கருகிப் பரிதாபமாக இறந்தனர்.

தீ விபத்துக் குறித்து கும்பகோணம், பாபநாசம், திருவிடைமருதூர், தஞ்சாவூர் ஆகிய தீயணைப்பு நிலையங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து தீயை அணைத்தனர்.

பின்னர் வகுப்பறைகளில் உயிருக்குப் போராடிக்கொண்டு இருந்த மாணவிகளை மீட்டு சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மற்றும் வான்களில் கும்பகோணம் அரச ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர்களுக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டுவருகிறது.

தீ விபத்துப் பற்றிக் கேள்விப்பட்டதும் மாணவிகளின் பெற்றோர்கள் பதறித் துடித்துக்கொண்டு பள்ளிக்கு ஓடிவந்தனர்.

பள்ளிக்கூட வகுப்பறைகள் தீப்பற்றி எரிவதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர். மாணவிகளைக் காப்பாற்ற வகுப்பறைக்குள் சிலர் செல்ல முயன்றனர். தீ கொளுந்துவிட்டு எரிந்ததால் அவர்களால் வகுப்பறைக்குச் சென்று மாணவிகளைக் காப்பாற்ற முடியவில்லை.

தீயணைப்பு வீரர்கள் சில மணிநேரம் போராடித் தீயை அணைத்தனர். அப்போது வகுப்பறைகளில் ஏராளமான மாணவிகள் உடல்கருகி கரிக்கட்டையாகிக் கிடந்தனர். உடல்கள் அடையாளம் தெரியாத அளவுக்கு இருந்தன.

பொலீஸாரும் தீயணைப்புப் படையினரும் தீயில் கருகி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த மாணவிகளை மீட்டு உடனுக்குடன் அந்த வழியாக வந்த வாகனங்களில் அரச ஆஸ்பத்திரிக்கும், தனியார் ஆஸ்பத்திரிக்கும் அனுப்பி வைத்தனர்.

ஆஸ்பத்திரியிலும் சிகிச்சை பலனின்றி ஏராளமான மாணவிகள் இறந்தனர்.

சத்துணவுக் கூடத்தில் சமையல் செய்து கொண்டிருந்தபோது அதில் இருந்து பறந்த தீப்பொறி காரணமாக இந்தத் தீ விபத்து ஏற்பட்டதாகத் தெரிகிறது.

தீ விபத்துப்பற்றி அறிந்ததும் தஞ்சை மாவட்ட கலெக்டர் ராதாகிருஷ்ணன், மாவட்ட பொலீஸ் அதிகாரி ராஜேந்திரன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்துவந்தனர்.

மீட்பு நடடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அவர்கள் உத்தரவிட்டனர். பின்னர் கலெக்டர் ராதாகிருஷ்ணன் கும்பகோணம் அரச ஆஸ்பத்திரிக்குச் சென்று சிகிச்சை பெறும் மாணவிகளைப் பார்த்து அவர்களின் பெற்றோருக்கு ஆறுதல் கூறினார். தீவிர சிகிச்சை அளிக்குமாறு டாக்டர்களை கேட்டுக் கொண்டார். (8)

## எயிட்ஸ் மாநாட்டில் பங்கேற்க சோனியா காந்தி பாங்கொக் சென்றார்

பாங்கொக்,ஜூலை17

தாய்லாந்தில் நடந்துவரும் சர்வதேச எய்ட்ஸ் மாநாட்டில் பங்கேற்க காங்கிரஸ் தலைவரும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவருமான சோனியா காந்தி கடந்த வியாழக்கிழமை காலை பாங்கொக் சென்றார்.

மாநாட்டின் நிறைவு விழா நேற்று நடைபெற்றது. இதில் சோனியா காந்தி பங்கேற்று உரையாற்றினார்.

தனது இரண்டு நாள் பயணத்தின்போது தாய்லாந்து அதிபர் தக்ஷின ஷினவத்ரா, வெளியுறவுத்துறை அமைச்சர் சுரகியட், தென்னாபிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா ஆகியோரையும் சந்தித்தார். (8)

## இரகசியத் தகவல் காணாமற்போனதையடுத்து அணு ஆய்வு நிலையத்தை மூடியது அமெரிக்கா

நியூயோர்க்,ஜூலை17

அமெரிக்காவின் மிகப்பெரிய அணு ஆயுத ஆராட்சி ஆய்வு நிலையம் ஒன்றிலிருந்து முக்கிய இரகசியத் தகவல் காணாமற்போனதையடுத்து அந்த ஆய்வு நிலையச் செயற்பாடுகள் அனைத்தும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

நியூமெக்ஸிக்கோவிலுள்ள லொஸ் அல்மோஸ் தேசிய ஆய்வு நிலையத்திலிருந்து காணாமற்போயுள்ள இரகசியத் தகவல் என்னவென்று அதிகாரிகள் கூற மறுத்துள்ள போதிலும் அவை மிகவும் முக்கியமானவை என்று கருதப்படுகின்றது.


நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் காட்டுத்தீ மூண்டு ஆய்வு நிலையத்துக்கு அருகில் வந்ததையடுத்தும் இந்த ஆய்வுநிலையம் மூடப்பட்டது.

முதலாவது அணுகுண்டு பிறந்த இடமான இங்கு பலதடவைகள் பாதுகாப்புப் பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

கடந்த ஆண்டு களவுகள், ஊழல்கள் பற்றிய முறைப்பாடுகளை அடுத்து ஆய்வு நிலையத்தின் தலைவர் ஜோன் பிரஹண் ராஜினாமாச் செய்திருந்தார்.


நியூ மெக்சிக்கோவிலுள்ள அமெரிக்காவின் முக்கிய ஆய்வு மையங்களான சண்டியா, லொஸ அல்மோஸ் மற்றும் கலிபோர்னியோவிலுள்ள லோறன்ஸ் லிவர்மோர் ஆகியவற்றில் திறப்புக் கோர்வைகள், ஆய்வு மேடைகள், வான்கள் மற்றும் புருட்டோனியம் ஒக்சைட் போன்றவை முன்னர் காணாமற்போயிருந்தன.

ஆனால், புள்ளிவிவரங்கள் அடங்கிய விவரக் கொத்துகள் எதுவும் முன்னர் காணாமற்




போனதாகப் புகார் இல்லை. ஆயுத பௌதிகப் பணிப்பகத்திலிருந்து கடந்த வாரம் ஒளி நாடாக்கள் காணாமற்போயிருப்பதாகத் தெரிய வந்துள்ளது இதுவே முதல் தடவை.

காணாமற்போயுள்ள முக்கிய விவரக் கொத்து என்னவென்பது இன்னமும் தெரியவில்லை. கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டமான காரியம் என்று அதிகாரிகள் கூறுகின்றார்கள். (ப-8)



பிரான்ஸ் நாட்டில் முடியாட்சி ஒழிந்து குடியாட்சி மலர்ந்த தினத்தை நினைவு கூரும் வகையில் கடந்த 14ஆம் திகதி கோலாகல விழா நடைபெற்றது. பாரிஸில் ஈபிள் கோபுரதத்துக்கு அருகே வண்ணமயமான வாண வேடிக்கை நிகழ்ச்சிகள் நடந்தன. அந்தக் காட்சிதான் இது.

## அல் கெய்டாத் தலைவர்கள் சிலர் ஈராக்கியப் பொலீஸாரினால் கைது

ஈராக்கில் அல் கெய்டாத் தீவிரவாத அமைபைச் சேர்ந்த தலைவர்கள் சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என அந்நாட்டுப் பிரதமர் இயாத அல்லவி கூறியுள்ளார்.

இது தொடர்பாக, அல் ஹயாத் என்ற பத்திரிகையில் அளித்த பேட்டியில் இயாத் அல்லவி கூறியிருப்பதாவது:-

ஈராக்கில் இந்த வாரம் பொலீஸார் சோதனை மேற்கொண்டனர்; 300 பேரைக் கைது செய்தனர். அவர்களில் ஒரு சிலர், அல் கெய்டாத் தீவிரவாத அமைப்பின் தலைவர்கள். அவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வெளிநாடுகளில் உள்ள முன்னாள் அதிபர் சதாமின் ஆதரவாளர்கள், ஈராக்கில் நடக்கும் சதித் திட்டங்களுக்கு நிதியுதவி செய்கின்றனர்.

அல் கெய்டாத் தீவிரவாதிகளுக்கும் சதாம் ஆதரவாளர்களுக்கும் இடையிலான ஒத்துழைபபும் அதிகரித்துள்ளது. உதாரணத்துக்கு, சர்காவியைக் கூறலாம். ஜோர்டான் நாட்டைச் சேர்நத தீவிரவாதியான இவர், அல் கெய்டாவுடன் தொடாபுடையவர். ஈராக்கில் நடக்கும் பல தாக்குதல்களுக்கு இவர்தான் காரணம் - என்றார். (8)

## தீவிரவாதிகளின் மிரட்டலுக்கு பணிந்தது சவூதி நிறுவனம்

ரியாத்,ஜூலை17

எகிப்திய பிணைக் கைதியை விடுவிப்பதற்காக தீவிரவாதிகளின் நிபந்தனைக்குப் பணிந்து ஈராக்கிலிருந்து வெளியேற சவூதி நிறுவனம் முடிவு செய்துள்ளது.

ஈராக்கில் உள்ள அமெரிக்கப் படைகளை வெளியேறக்கோரி அல் கெய்டாவுடன் தொடாபுடைய அபு சாப் அல் சர்காவி தீவிரவாதிகள் வெளிநாட்டினரைக் கடத்திச்சென்று தலையைத் துண்டித்து வருகின்றனர். அமெரிக்கர், தென்கொரியர், பல்கேரிய நாட்டவர் என அவர்களது கொலைப்பட்டியல் தொடர்கின்றது. இந்நிலையில், சவூதி அரேபிய நிறுவனத்தில் வேலை பார்த்துவந்த எகிப்து நாட்டுச்சாரதி முஹமது கராபவி என்பவரைத் தீவிரவாதிகள் கடத்திச் சென்றுவிட்டனர். கடந்த 12 நாள்களுக்கு முன் சவூதியிலிருந்து எரிபொருளை ஏற்றிக்கொண்டு ஈராக் வந்த கராபவியை கடத்திச்சென்ற தீவிரவாதிகள் 10 லட்சம் டொலர் பிணைத்தொகையாகக் கேட்டுள்ளனர். அதுமட்டுமல்லாது, அவரை விடுவிக்க வேண்டுமானால் சவூதி நிறுவனம் ஈராக்கிலிருந்து 72 மணி நேரத்தில் வெளியேற வேண்டும் எனவும் எச்சரித்துள்ளனர்.

தீவிரவாதிகள் கேட்ட பெரிய தொகையைத் தூமறுத்துள்ள சவூதி நிறுவனம், 15 ஆயிரம் டொலர் தருவதாக ஒப்புக்கொண்டதோடு, தனது நிறுவனத்தைக் காலிசெய்துகொண்டு ஈராக்கை விட்டு வெளியேற முடிவு செய்துள்ளது. கடத்தப்பட்ட கராபவியை விரைவில் விடுவிக்கும்படி சவூதி நிறுவனம் தீவிரவாதிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. (8)

## எயிட்ஸ் ஒழிப்புக்கு சர்வமதக் கவுன்ஸில்

பாங்கொக்,ஜூலை16

எயிட்ஸ் ஒழிப்புப் பிரசாரத்தில் சர்வமத மற்றும் சமய நம்பிக்கையுள்ள தலைவர்கள் கொணட கவுன்ஸிலை அமைக்கத் தெற்காசிய நாடுகள் முடிவுசெய்துள்ளன.

பாங்கொக்கில் நடைபெற்ற சர்வதேச எய்ட்ஸ ஒழிப்பு மாநாட்டில் கடந்த வியாழக்கிழமை இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்தியா, ஆப்கானிஸ்தான், வங்கதேசம், பூட்டான், மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகள் இந்த எயிட்ஸ ஒழிப்புப் பிரசாரக் கவுன்ஸிலில் இடம்பெற்றுள்ளன.

இந்த நாடுகளைச் சேர்ந்த இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ, சீக்கிய, ஜைன, புத்த மற்றும் பாஹா ஆகிய மதங்களின் சமய நம்பிக்கையுள்ள பிரதிநிதிகள் எய்ட்ஸ் மற்றும் எச்.ஐ.வி. ஒழிப்புப் பிரசாரக் கவுன்ஸிலில் இடம்பெறுவர் என்று இக்கவுன்ஸிலின் இடைக்கால ஒருங்கிணைப்பாளர் அக்ரால் வாசே தெரிவித்தார்.

இந்தியாவில் உள்ள ஜாகீர் உசேன் கல்லூரி மற்றும் ஜாமியா மில்கியா, இஸ்லாமியா ஆகியவையும் இந்தக் கவுனஸிலுடன் இணைந்து செயற்படும்.

அரசு மற்றும் சார்க் நாடுகள் இடையே கலந்தாலோசனைக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்வது, மதங்களிடையே பரிந்துரை செய்தல் ஆகியவைகள் மூலம் பிரசாரம் மேற்கொள்ளவும் கவுன்ஸில் நடவடிக்கை எடுக்கும் என்றார் அக்ரால். (8)

## ஈராக், ஆப்கானில் எனது பணியை முடிக்க மீண்டும் ஒரு வாய்ப்புத் தாருங்கள்

### கோருகிறார் அமெரிக்க அதிபர் புஷ்

வாஷிங்ரன்,ஜூலை17

ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் விட்டுப்போன பணிகளை முடிக்க மீண்டும் ஒரு வாய்ப்புத் தாருங்கள் என அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் வேண்டுகோள் விடுத்தார்.

விஸ்கான்சின் மாகாணத்தில் கடநத முறை ஜோர்ஜ் புஷ் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் பின் தங்கினார். எனவே, இம்முறை அம்மாகாணத்தைக் குறிவைத்துப் பிரசாரத்தை முடுககி விட்டார். அங்கு பஸ்ஸில் பயணம் செய்த அவா ஒட்டு வாக்குக்கேட்டார்.

பிரசாரத்தில் அவர் பேசியதாவது:-

ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் ஜனநாயகத்தை நிலைநாட்ட எனக்கு மீண்டும் வாய்ப்புத் தாருங்கள். அதற்கு இன்னும் நான்கு ஆண்டுகள் தேவைப்படுகின்றன. உலகில் அமைதியை நிலைநாட்ட, அமெரிக்காவைப் பாதுகாப்பு மிகுந்த நாடாக்க இன்னும் நிறையப் பணிகளை செய்யவேண்டும் - என்றார்.

தீவிரவாதிகள் இந்த வெறிபிடித்த கொலையாளிகள். அவர்களோடு எப்போதும் 'சமரசம் செய்து கொள்ள மாட்டேன். 'ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் கிடைக்காவிட்டாலும், சதாமைப் பதவியில் இருந்து விரட்டியது சரியான நடவடிக்கையே. ஈராக்கிற்கு அமெரிக்க இராணுவம் சென்ற பிறகே, அமெரிக்கா இப்போது அமைதியாக இருக்கிறது. இவ்வாறு அதிபர் ஜோர்ஜ் புஷ் பேசினார். மிச்சிகன், மினசோட்டா ஆகிய இடங்களிலும் அவர் ஆதரவு திரட்டினார்.




ஈராக் விவகாரத்தில் புலனாய்வுத் தோல்விக்குப் பொறுப்பேற்பதாக பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் அறிவித்துள்ளார். ஆனால், அமெரிக்க அதிபர் புஷ், புலனாய்வுத் தோல்விக்குப் பொறுப்பேற்காமல் அதை நியாயப்படுத்த முயற்சிக்கிறார் என ஜனநாயகக் கட்சியினர் குற்றம் சாட்டினார்கள்.

## சின்னமடு பொதுமண்டபம் நாளை ஞாயிறன்று திறப்பு

ஊர்காவற்றுறை, சின்னமடுவில் நிறுவப்பட்ட பொது மண்டபத்தின் திறப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சின்னமடு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் நல்லான்தேவன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் அரச அதிபர் செ.பத்மநாதன் பிரதம விருந்தினராகவும் நியாப் திட்டப் பிரதித்திட்டப் பணிப்பாளர் கா.பாலகிருஷ்ணன், யாழ். மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோர் கௌரவிருந்தினர்களாகவும் தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் அதிவிருந்தினராகவும் கலந்துகொள்வார். (எ)

### நாடகங்கள்

வெ
று
வெ
வி

அ
ர
ங்
க
கு
மு

**சிவப்பு விளக்கு**

**காலனை வென்ற காரிகை**

காலம்: இன்று (17.07.2004) சனிக்கிழமை
நேரம்: காலை 10.30 மாலை 3.00
**பிரவேசம் 30/=, 50/=**

இடம்: **கைலாசபதி கலையரங்கம்,**
**யாழ். பல்கலைக்கழகம்**

(34199)(34-11-18)

விளம்பர உதவி: **சிவன் ஸ்ரோர்ஸ்**
திருநெல்வேலி.
Mr. ஜெகநாதன் - யாழ்ப்பாணம்.

## தென்மராட்சி கல்வி வலய தமிழ்த்தினப் போட்டிகள்

தென்மராட்சி,ஜூலை17

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட தமிழ்மொழித் தினப் போட்டிகள் ஜூலை மாதம் 20 ஆம் திகதியும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியும் நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளா வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

ஜூலை மாதம் 20ஆம் திகதி மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திலும், ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் போட்டிகள் நடைபெறுமெனவும் அறிவித்துள்ளார். (8-117-201)

## நூலக விழா

கொடிகாமம், ஜூலை17

சாவகச்சேரி பிரதேச சபை கச்சாய் பொது நூலகத்தின் உள்ளூராட்சி வார விழாவும் நூலக விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கச்சாய் பொது நூலக மண்டபத்தில் பிரதேச சபைச் செயலாளர் ந. பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-74)

### தவறிவிட்டது

சண்டிலிப்பாயில் இருந்து தொட்டிலடி வீதி ஊடாகவும், சுன்னாகம் - புத்தூர் வீதியூடாகவும் பருத்தித்துறை சென்றபோது எனது அலுவலக முக்கிய ஆவணங்களும் மற்றும் மோட்டார் சைக்கிளுக்கு உரிய ஆவணங்களும் அடங்கிய சிவப்பு நிற பொலீத்தீன் கைப்பை ஒன்று 16.07.2004 காலை 9.00 மணிக்கு இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொலைபேசி 222-7379 என்னும் இலக்கத்துடன் அல்லது சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அருகில்) என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

பா.குணராஜா.
இணைப்பாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்தி சமூக சேவை ஒன்றியம்.

*ஆலடிச்சந்தி,*
*மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

### வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம்

**பொன்விழா ஆண்டு**

**மாபெரும் விளையாட்டுப் போட்டி - 2004**

★ மரதன் ஓட்டம் - 10 மைல் (ஆண்கள்)
★ சைக்கிள் ஓட்டம் - 15 மைல் (ஆண்கள்)
★ கயிறு இழுத்தல் - (குழு - ஏழு நபர்கள்)
★ வினோத உடை - தனிநபர்/குழு

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களுடைய விண்ணப்பங்களை 23.07.2004 வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக நேரடியாகவோ அல்லது தபால்மூலமாகவோ செயலாளர், நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம், வல்வெட்டித்துறை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர், நெடியகாடு,
இளைஞர் விளையாட்டுக்கழகம்,
வல்வெட்டித்துறை.

(34203)(34-11-18)

## கண்ணீர் அஞ்சலி

முன்னாள் யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பணிப்பாளர்

அமரர் **வேலுப்பிள்ளை மார்க்கண்டேயபிள்ளை**

அவர்கள் காலமான செய்திகேட்டு பேரதிர்ச்சி அடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மா.சி.க.வ.கூ. சங்கம்,
சமாசப் பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.

(சி-36030) (24-11-18)

# கேள்வி அறிவித்தல்

## வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரினால் 2004 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே முற்பகல 10.30 மணிக்கு திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| தொ. இல. | பாடசாலையின் பெயரும் வேலை விவரமும் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 1. | யா/விக்ரோறியாக் கல்லூரி மாடிக்கட்டடத் தொடர்வேலை (மீள்கேள்வி) | 500/= | 14,000/= |
| II. | யா/இணுவில் மத்திய கல்லூரி மாடிக்கட்டடத் தொடர்வேலை (மீள்கேள்வி) | 500/= | 12,000/= |
| III. | யா/மானிப்பாய் சென்ற். ஆன்ஸ் றோ. க. மாடிக்கட்டடத் தொடர்வேலை 80'x25' (மீள்கேள்வி) | 750/= | 25,000/= |
| IV | யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி | | |
| | அ) வகுப்பறையும் விடுதியும் திருத்தல் | 500/= | 17,500/= |
| | ஆ) வகுப்பறை திருத்தல் | 500/= | 12,500/= |

01. அ. மேற்படி வேலைக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தின் 08ஆம், அதற்கு மேற்பட்ட தரத்திற்கும் பதிவு செய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்களாவர்.
    ஆ. பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தங்களால் இவ்வேலையைச் செய்து முடிக்க முடியுமானால் தங்கள் பாடசாலைக்குரிய கேள்விப்பத்திரங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம். பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு முதலாம் பந்தி அ இல் குறிப்பிட்ட சட்டதிட்டமும் மீளளிக்கக்கூடிய, மீளளிக்கமுடியாத வைப்புப் பணமும் விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.
02. கேள்விப்பத்திரங்களில் பெறுமதி சேர்வரி (VAT) 15% சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை பெறுமதிசேர்வரி (VAT) 15% சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.
03. மேற்படி வேலைக்கான கேள்விப்பணத்தை வலிகாமம் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக்கணக்கில் வைப்புச் செய்து அல்லது இக்காரியாலத்தில் நேரடியாகச் செலுத்தி 19-07-2004 ஆம் திகதியிலிருந்து 23-07-2004 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வலிகாமம் கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில் பொறியியலாளரிடம் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
04. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப்பிரதியும், எம்மால் வழங்கப்படும ஒப்பந்த நிபந்தனைப்படிவமும் கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும், கேள்விப்பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும் தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இருபிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு ஒப்பநததாரரின் முத்திரை இடப்பட்டு மருதனார்மடத்தில் உள்ள வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2004ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப.10.00 மணிக்கு முன்னர் இடப்படல்வேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்கு பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
05. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் தெரிவு செய்யப்படும் திகதியிலிருந்து 3மாத காலத்திற்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்தி செய்து கையளிக்க வேண்டும். எதுவித கால தாமதங்களும ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சரியாக நிரப்பப்படாத பிழைகள் கூடிய தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களையும் பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**திருமதி ஜெ.இருதயநாதன்,**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**வலிகாமம்.**

*மருதனார் மடம்,*
*சுன்னாகம்,*
*2004-07-16*

(C/36006)(29-11-18)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஆறுமுகம் மனோன்மணி

(மணற்பகுதி, புத்தூர்)



வடமராட்சி, வதிரியைப் பிறப்பிடமாகவும் புத்தூர் மணற்பகுதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் மனோன்மணி அவர்கள் 15.07.2004 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஆறுமுகத்தின் பாசமிகு மனைவியும சிவப்பிரகாசம் (அமரர்), பீதாம்பரம் (அமரர்), சதாசிவம் ஆகியோரின் மருமகளும் ரஞ்சனாதேவி, சுகிர்தராணி, ஸ்ரீபிரபா, ஸ்ரீநந்தினி, தர்மசோதி, ஜெகசோதி ஆகியோரின் பாசமிகு தாயாரும். புஸ்பராசா, புஸ்பகேந்திரன் ஆகியோரின் பெரிய தாயாரும் இளையகுட்டி, திருஞானசம்பந்தர், நவரட்ணம், கருணாகரன், சிவமலர், கௌரி, யோகேஸ்வரி, சிவதேவி, மங்களேஸ்வரி, பரஸ்பரசோதி, வனஸ்பதி, சசிகலா, தாரணி, சதீஸ்குமார், ராஜ்குமார் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மாணிக்கம் உருத்திராதேவி, செல்லையா (அமரர்), சின்னத்தம்பி (அமரர்) ஆகியோரின் மைத்துனியும் வடிவேலு (அமரர்), பர்வதம் (அமரர்), செல்லக்கண்டு ஆகியோரின் சகோதரியும் நிர்மலன், சாருமதி, சாரங்கன், கோகுலன், கபிலன், சிந்துஜன், சாருஜன், நிருஜன், நிருபா, சாருஜா, சயந்தா, விஷ்ணுதரன், வர்த்தினி, பிரியதர்சன், தினமதன், டினேஸ், கவிஷ்னா, ஜனந்தன், ரஜிந்தன், கோபிதன், கோபிதா, ருக்மன், மானஸா ஆகியோரின் பேர்த்தியும் லதாங்கி, அபிநயன், நர்த்தனன், தரங்கிணி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 20.07.2004 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, கவுடுதா பொது மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவுல்:
திருஞானசம்பந்தர் (G.M)

*மணற்பகுதி,*
*புத்தூர்.*

(34200)(40-11-18)

## பொன்னையா யோகலிங்கம்

(இளைப்பாறிய வைத்திய அதிகாரியும், சமாதான நீதிவானும், கொக்குவில் கிழக்கு வைரவர் சுவாமி கோயில் பரிபாலன சபைத் தலைவரும்)



கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியைச் சேர்ந்த பொன்னையா யோகலிங்கம் (13.07.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - கோவிந்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஜெயமணியின் அன்புக் கணவரும் யோகவதனி (U.K.), ஜெயந்தினி (U.K.), சுகிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான நடராசா, இராசலிங்கம், இரத்தினம், குமாரசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜயகுமார் (U.K.), சிறிகாந்தராசா (U.K.) ஆகியோரின் அன்பு மாமனாரும் கவின் - தாட்சாயினி, சியாம்சங்கர் - பிரியதாட்சாயினி, அனோஜன், வினோ, மரினோ, தர்சினி, கார்த்திகா ஆகியோரின் அன்புப் பேரனும் நிஷாரா, சாயிரன், ஜெகனியா ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.07.2004 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மாயனத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யோகவதனி (மகள்)
T.P.: 0044 2087674623 (U.K.)

*"கோவிந்த வாசா"*
*பொற்பதி வீதி,*
*கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.*
T.P.: 4590723

(34204) (24-11-18)

உதயன்

## "விநாச காலே விபரீத புத்தி"

★ 'சமாதானச் செயற்பாடுகள் தொடர்பாக அரசுக்குள்ளேயே முரண்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. இது சமாதான முன்னெடுப்புக்களை மேற்கொள்வதற்குப் பெரும் தடையாக அமைந்துள்ளது. மீண்டும் யுத்தத்தை நோக்கி நாட்டைத் தள்ளிவிடாமல் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்' - இப்படிப் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

★ சமாதானத்தின் மீது தமிழ்மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை சீர்குலைக்கும் வகையில் அரசு போருக்கான தயார்ப்படுத்தல்களில் ஈடுபட்டு வருகின்றது. அரசின் இந்தப் போக்கை வன்மையாகக் கண்டிக்கின்றோம் - என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

வடக்கு இராணுவ நிலைகளுக்குப் பாதுகாப்பு பிரதியமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க அண்மையில் விஜயம் செய்ததும் யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவத்தினருக்குப் பயிற்சி அளிப்பதில் அமெரிக்க இராணுவ அதிகாரிகள் முனைப்பாகச் செயற்படுவதும், தமிழர் தாயகப் பகுதியில் உள்ள இராணுவ நிலைகளை அரசுப் படைகள் பலப்படுத்துவதும் கூடப் போருக்கான தீவிர தயாரிப்புகளே - என்றும் மாணவர் ஒன்றியம் சுட்டிக்காட்டுகின்றது.

★ மீண்டும் ஒரு போர் ஆரம்பிக்கும் பட்சத்தில் அதற்கு முகம் கொடுப்பதற்குத் தயார் நிலையில் சிறிலங்காப் படையினர் வைக்கப்பட்டுள்ளனர் - என்று புதிய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கொட்டேகொடவும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சந்தகிரியும் தெரிவித்திருக்கின்றார்கள்.

இந்தக் கூற்றுக்களும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசின் பிரதான பங்காளிகளான ஜே.வி.பயினர் - குறிப்பாக ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ போன்றோர் கூறிவரும் கருத்துக்களும் மீண்டும் யுத்த மேகங்கள் கருக்கட்ட ஆரம்பித்திருப்பதற்குக் கட்டியம் கூறுவனவாகவே அமைந்துள்ளன.

சமாதானப் பேச்சு முன்னெடுக்கப்படுவது முடங்கித் தாமதப்பட்டாலும் ஆகக் குறைந்தது யுத்த நிறுத்தமாவது நீடிக்குமா என்பதுதான் இன்று நாட்டு மக்கள் ஆதங்கத்தோடு கேட்கும் கேள்வி. ஆனால், பதில் சந்தேகத்துக்குரியதாக இருப்பதே உண்மை.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குள் ஏற்பட்ட தனிமனிதப் பிறழ்வான கருணா விவகாரத்தை அரசும், அரசுப்படைகளும் கையாண்ட - கையாண்டு வருகின்ற - முறையானது, இனப்பிரச்சினைக்கு இணக்க வழியில் தீர்வுகாணும் உள்நோக்கம் அரசுக்கு இல்லை என்பதைத் தெளிவுபடுத்தப் போதுமானது.

ஒருபுறம் அமைதி, சமாதானம், பிணக்குக்கு இணக்க வழியில் நிரந்தரத் தீர்வு என்றெல்லாம் பேசிக்கொண்டு, மறுபுறம் பெரும் போர் ஒன்றுக்கு நாட்டைத் தயார் செய்து, அதைத் தமிழர்களின் மீது தொடுத்து, அவர்களின் விடுதலைப் போராட்டத்தை அடியோடு அழித்து ஒழித்துவிட்டு, தாம் விரும்பிய ஓர் அரசியல் முறையைத் தமிழர் மீது திணிப்பதே சிங்களப் பேரினவாதத்தின் தந்திரோபாயமாக - உத்தியாக - இருந்து வருகின்றது என்பது இப்போது அம்பலமாகத் தொடங்கிவிட்டது.

யுத்த நிறுத்தத்தைப் பேணுவதிலும் அமைதி முறையில் - சமாதான வழியில் - இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதிலும் தனக்குள்ள பற்றுறுதியைத் தமிழர் தரப்பு மீண்டும், மீண்டும் வலியுறுத்தி வருகின்றது. எத்தகைய ஆத்திரமூட்டலுக்குப் பின்னரும் - போர் ஒன்றை வலிந்து திணிப்பதற்கான ஏற்பாடுகளை சிங்களத் தரப்பு தம்மீது சுமத்தி வருகின்ற போதிலும் - தமிழர் தரப்பு தொடர்ந்து அமைதி பேணி வருகின்றது. யுத்தத்துக்குப் போவதில்லை என்பதை தொடர்ச்சியாக - விடாப்பிடியாக - வெளிக்காட்டி வருகின்றது.

தமிழர் தரப்பின் இந்தப் பொறுமைசாலித்தனமான நிலைப்பாட்டை அவர்களது பலவீனமாகக் கருத, அல்லது தமக்குச் சாதகமான அம்சமாக மாற்ற, சிங்களத் தரப்பு முனைவதையே இன்றைய செயற்பாடுகள் உணர்த்துகின்றன.

அரசுத் தரப்பினதும் படைத்தரப்பினதும் செயற்பாடுகள் மற்றும் போக்குகள் தொடர்பான தமிழர் தரப்பின் அதிருப்தி மற்றும் அந்நடவடிக்கைகள் ஏற்படுத்தக்கூடிய விபரீத விளைவுகள் பற்றி எச்சரிக்கை போன்றவை அரசுத் தரப்புக்கு இன்னமும் சரியான முறையில் உணர்த்தப்படவில்லையோ - உறைக்கும் விதத்தில் உரைக்கப்படவில்லையோ - என்ற சந்தேகம் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருப்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியதாக இருக்கின்றது.

இந்த எச்சரிக்கைகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுக்காமல் அரசு காட்டும் மெத்தனம் அத்தகைய சந்தேகத்தைத்தான் வலுப்படுத்தி வருகின்றது.

சில சமயங்களில் அவை உணர்த்தப்பட்டும், "விநாச காலே விபரீத புத்தி" என்ற நிலையில் அரசுத் தரப்பு மெத்தனமாக நடந்துகொள்கின்றதோ என்னவோ... இது நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லதல்ல. மீண்டும் நாசத்துக்கே வழிசமைக்கும்.

# வடக்கு - கிழக்கில் 'யுனிசெவ்' திட்டங்கள் மாவட்ட மட்டத்தில் மீளாய்வு செய்யப்படும்

வடக்கு - கிழக்கில் 'யுனிசெவ்' அமைப்பினால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களை மாவட்ட மட்டத்தில் மீளாய்வு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலையில் கடந்த வாரம் நடந்த கூட்டம் ஒன்றில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டது.

'யுனிசெவ்' அமைப்பு 2002 ஆம் ஆண்டுமுதல் ஐந்தாண்டு திட்டம் ஒன்றை வடக்கு - கிழக்கில் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இரண்டரை வருடங்கள் கடந்த நிலையில் அத்திட்டங்களின் பலன் குறித்து ஆய்வு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டங்கள் மக்களுக்கு மறுவாழ்வு வழங்கும் வகையில் அமைந்துள்ளனவா? அவற்றினால் மக்கள் பயன் அடைகிறார்களா? தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப திட்டங்களில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமா? என்பன குறித்து மீளாய்வு செய்யப்படவிருக்கின்றது.

மாவட்ட மட்டத்தில் அந்த மாவட்ட அரச அதிபர்கள் மூலமாக அந்த ஆய்வு மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

பிரதேச செயலர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் மூலம் இந்த ஆய்வை அரச அதிபர்கள் மேற்கொள்வர். (ஐ-3)

# சட்டவிரோத மதுபான நிலையங்களை மூடும்படி நீதிமன்றம் கடும் உத்தரவு

யாழ்ப்பாணம்,ஜூலை17

யாழ்.நகரிலும் அதனை அண்டியுள்ள பகுதிகளிலும் சட்டவிரோதமாக இயங்கும் மதுபான நிலையங்களை மூட நடவடிக்கை எடுக்கும்படி யாழ்.நீதிமன்றம் பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

நகரப் பகுதியில் அனுமதிபெற்ற ஆறு மதுபான நிலையங்கள் செயற்படுகின்றன என்றும் -

பாவனையாளர்களது தேவைக்கு அவை போதுமானவை என மதிப்பிடப் பட்டுள்ளது என்றும் -

நீதிமன்றம் கருதுகின்றது.

எனவே, சட்டவிரோதமாக இயங்கும் மதுபான நிலையங்களை மூட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொலீஸாருக்கு விடுத்துள்ள உத்தரவில் யாழ். நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

சட்டவிரோதமாக மதுபான நிலையங்கள் செயற்படுவதால் குற்றச்செயல்கள் அதிகரிக்கின்றன எனக் கண்டறியப்பட்டுள்ளது என்றும் நீதிமன்றம் கூறுகின்றது.

இந்த உத்தரவைக் கடுமையாக நடைமுறைப்படுத்தும்படி பொலீஸாருக்கு யாழ். நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. (ஐ-3)

# 'தாயகம்' சிறுவர் வாழ்வகத்தின் ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை17

கோண்டாவில் பொற்பதி வீதியில் இயங்கும் 'தாயகம்' சிறுவர் வாழ்வகம் நாளை ஞாயிற்றுக்கிழமை நாலாவது ஆண்டில் காலடி வைக்கின்றது.

இதையொட்டி விசேட நிகழ்வுகள் அன்று பிற்பகல் 4மணிக்கு தாயகம் இல்லத்தில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு வாழ்வகத்தின் வளர்ச்சிக்கு உதவுமாறு தாயக நிறுவன நிர்வாகியான செ.வீ.சிறீதரன் பல்வேறு தரப்பினரிடமும் கோரியுள்ளார்.

60 இற்கு மேற்பட்ட சிறுவர்கள் தங்கியுள்ள இந்த இல்லத்தை விரிவுபடுத்துவதற்காக இராசபாதை வீதியில் 40 பரப்புக் காணியில் கட்டடம் ஒன்று தற்சமயம் நிறுவப்பட்டு வருகின்றது என்றும் - சிறீதரன் தெரிவித்தார். (எ-3)

# கல்வி அமைச்சின் தமிழ் இலக்கிய விழா ஒக்ரோபரில் யாழ்ப்பாணத்தில் நடக்கும்

யாழ்ப்பாணம்,ஜூலை17

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் வருடந்தோறும் நடத்தப்படும் தமிழ் இலக்கிய விழா எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 8 ஆம் திகதிமுதல் 3 நாள்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி விழாவின் முன்னேற்பாடுகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்று யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி என். ஸ்ரீதேவி, யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் மற்றும் நல்லூர், சண்டிலிப்பாய் பிரதேச செயலகங்களின் உதவிப் பிரதேச செயலர்கள், கல்லூரி அதிபர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் தலைமை உரை நிகழ்த்திய மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தமது உரையில்:-

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் பண்பாட்டு அடையாளங்களைப் பேணும் வகையிலும், அவற்றை இளைய தலைமுறையினருக்கு எடுத்துக்கூறும் வகையிலும் தமிழ் இலக்கியவிழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆய்வரங்கம், பண்பாட்டு ஊர்வலம், நூல் கண்காட்சி, கலை நிகழ்வு என்பன தமிழ் இலக்கிய விழாவின் சிறப்பு நிகழ்வுகளாக இடம்பெறும். எழுத்தாளர்கள், கலைஞர்கள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் ஒன்றிணைந்து தமிழ் இலக்கிய விழா சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார்.

தமிழ் இலக்கிய விழாவின் ஒழுங்குகள மற்றும் அதன் நடைமுறைகள் தொடர்பான விவரங்களை வடக்கு - கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி என். ஸ்ரீதேவி தெரிவித்தார். தொடர்ந்து தமிழ் இலக்கிய விழாவிறகான ஏற்பாடுகளைச் செய்வதற்கென பலவேறு குழுக்கள் நியமனம் செய்யப்பட்டன. (எ)

# பால் சேகரிப்புப் பணிகளுக்கு உதவ கூட்டுறவுச் சங்கத்துக்கு வாகனங்கள்





யாழ்ப்பாணம், ஜூலை17

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் பால் சேகரிப்பும் பதனிடலும் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்குப் பால் சேகரிப்பு மற்றும் விநியோகப் பணிகளுக்காக ஒன்பது லட்சம் ரூபா பெறுமதியுடைய 4 முச்சக்கரவண்டிகளும் 4 மோட்டார்சைக்கிளும் அண்மையில் வழங்கப்பட்டன. இவை சங்கத்தின் பால் சேகரிப்பு மற்றும் விநியோகப் பணிகளை வினைத்திறனுடன் மேற்கொள்ள பேருதவியாக அமையும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் ரூபா 5.2 மில்லியனுக்கு மேற்பட்ட பெறுமதியுடையதும் நவீன முறையில் பாலை பதப்படுத்தவும் குளிரூட்டி சேகரிக்கவும் கூடிய உபகரணத் தொகுதி ஒன்று திருநெல்வேலியில் அமைந்துள்ள இச்சங்கத்தின் பாற்பொருள் உற்பத்தி தொழிற்சாலையில நிறுவப்படவுள்ளது. யாழ். மாவட்டத்தில் இவ்வாறான நவீன பால் பதனிடல் வசதிகள் ஏற்படுத்தப்படுவது இதுவே முதல் முறையாகும். இதன்மூலம் யாழ்.மாவட்ட அபிவிருத்திச் சங்கத்தின் பால் உற்பத்தி அளவு மற்றும் தரம் அதிகரிப்பதுடன் உள்ளூர் கால்நடை வளர்ப்பாளர்களும் பெரும் நன்மை அடைய உள்ளனர். இது தவிர சங்கத்தின் செயற்திறனை விருத்தி செய்யும் நோக்கில் கணனித் தொகுதி ஒன்று வழங்கப்பட்டுள்ளது. சங்க ஊழியர்களுக்குப் கணனிப் பயிற்சியும் வழங்கப்படுகிறது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தால் 6.7 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்படும் இத்திட்டம் யாழ்.மாவட்ட பால் உற்பத்தி மற்றும் பால் சந்தைப்படுத்தலை மேம்படுத்துவதுடன் உள்ளூர் பால் உற்பத்திப் பொருள்களின் போட்டித் தன்மையும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் கனேடிய சர்வதேச அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படுகிறது.

### நாளை

ஆடி 03
ஞாயிற்றுக்கிழமை
(18.07.2004)
திதி : பிரதமை
இரவு 6.50 வரை.
நட்சத்திரம்: பூசம்
இரவு 11.56 வரை.
சுபநேரம்: 9.01 - 10.31
ராகுகாலம்: 4.31 - 6.01
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

இந்த உலகிலுள்ள எல்லாவற்றையும் நேசி; பிறருக்காக வாழ்; நீ எப்போதும் மகிழ்ச்சி உள்ளவனாக இருப்பாய்.

## பிற்போடப்பட்டுள்ளது

கொடிகாமம் பெரியதம்பிரான் ஆலயக் கட்டட நிதிக்காக இன்று 17.07.2004 இல் அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பானது தவிர்க்கமுடியாத காரணங்களினால் எதிர்வரும் 20.08.2004 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

பெரியதம்பிரான் ஆலயம், - ஆலய நிர்வாகிகள்.
கொடிகாமம். (34185) (40-14-12-24)

## சமூகக்கல்வி பொது அறிவுப் போட்டி

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலயமட்ட சமூகக்கல்வி பொது அறிவுப் போட்டிகள் எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ளன.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை, கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம், மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம் ஆகிய நிலையங்களில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன. (ஐ-201)

## விண்ணகம் பறந்துவிட்ட ஜோடிச்சின்னங்கள்

45 ஆம் நாள் 92 ஆம் நாள்

### நினைவலைகள்



அமரர் முருகர் நாகலிங்கம்
(சமாதான நீதிவான்)



திருமதி
நாகலிங்கம் சின்னப்பிள்ளை

| | | |
|---|---|---|
| 1922-01-24 ← | மண்ணகம் | → 1924-06-09 |
| 2004-06-03 ← | விண்ணகம் | → 2004-04-17 |

எங்கள் குடும்ப குலவிளக்குகளே! ஆருயிர்த் தெய்வங்களே!
பாசதீபங்களே! நேச ஊற்றுக்களே! எங்கள் கண்களில்
கசிகின்ற கண்ணீரிலும் உங்கள் முகமே தெரிகின்றன
கனக்கின்ற இதயத்திலும் உங்கள் நினைவே உள்ளன
மண்ணக ஜோடிகள் விண்ணகத்திலும் ஜோடிகளா?
உங்களிருவரின் பாசம் நேசம்தான் என்னே!

எமது அன்புத் தெய்வங்களின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

"கமலாசனம்"
ஏழாலை தெற்கு, ஏழாலை.
(34188)(34-14-12-24)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

**WE APOLOGISE TO PARENTS AND STUDENTS FOR THE WRONG DATE GIVEN IN THE JULY 4TH ADVERTISEMENT**

ASARIM

UNIVERSITY OF LONDON DEGREES
STUDY IN COLOMBO
GO TO LONDON AFTER YEAR 1 FOR BSc CIS
GUARANTEED JOBS FOR GRADUATES
FREE PERSONAL DEVELOPMENT PROGRAM
INDIVIDUAL GUIDANCE AND CARE FOR ALL STUDENTS
TOP CLASS FACULTY
INSTITUTE HEADED BY HARVARD SCHOLAR

ASARIM, Aquinas South Asian Regional Institute of Management, a specialized institute within 50 year old Aquinas College of Higher Studies in Colombo offers lectures for University of London degree courses. If you have sat for A/L exams and are awaiting results or have passed A/L or higher exams or have other Certificates or Diplomas, and have Rs. 140,000 to start a 3-year degree program, You are cordially invited for an

INFORMATION EVENING AT CENTRAL COLLEGE, JAFFNA ON SUNDAY 18TH JULY 2004 AT 4:00 PM

Degrees offered: BSc Banking & Finance, BSc Accounting & Finance, BSc Business, BSc Information Systems & Management, BSc Computing & Information Systems, BSc Economics & LLB

Aquinas South Asian Regional Institute of Management
990, Maradana Road, Colombo 8
Phone: 4611150-1 E-mail: admin@asarim.org

**ASARIM**
Aquinas South Asian Regional Institute of Management
990, Maradana Road, Colombo 08.
Tel. 4611150, 4611151 Email: admin@asarim.org
Web: www.asarim.org

## பணிநிலை வேண்டுகை

யாழ். மாவட்டத்தின் சந்தைகளுக்கான வரி அறவீட்டாளர் பணிநிலைக்கு ஆண்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. எனவே, சந்தைகளில் பணிபுரிய விரும்புவோர் தன் வரலாறு அடங்கிய விளக்கங்களுடன் 2004.07.22 ஆம் நாள் வியாழக்கிழமை நடைபெறவுள்ள நேர்முகத் தேர்வுக்குச் சமுகந்தருமாறு வேண்டுகின்றோம்.

**பணிநிலை: வரி அறவீட்டாளர்**

**தகைமைகள்:**

01. தமிழ், கணிதம் உட்பட க.பொ.த. சாதாரண தரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.
02. அகவை 18-35இற்குள் இருத்தல் வேண்டும்.

**நேர்முகத் தேர்வு நடைபெறும்**

நாள்: 2004.07.22 வியாழக்கிழமை
நேரம்: காலை 10.00 மணி
இடம்: 27, ஆடியபாதம் வீதி, கொக்குவில்.

குறிப்பு: நேர்முகத் தேர்வுக்கு வரும்போது பின்வரும் ஆவணங்களுடன் சமுகமளிக்கவும்.

1) கல்விச் சான்று
2) தேசிய அடையாள அட்டை
3) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
4) மேலதிக தகைமைச் சான்றுகள்

ஆளுகை, சந்தைப் பகுதி,
யாழ். மாவட்டம்.

(34184) (24-12-14)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினரான
ஓய்வுபெற்ற ஆரம்பப் பிரிவு தலைமை ஆசிரியர்
செல்வி **M.M.சின்னப்பு**

அவர்கள் 15.07.2004 அன்று இயற்கையெய்தியதையிட்டு நாம் மிகவும் வேதனையும் அதிர்ச்சியும் அடைகின்றோம். அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், பிரிவால் துயருறும் தாயார் மற்றும் உறவினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

ஆசிரியர் சங்கம்,
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
(34186) (24-12-14)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆரம்பப் பிரிவு
தலைமை ஆசிரியர்
**செல்வி M.M.சின்னப்பு**

அவர்கள் 15.07.2004 இல் இயற்கையெய்தியதையிட்டு நாம் மிகவும் துயரமடைகின்றோம்.

அன்னாரின் இழப்பால் துயருறும் தாயார் மற்றும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அமரரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/புனித பத்திரிசியார் கல்லூரி. - பத்திரிசிய குடும்பத்தினர்.
யாழ்ப்பாணம். (34187)(40-14-12-24)

## மரண அறிவித்தல்

### கந்தையா பாலசிங்கம்



பூநகரியைப் பிறப்பிடமாகவும் தலையாழியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாலசிங்கம் அவர்கள் 14.07.2004 புதன்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா தம்பதியரின் அன்பு மகனும சின்னம்மாவின் அருமைக் கணவரும் காலஞ்சென்ற ஜெகதாம்பிகை மற்றும் ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி), ஜெயானந்தி, ஜெயக்குமார் (ஜேர்மனி), ஜெயபாலன் (அமெரிக்கா), ஜெயதாசன், ஜெயப்பிரதா ஆகியோரின் அருமைத் தந்தையாரும் உதயபாலா (ஜேர்மனி), தேவராசா, சண்முகப்பிரியா, செல்வாஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரதீப் (ஜேர்மனி), அனுஷியன் (ஜேர்மனி), சுதர்சன், சுலக்சனு, சுதர்சினி, சுஜீதன், சேந்தூரியன், துளக்சிகா, கீர்த்திகா ஆகியோரின் அருமைப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.07.2004) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அச்சக ஒழுங்கை, தலையாழி.* (34130) (24-19-13)
தகவல்: பா.தாசன் (மகன்).

# மீண்டும் ஒரு போர் ஏற்பட்டால் எதிர்கொள்ளப் படையினர் தயார்!

## இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொட சொல்கிறார்



தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் ஒரு போரை ஆரம்பிக்கும் பட்சத்தில். அதற்கு முகம்கொடுப்பதற்குத் தயார் நிலையில் ஸ்ரீலங்காப் படையினர் வைக்கப்பட்டுள்ளனர் என இராணுவத் தளபதி மேஜர் லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கொட்டேகொட தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத் தளபதியாகப் புதிதாகப் பதவியேற்றுள்ள அவர் கடந்த 14 ஆம திகதி கடற்படைத் தலைமையகத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

கடற்படையினரின் மரியாதை அணிவகுப்பில் கலந்துகொண்ட அவர், கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் செய்தியாளர் மாநாடு ஒன்றையும் நடத்தினார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொடவும், கடற்படைத் தளபதி தயா சந்தகிரியும், இலங்கையில் மீண்டும் போரொன்று ஏற்படும் பட்சத்தில் அதற்கு முகம் கொடுப்பதற்கான நவீன ரக ஆயுதப் பயிற்சிகள் இலங்கைப் படைத்தரப்பினருக்கு வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய பயிற்சிகளைக் கொண்டு தரையிலும், கடலிலும் விடுதலைப் புலிகளின் தாக்குதலை முறியடிக்க முடியும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். அண்மையில் விடுதலைப் புலிகளுக்கென வெளிநாடு ஒன்றிலிருந்து கொண்டு வரப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் நவீனரகத் தொலைத் தொடர்பு கருவிகளை ஸ்ரீலங்காவின சுங்கத்துறையினர் கைப்பற்றியுள்ளனர் எனவும் கடற்படைத் தளபதி சந்தகிரி கூறியுள்ளார்.

இந்தக் கருவிகளைக் கடற்படையினரின் ஆய்வுக்கு வழங்குமாறு தாம் சுங்கத் திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் எனவும் சந்தகிரி தெரிவித்தார்.

அத்துடன், இவை நவீனரகத் தொலைத் தொடர்புக் கருவிகள் என்பதனால் கடற்படையினர் இக்கருவிகளைப் பரீட்சிப்பது சிறந்தது எனவும் இச்செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்துள்ள லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கொட்டேகொட கூறினார். (க)

# வெடிபொருள் அகற்றப்பட்ட வயல்கள் படையினரால் இன்று கையளிப்பு

தென்மராட்சி,ஜுலை17

தென்மராட்சி தெற்கு, மறவன்புலோ பகுதியில் வெடிபொருள்கள் அகற்றப்பட்ட நெல் வயல்கள் இன்று சனிக்கிழமை காலை படையினரால் பிரதேச செயலரிடம் கையளிக்கப்படவுள்ளன.

நுணாவில் மத்தி வைரவர் ஆலயத்துக்கு அருகில் புதிதாக அமைக்கப்பட்ட வீதியில் உள்ள அடைப்பு வயல் காணியில் வயல்கள் கையளிக்கும் நிகழ்வு நடைபெறுமெனப் படையினர் அறிவித்துள்ளனர்.

இந்நிகழ்வில் கலந்துகொள்ள யாழ்.அரச அதிபர், தென்மராட்சி பிரதேச செயலர், பிரதேச கமநல சேவைகள் நிலைய விவசாய போதனாசிரியர்கள், பெரும்பாக உத்தியோகத்தர்கள், நெல்வயல் உரிமையாளர்கள், விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர். (8-117)

# புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலை மீண்டும் இயங்கத் தொடங்கியது

புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலை சுமார் 14 வருடங்களின் பின் கடந்த 14 ஆம் திகதி முதல் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

தீவுப்பகுதி தெற்கு பிரதேசப் புனர்வாழ்வுக் கழகம், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜுடன் இணைந்து மேற்கொண்டு வந்த விடாமுயற்சியின் பயனாக இந்த வைத்தியசாலை மீள இயங்கத் தொடங்கியுள்ளது.

யாழ். பிராந்திய சுகாதார சேவை மாகாணப் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் இ.தெய்வேந்திரனின் பணிப்பிற்கமைய வைத்திய அதிகாரி டாக்டர் ரி.உமாபதிசிவத்தின் தலைமையின் கீழ் சுகாதாரப் பணியாளர் குழுவினர் இந்த வைத்தியசாலைச் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் இவ்வைத்தியசாலையின் அவசர புனரமைப்புப் பணிகளைச்செய்ய அப்பகுதிக் கிராம சேவை அலுவலர் சதானந்தராஜன் தலைமையிலான புங்குடுதீவு மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழுவொன்றும் அமைக்கப்பட்டு அதுசெயற்பட ஆரம்பித்துள்ளது.

இந்த அவசர புனரமைப்புப் பணிகளுக்குக் கனடா வாழ் புங்குடுதீவு மக்கள் ஒன்றியமும், சுவிஸ் வாழ் புங்குடுதீவு மக்கள் ஒன்றியமும் இணைந்து நிதி உதவி வழங்க முன்வந்துள்ளன என தீவுப்பகுதி தெற்கு பிரதேசப் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் டாக்டர் எ.பேரின்பநாதன் தெரிவித்தார். (8-15)

# பதிவாளர் அலுவலகத்தின் நடமாடும் சேவை விரைவில் தென்மராட்சியில்

யாழ். மாவட்ட பிறப்பு, இறப்பு பதிவாளர் அலுவலகத்தின் நடமாடும் சேவை ஒன்று விரைவில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நடத்தப்படவுள்ளது. தென்மராட்சிப் பிரதேசத்தில் இதுவரை பிறப்புப் பதிவுகளைச் செய்யாதவர்கள் தத்தமது பகுதிக் கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரதேசசெயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

நடமாடும் சேவை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (8-117)



கோப்பாய் ஸ்ரீ சத்திய சாயிபாபா மனிதமேம்பாட்டுக் கல்வி நிறுவனத்துக்குத் தாய்லாந்தின் பாங்கொக் ஸ்ரீ சத்திய சாயிபாபா மனிதமேம்பாட்டுப் பல்லைக்கழக உபவேந்தரும், புகழ்பெற்ற விஞ்ஞானியுமான டாக்டர் ஆல் ஓட் ஜும் சாய், அப்பல்கலைக் கழக விரிவுரையாளர் திருமதி பொறேன் பரோஸ், ஆஸ்திரேலியா ஸ்ரீ சத்திய சாயி நிறுவனத் தலைவர் திருமதி டாக்டர் பால்டால் ஆகியோர் அண்மையில் விஜயம் செய்திருந்தனர்.

அங்கு அவர்கள் கல்வி நிறுவன செயற்பாட்டாளர்களுடன் கலந்துரையாடுவதை முதலாவது படத்திலும் விருந்தினர்கள் கோப்பாய் சாயி சிறுவர் இல்ல மாணவர்களுடன் நிற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

*(படங்கள்: கோப்பாய்ச் செய்தியாளர்)*

# பொலீஸ் ஆணைக்குழுவையே இல்லாது ஒழிப்பதற்கு முயற்சி

## அரசு மீது எதிரணி சாடல்

கொழும்பு,ஜுலை17

தனிப்பட்ட அரசியல் சுய இலாபம் கருதும் சிலர் பொலீஸ் ஆணைக்குழுவையே இல்லாதொழிக்க முயற்சிக்கின்றனர். இச்செயல் அரசமைப்பையே உதாசீனப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகும். இதற்கு ஒருபோதும் இடம் கொடுக்கமுடியாது என்று எதிர்க்கட்சிகள் கூட்டாகப் போர்க்கொடி தூக்கியுள்ளன.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே எதிர்க்கட்சிகள் இதனைக் கூட்டாகத்தெரிவித்தன.

ஜனாதிபதி சந்திரிகாவின் அரசினால் கொண்டுவரப்பட்ட அரசமைப்பில் 17ஆவது திருத்தச்சட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. உட்பட அனைத்து அரசியல் கட்சிகளுமே ஆதரவளித்த நிலையிலேயே அது அங்கீகரிக்கப்பட்டது.

17ஆவது திருத்தத்தின்படியே பொலீஸ் ஆணைக்குழு, பொதுச் சேவைகள் ஆணைக்குழு, தேர்தல்ஆணைக்குழு, சுதந்திர ஊடக ஆணைக்குழு என்பன அமைக்கப்படவேண்டும்.

பொலீஸ் ஆணைக்குழுவும், பொதுச்சேவைகள் ஆணைக்குழுவும் செயற்பட ஆரம்பித்துள்ளதால் அங்கு அரசியல் தலையீடுகள் ஓரளவு குறைந்துள்ளன.

ஜே.வி.பியினரும், சில ஆளும் கட்சியினரும் சேர்ந்து பொலீஸ் ஆணைக்குழு மீது சேறு பூச ஆரம்பித்துவிட்டனர். அவற்றை ஸ்தாபித்ததில் அல்லது அவற்றின் செயற்பாட்டில் சிலகுறைபாடுகள் இருக்கலாம். அப்படி இருந்தால் அவற்றைத் திருத்தி, மேலும் சுதந்திரங்களை அவற்றுக்கு வழங்கி, அவற்றைப் பலமடையச்செய்யலாம்.

ஆனால், அரச தரப்போ தன்னுடைய தனிப்பட்ட அரசியல் குரோதங்களுக்காக - லாபங்களுக்காக - ஆணைக்குழுவையே இல்லாதொழிக்க முனைகின்றது. இதனை வரவேற்கமுடியாது.

அதேவேளை, தேர்தல்ஆணைக்குழுவுக்கு அரசமைப்புச்சபை சிபார்சு செய்தவர்களுள் ஒருவரைத் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவராக அங்கீகரிக்கவேண்டும். ஆனால், ஜனாதிபதி அதனை அங்கீகரிக்காமல் இழுத்தடித்துக் கொண்டிருக்கின்றார். இதனால், மூன்று வருடங்களுக்குமுன் ஓய்வுபெற வேண்டிய தேர்தல் ஆணையாளர் அப்பதவியிலிருந்து விடுவிக்கப்படாமல் பல சிரமங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். எனவே, ஜனாதிபதி காலம் தாழ்த்தாமல் சுதந்திரத் தேர்தல் ஆணைக்குழுவை அங்கீகரிக்கவேண்டும்.

எதிர்க்கட்சிகள் கூட்டாக இதனை நாடாளுமன்றத்தில் வலியுறுத்தும்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற மேற்படி செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. (க)

# சிறந்த உணவக உரிமையாளர்கள் ஊர்காவற்றுறையில் கௌரவிக்கப்படுவர்

## உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு

ஊர்காவற்றுறை,ஜுலை17

ஊர்காவற்றுறை பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுகாதார நடைமுறைகளைச் சிறப்பாகக் கடைபிடித்துவரும் உணவகங்களின உரிமையாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளதுடன் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்ச்சியில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் உதவியுடன் சிறப்பாக இயங்கும் உணவகங்கள் தெரிவுசெய்யப்படவுள்ளன.

ஊர்காவற்றுறை, காரைநகர், அனலைதீவு, நாரந்தனை பகுதிகளில் உள்ள உபஅலு வலக ரீதியாக இந்த மதிப்பீடுகள் நடைபெறவுள்ளதால் உணவகங்களின் உரிமையாளர்கள் இவற்றிற்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறு ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் செயலாளர் கு.கணேசலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (8-16)

# ஊடகச் சுதந்திரத்தை பாதுகாக்கும் ஆணைக்குழுவை உருவாக்க விரைவில் நாடாளுமன்றில் பிரேரணை

## எதிர்க்கட்சிகள் இணைந்து சமர்ப்பிக்கத் திட்டம்

கொழும்பு,ஜுலை17

ஊடகச் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் வகையில் சுதந்திர ஊடக ஆணைக்குழு ஒன்றை உருவாக்குவதற்கான சட்டவரைவு ஒன்று அதிவிரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

நேற்றுமுன்தினம் காலை நாடாளுமன்றத்தில் குழு அறையில் நடைபெற்ற ஊடகவியலாளர், புத்திஜீவிகள் கலந்துரையாடலின் போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிக் கூட்டணியினர் ஏற்பாடுசெய்திருந்த இக்கலந்துரையாடலில் எம்.பிக்களான எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐ.தே.கவின் கருஜெயசூரிய, மஹிந்த சமரசிங்க, இ.தொ.காவின் பிரதித் தலைவர் எம்.எஸ். செல்லச்சாமி, வி.புத்திரசிகாமணி, மலையக மக்கள் முன்னணியைச் சேர்ந்த பெ.இராதாகிருஸ்ணன், ஜாதிக ஹெலஉறுமயவின் வண. அத்துரலிய ரத்தனசீகதேரர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் என்.கே.சிவாஜிலிங்கம், ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

எதிர்க்கட்சிகளும் - புத்திஜீவிகளும், சட்டத்துறை வல்லுநர்களும் கூட்டாகச் சேர்ந்து "ஊடக சுதந்திர ஆணைக்குழு" அமைப்பது தொடர்பாகத் திருத்தச் சட்டவரைவு ஒன்றைத் தயாரித்துள்ளனர்.

இந்தச் சட்டவரைவைப் பரிசீலனைசெய்து இதில் ஏதாவது மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் செய்யப்படவேண்டுமா என்பது தொடர்பாக ஊடகங்களின் ஆசிரியர்கள் மற்றும் சுதந்திர அமைப்புகளின் அபிப்பிராயங்களையும் தாங்கள் அறிய விரும்புகிறார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

அரச ஊடகங்களான 'ரூபவாஹினி' கூட்டுதாபனம், ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம், 'லேக்கவுஸ்' பிரசுராலயம் என்பன அதிகாரத்தில் இருக்கும் அரசியல் கட்சிகளின் ஊதுகுழல்களாகவே செயற்படுகின்றன.

இது ஒரு சாபக்கேடாகவே அமைந்துள்ளது.

இவை அனைத்தும் சுதந்திரமாகச் செயற்படவேண்டும். அவற்றிற்கான தலைவர்களையும், பணிப்பாளர் சபை உறுப்பினர்களையும் அரசமைப்புச் சபையே சிபார்சு செய்யும்வகையில் ஊடகச் சுதந்திர ஆணைக்குழுத் திருத்தச் சட்டம் வரையப்பட்டுள்ளது.

எந்த ஓர் அரசியல் கட்சியினதும் தலையீடு இன்றி அரச ஊடகங்கள் சுதந்திரமாகச் செயற்படவேண்டும் என்பதற்காகவே இந்தத் திருத்தச் சட்டம் வரையப்பட்டுள்ளது. இலங்கை அரசமைப்பின் 17 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அமையவே இந்தத் திருத்த நகல்சட்டமும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் எதிர்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க அங்கு கூறினார்.

முன்பு எதிர்க்கட்சி வரிசையில் இருந்து ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருந்த ஜே.வி.பியினர் சுதந்திர ஊடக ஆணைக்குழு ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்பதை அப்போது முக்கியகோரிக்கையாக முன்வைத்துக் கோஷம் எழுப்பினர்.

உண்மையிலேயே அவர்கள் ஊடக சுதந்திரத்தை விரும்புபவர்களாக இருப்பின் எதிர்க்கட்சிகளால் முன்வைக்கப்படும் இந்தத் திருத்தச்சட்டத்திற்கு ஆதரவு வழங்கவேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார். (க)

# 102 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

## திருமதி மு.சுவாமிநாதர் (மனேச்சர்) வள்ளியம்மைப்பிள்ளை



கோப்பாய் மத்தியைச் சேர்ந்தவரான **திருமதி மு.சுவாமிநாதர் (மனேச்சர்) வள்ளியம்மைப்பிள்ளை** அவர்கள் தமது 102 ஆவது பிறந்த தினத்தை தமது இல்லத்தில் அமைதியாகக் கொண்டாடுகிறார்.

இவரை அவரது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்லாண்டு நீடூழி வாழ்க என்று மனமார வாழ்த்துகின்றார்கள்.

முதலியார் வளவு, கோப்பாய். - குடும்பத்தினர்.

(34049) (40-13-30)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| மண் உலகத்திற்கு | விண் உலகத்திற்கு |
|---|---|
| 25 - 12 - 1926 | 17 - 06 - 2004 |

அமரர்

## செல்லையா இராசதுரை

அப்பா!

"உங்கள் வாழ்வு முடிவடையவில்லை, நீங்கள் எங்களுடன் நிலையாக வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்."

எமது அப்பாவின் மறைவுச் செய்தி கேட்டு எமக்குப் பல்வேறு வகைகளிலும் ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கும், தந்தி, கடிதங்கள் மூலம் ஆறுதல், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செய்து இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (17.07.2004) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்துக்கல்லூரி வீதி, வடலியடைப்பு. (C/36163)(43-13-30)

பிள்ளைகள்: நிதி, நஞ்சி, லவன்.

# மரண அறிவித்தல்

## V.S. சோமசுந்தரம்



(பிரபல கடுகண்ணாவை வர்த்தகர், ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ்).

கரணவாய் வடக்கு, தொற்றாவத்தை சட்டம்பியார் வளவைப் பிறப்பிடமாகக் கொண்ட V.S.சோமசுந்தரம் அவர்கள் 12.07.2004 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வரும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மருமகனும் பாக்கியத்தின் அன்புக் கணவரும் v. தியாகராஜாவின் அன்புச் சகோதரரும் திலகவதியின அன்பு மைத்துனரும் விஜயலக்சுமி (யாழ்ப்பாணம்), விஜயேந்திரன் (கனடா), விஜயமாலினி (கனடா), விஜயஜ்ஸ்மினி (நியூஸிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும் M.பரராஜசிங்கம் (ஸ்ரடிசேக்கிள்), பவானி (கனடா), S.கிருபானந்தவேல் (கனடா), B.ரமணிபாலா (நியூஸிலாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிலானி (யாழ்ப்பாணம்), லாவண்யா (கனடா), கஜனியா (கனடா), துசாரா (கனடா), ரதீசன் (கனடா), ஷன்ன் (நியூஸிலாந்து), பிருந்தன் (நியூஸிலாந்து), தனுசன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.07.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் பிறப்பிடமான கொற்றாவத்தை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊறணி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: M.பரராஜசிங்கம் (மருமகன்).

கரணவாய் வடக்கு, கொற்றாவத்தை. (34159)(40-13-14-30)

# சமய சந்நிதி

சாவகச்சேரி, டச்சு வீதி பழனி ஆண்டவர் ஆலய அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி 16 நாள்கள் தொடர்ந்து இடம்பெறும். இதில் வேல்பவனி எதிர்வரும் 31ஆம் திகதியும், தீர்த்தோற்சவம் மறுநாளும் இடம்பெறவுள்ளன.

# தமிழ்த்தினப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை17

யாழ். வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, திருக்குடும்பக் கன்னியர் மடம் ஆகிய பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல், தமிழியற்கட்டுரை எழுதுதல், இலக்கணப் போட்டி, திறனாய்வு, குறுநாடகம், கவிதை, சிறுகதை எழுதுதல் ஆகிய எழுத்துத்திறன் போட்டிகள் இப்போட்டியில் நடைபெறவுள்ளன.

வலய மட்டத்திற்கான தமிழ்த்தினப் போட்டிகள் எதிர்வரும் 31ஆம் திகதியும், அடுத்த மாதம் முதலாம் திகதியும் நடைபெறவுள்ளன. (10-6-201)

# நூல் வெளியீட்டு விழா

கொழும்புத்துறை,ஜூலை17

எழுத்தாளர் பொன்.கணேசமூர்த்தியின் 'துளித்துளி வைரங்கள்' என்னும் நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை மாலை 2.30 மணிக்கு யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (10-201-30)

# சின்னம் சூட்டும் வைபவம்

மல்லாகம் - தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்தின் 2004/2005ஆம் ஆண்டுக்கான உறுப்பினர்களுக்குச் சின்னஞ்சூட்டும் வைபவமும், முதலாவது ஆண்டு விழா நிகழ்வும் இன்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கே.கே.எஸ்.வீதி, மல்லாகத்தில் அமைந்துள்ள புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள லயன் கே.நாகராஜாவின் இல்லத்தில் நடைபெறவுள்ளன.நிகழ்வில் முன்னாள் மாவட்ட இணைப்பாளர் லயன் எஸ்.எஸ்.தங்கராஜாவும், அவரது பாரியாரும் பிரதம விருந்தினர்களாகவும், வலி. வடக்கு பிரதேச செயலர் லயன் கே.குணராசாவும் அவரது பாரியாரும் சிறப்புவிருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (10-201)

# நிர்வாகத்துறை மீளாய்வு

அரச நிர்வாகத்துறையை மீளமைப்புச் செய்யத் தீர்மானித்திருப்பதாகப் பொது நிர்வாக அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்திருக்கிறார்.

இது குறித்துத் தேசிய, சர்வதேச ரீதியில் சம்பந்தப்பட்ட குழுக்களுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது என்றும் அவர் சொன்னார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்களுக்கான மாநாட்டிலேயே அமைச்சர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அரச நிர்வாகத்துறையில் தற்போது எழுந்திருக்கின்ற சிக்கல்கள் தொடர்பாகவும் -

அதற்குத் தீர்வு காணப்படுவதற்கு அவசியமான ஆலோசனைகள் குறித்தும் - கலந்துரையாடுவதே இந்த மாநாட்டின் நோக்கம் என்றும் - அமைச்சர் கூறினார். (எ-9)

# பரிசளிப்பு விழாக்கள்

தென்மராட்சி,ஜூலை17

யாழ். கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு விளையாட்டு மைதானத்தில் அதிபர் பா.வெற்றிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். திருமதி சோதிமலர் சிவநேசன் பரிசில்களை வழங்குவார். (10-70-201)

★ ★

கரவெட்டி,ஜூலை17

கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்குக் கல்லூரி சிவபாதசுந்தரம மண்டபத்தில், அதிபர் எம்.சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவுளளது. மேற்படி விழாவில வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் பிரதமவிருந்தினராகவும், வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் கல்விப் பணிப்பாளர் கே.கந்தசாமி மற்றும் தமிழீழக் கல்விக் கழகத்தைச் சேர்ந்த கே.அருள்மாஸ்ரர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (10-201-70)

# ஐக்கிய விசேஷ ஆராதனை

"இயேசு கிறிஸ்து உங்களை நேசிக்கிறார்"

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்: கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம், இல.89 பிறவுண் வீதி, கொக்குவில்.

காலம்: 18.07.2004

நேரம்: காலை 9.30

தேவசெய்தி வழங்குபவர்: Pastor: Dauglous Croucher, Kings Church, E.P.Som, U.K.

கல்வாரிக் குடும்பம். (34117)(40-13-30)

# பரிசளிப்பு விழா

யா/விக்னேஸ்வரா கல்லூரி, கரவெட்டி.

காலம் : 17.07.2004 சனிக்கிழமை காலை 9.30 மணி

இடம் : சிவபாதசுந்தரம் மண்டபம்.

பிரதமவிருந்தினர்:

**உயர்திரு.R.தியாகலிங்கம்**

(செயலர், வ.கி.மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சு, திருகோணமலை)

சிறப்பு விருந்தினர்:

**உயர்திரு.K.கந்தசாமி**

(முன்னாள் மாகாணக் கல்விப்பணிப்பாளர்)

**உயர்திரு.K.அருள்மாஸ்டர்**

(தமிழீழ கல்விக் கழக துணைப்பொறுப்பாளர்)

அனைவரையும், அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை பழைய மாணவர் சங்கம்.

(சி-36180)(40-13-30)

# 31ஆம் நாள் நினைவும் நன்றிநவிலலும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 17 ~ 01 ~ 1917 | 17 ~ 06 ~ 2004 |

## திருமதி செல்லாச்சி கணபதிப்பிள்ளை

(உசன், மிருசுவில்)

உசன், மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி செல்லாச்சி கணபதிப்பிள்ளை அவர்களின் 31ஆம் மறைவுநாளை பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் பாசத்துடன் இன்று (17.07.2004) சனிக்கிழமை நினைவு கூருவதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

எமது குடும்பத்தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், தந்தி, தொலைபேசி மூலமும், நேரிலும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உசன், மிருசுவில். (சி-36005)(43-13-30)

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

மாதகல், சில்லாலை, சாந்தை, பண்டத்தரிப்புப் பகுதிகளிலுள்ள பொது அமைப்புகளின் வேண்டுகோளிற்கமைய மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் நடத்தும்

We Serve

# மாபெரும் இலவச பொது மருத்துவ முகாம்

காலம் : 18.07.2004 (ஞாயிறு) காலை 8.30 மணிமுதல்

இடம் : விக்னேஸ்வரா வித்தியாசாலை, மாதகல்.

## பொது மருத்துவ முகாமில் சேவையாற்றவுள்ள சிரேஷ்ட மருத்துவர்கள்

வைத்திய கலாநிதி ராஜேந்திரபிரசாத் (M.B.B.S.) (யாழ். பல்கலைக்கழகம்)

வைத்திய கலாநிதி கிருஷ்ணவேணி சிறிகிருஷ்ணன் (M.B.B.S.) (யாழ். போதனா வைத்தியசாலை)

வைத்திய கலாநிதி A.அசோக்குமார் (M.B.B.S.) (யாழ். பல்கலைக்கழகம்)

வைத்திய கலாநிதி பிரியதர்சினி பாரதிதாசன் (M.B.B.S.) (யாழ். போதனா வைத்தியசாலை)

வைத்திய கலாநிதி S.சண்முகதாஸ் (M.B.B.S.) (அரசினர் வைத்தியசாலை, மருதங்கேணி).

மருத்துவ பரிசோதனைக்கமைய மருந்துகள் யாவும் இலவசமாக வழங்கப்படும். அத்துடன் சலரோக பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு ஆலோசனையும் வழங்கப்படும்.

முக்கிய குறிப்பு:

1. இம்முகாமில் பிரபல S.M.பெனார்ந்து ஸ்தாபனத்தினரால் கண் பார்வை பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு நலிவுற்ற பார்வைக்குறைபாடுள்ளவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கப்படும்.
2. மாதகல், சில்லாலை, சாந்தை, பண்டத்தரிப்பு மற்றும் அண்டிய கிராமங்களில் வாழும் வசதி குறைந்த மக்களைப் பயன்பெறும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம்.

தலைவர்: லயன்.சி.பொன்னம்பலம். செயலாளர்: லயன் செ.சுந்தரேஷ்வரன்.

(34166)(40-13-30)

# கூத்துக் கலையை வளர்த்த கலைஞன்

நெடுந்தீவின் கலை இலக்கிய வரலாற்றின நீண்ட நெடும்பகுதி அண்ணாவியார் வேலன் மாணிக்கம் அவர்களின் கலைப்பயணத்தின் ஊடே புத்துயிர்பெற்றதெனலாம். "கலை எல்லாம் விலைபோகும் காவியமாய் ஆகாமல் மலைபோலவுள்ள மக்கள் இடர்நீக்க வேண்டும்'' எனும் மகோன்னத உணர்வலையை உள்ளத்தே கொண்டு தனது தாய் மண்ணின் கலைச் செழுமையை மங்காமல் மறையாமல் காத்து நின்ற கலைச்சிகரம் இவராவார்.



ஆயிரத்துத்தொளாயிரத்து நாற்பத்து ஏழாம் ஆண்டு ஐப்பசி மாதம் இருபத்தைந்தாம் திகதி வேலன் - பத்தினி தம்பதிகளின் மூத்த புதல்வனாகப் பிறந்த மாணிக்கம் இளமைதொட்டே கலையார்வம் உள்ளவராக

## நீத்தார் நயப்புரை

விளங்கினார். தமது இளமைக் காலங்களைச் சிறந்த அண்ணாவியாருள் ஒருவரான பேரனாருடன் கழித்தமையால் அவருடன் கூத்துக் கூடங்களுக்கும், மேடைகளுக்கும் சென்று வருவார். அந்தக் கேள்விஞானம் இவரையும் அத்துறையில் கால்பதிக்க வைத்ததெனலாம்.

அலங்காரரூபன், பூதத்தம்பி, பவளக்கொடி, காத்தவராயன் போன்ற கூத்துக்களில் சேவகனாக, இடைச்சிறுவனாக நடிக்க ஆரம்பித்த இவர் பின் பிரதான பாத்திரங்களை ஏற்று நடிக்கலுற்றார்.

1965ஆம் ஆண்டு தனது பதினெட்டாவது வயதில் அண்ணாவிக்குரிய மிடுக்குடன் 'காத்தவராயன்' கூத்தைத் துணிகரமாக மிகக் குறுகிய காலத்தில் பழக்கி நெடுந்தீவு கிழக்கு முருகன் ஆலயத்தில் தமது திருவிழாவில் மேடையேற்றிப் பலரதும் பாராட்டுக்களைப் பெற்றதாக அறியமுடிகிறது. இந்த ஊக்க மாத்திரை அவரைத் தொடர்ந்து பெருவிருட்சமாக வளர்ந்து பிரகாசிக்க வழிசெய்தது.

சிலர் தமக்குப் பிரதான பாத்திரங்களே தரப்படவேண்டும் என்பதில் பிடிவாதமாக இருப்பர். அந்தப் பாத்திரத்திற்குப் பொருத்தமற்றவர்களாக (குரல், உருவம், நடிப்பு) இருக்கும் அவர்களுக்குச் சில நாள்கள் பழகும் சந்தர்ப்பத்தைக் கொடுத்து அவர்களே விளக்கிக்கொள்ளும்படி செய்வதும், சிலருக்குக் காரணத்தை விளக்கிச சம்பந்தப்பட வைப்பதும் அண்ணாவியாரின் மதிநுட்பத்தைப் பறைசாற்றும் சம்பவங்களாகும்.

அண்ணாவியார் மாணிக்கத்தின் கூத்துக்கள் மேடையேற்றப்படும் ஒவ்வோர் சந்தர்ப்பத்திலும கிடைக்கும் மாலை மரியாதைகளுக்கும் பொன்னாடைக் கௌரவிப்புக்களுக்கும் மேலாக நெடுந்தீவு கலாசார சபையின் கௌரவிப்புக்களும் குறிப்பிடத்தக்கவை. இறுதியாகப் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம் பொன்னாடை போர்த்தி, கிரீடம் சூட்டிக் கௌரவித்தமையை அன்னாரின் குடும்பத்தினரும் நெடுந்தீவு மக்களும் நன்றியோடு நோக்குகின்றனர். அவரின் கலைப்பணிக்குக் கிடைத்த 'கிரீடம்' மட்டும் பொன்னொளி பரவ அவரது பூஜை அறையில் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றது.

**கோ.பத்மநாதன்.**

# மக்கள் முகம்



மாகாணமட்டத்தில் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட கடந்த வருடத்திற்கான ஆங்கில தினப் போட்டியில் பார்த்து எழுதுதல் போட்டியில் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த 4ஆம் தர மாணவி மிதுலாசினி விவேகானந்தன் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். (8-173)

* * *



யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம் தரம் 10 மாணவியான ஆரணி சாந்தகுமார் யாழ். மாவட்டமட்ட ஆங்கிலப் பேச்சுப் போட்டியில் தொடர்ந்து ஆறு வருடங்களாக வெற்றியீட்டி வருகிறார்.

இவர் கடந்த 5 வருடங்களாக யாழ். மாவட்டமட்டத்தில் நடைபெற்ற ஆங்கிலப் பேச்சுப்போட்டியில் தரம் 5,6,7,8,9 இல் தொடர்ந்து முதலாம் இடத்தையும் தரம் 10 இல் இரண்டாம் இடத்தையும் பெற்று மாகாணமட்டப் போட்டிகளுக்குத் தெரிவாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-30)

* * *



வட்டுக்கோட்டை மூளாய் வீதியைச் சேர்ந்த கலக் விசுவநாதன், தீவு முழுவதுக்குமான சமாதான நீதிவானாக மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் இலங்கை இராஜ்ஜிய கடற்படை மற்றும் ஓமான் கடற்படை ஆகியவற்றின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தரும் வட்டுக்கோட்டை கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன சபைத் தலைவரும் மூளாய் கூட்டுறவு வைத்திய சாலை வலி. மேற்கு இந்து ஆலயங்களின் ஒன்றியம் ஆகியவற்றின் செயலாளருமாவார். (ஜ-161)

* * *



வட்டக்கச்சி படித்த வாலிபர் திட்டத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற கிராம அலுவலர் எஸ்.எஸ். சின்னத்தம்பி யாழ். மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப்பிராமணம் செய்துகொண்டார்.

சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியை வசிப்பிடமாகக் கொண்ட இவர், சமூக சேவையாளராவார். (ஜ-173)

# நூல் வரிசை



நூல்: **மௌனதரிசனங்கள் (கவிதைத் தொகுப்பு)**
ஆசிரியர்: **வி.ஜெயபால்**
பதிப்பு: சாந்தி கணனிசார் சேவைகள்

புதுக்கவிதைக்கும் ஒரு லயம் உண்டு என்பதை இந்நாளில் புதுக்கவிதை புனைவார் உணராதிருப்பது ஒரு பெரிய சோகம். இதனால் வசனத்தை முறித்துப் போடுவது எல்லாம் கவிதையாகிவிடும் என்ற மயக்கில் இளைய தலைமுறை செயற்படுகின்றது.

இந்தப் பின்னணியிலேதான் ஜெயபாலுடைய 'மௌனதரிசனங்கள்' மதிப்பிடப்பட வேண்டும். எல்லா ஆரம்பக் கவிஞர்களும் இயற்கை எழிலைப் பாடத் தவறுவதில்லை. நமது கவிஞரும்,

*"மாலைவந்த வாடை குடையாய்*
*மரத்தைச் சாய்க்குதே*
*சோலை யூடு வந்த தென்றல்*
*சுகம் அளிக்குதே!"* என்று சிலிர்ப்படைகிறார்.

இத்தொகுதியில் உள்ள கவிதைகளுள் சொற்செட்டோடு க்விதைக்குரிய இறுக்கம் கொண்டு அமைவது 'இயற்கையிடம் கற்றது',

*"மலை முலை திறந்தது*
*சிற்றாறு ஓடியது*
*கிளை பிடித்துப் பாடியது*
*நதி கூறியது*
*பெருகி வாழ்வது வாழ்வல்ல*
*பேரின்பம் எய்துவதே இலக்கு!"*

'மௌன தரிசனங்கள்' ஓர் ஆரம்ப முயற்சி என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

**சோ.ப.**




நூல்: **கூத்தரங்கம்**
ஆசிரியர்: **ஆசிரியர் குழு**

நாடகமும் அரங்கியலுக்குமான செய்திப்பரிமாற்ற ஏடாகக் கடந்த மார்ச் மாதத்திலிருந்து வெளிவரும் கூத்தரங்கம் இதழில் 3ஆவது இதழ் வெளிவந்துள்ளது.

பிரித்தானியாவின் கோல்ட் என்சோம்பிள் நிறுவனத்தினர் யாழ்ப்பாணத்தில் மேடையேற்றிய கிறீட் நாடகப் படங்களையும், பஞ்சவர்ண நரியார் நாடகப் படங்களையும் முகப்பட்டையில் தாங்கி 16பக்கங்களில் இவ்விதழ் வெளிவந்துள்ளது. ஈழத்து மூத்த நாடகவியலாளர் குழந்தை ம.சண்முகலிங்கம் சிறுவர் அரங்கு தொடர்பாக எழுதிய கட்டுரை, மட்டக்களப்புப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் சி.மௌனகுரு நேர்காணல், கிறீட் நாடக விமர்சனம், பஞ்சவர்ண நரியார் நாடக விமர்சனம், சிறுவர் அரங்கு தொடர்பாக ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்களின் கருத்துக்கள், பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் கி.விசாகரூபனின் நாட்டார் அரங்கு தொடர்பான கருத்துக்கள் போன்ற பல விடயங்களைத் தாங்கி மூன்றாவது இதழ் வெளிவந்துள்ளது. இவ்விதழில் புதிதாகப் பதிவுகள் என்ற பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில், 1952ஆம் ஆண்டு ரேடியோ ரைம்ஸில் வெளிவந்த நாடக விளம்பரம் பிரசுரிக்கப்பட்டது.

நாடகமும் அரங்கியலும் துறை மாணவர்களுக்கும், ஆர்வலர்களுக்கும் மிகப்பயனுள்ள தான இவ்விதழ் தொடர்ந்து குறிப்பிட்ட காலத்திற்கு ஒழுங்காக வெளிவருவது மகிழ்ச்சியானது.




நூல்: **நெஞ்சுறுத்தும் கானல் (இருநாடகங்கள்)**
ஆசிரியர்: **தே.தேவானந்த்**
வெளியீடு: அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்

தேவானந்த் எழுதித் தயாரித்த "நெஞ்சுறுத்தும் கானல்" நாடக ஆற்றுகை பல்வேறு படிநிலைகளிலும் பரிசோதனைக் களநிலைகளை உருவாக்கி முகங்கொடுத்து முன்னேறிய வடிவமாக இருக்கின்றது என்று சொல்வது பொருத்தமானதாகும். இடர்நிலைகளுக்கு அரங்கச்செயற்பாடுகளூடாக முகங்கொடுப்பது என்றவகையில் செய்யப்பட்ட முயற்சிகள் சாதகமான விளைவுகள் பலவற்றையும் தந்திருக்கின்றன என்பதை அச்செயற்பாட்டுடன் நேரடி ஈடுபாட்டாளர்களாக இருந்த அனைத்துத் தரப்பினர்களினதும் அனுபவப்பதிவுகள் விதந்துரைக்கின்றன. இவற்றை 'நெஞ்சுறுத்தும் கானல்' என்கின்ற நூல் தன்னகத்தே கொண்டிருக்கின்றது. நெறியாளர், பாடலாசிரியர், நடிகர்கள், பார்த்தவர்கள் என்றவாறு அரங்க ஆற்றுகையின் நேரடித்தொடர்புபட்டோர் அனைவரும் தமது அனுபவங்களைப் பதிந்திருப்பது என்பது இந்த நூலிற்கு முழுமையான வாசிப்பை வெளிக்கொண்டு வருகின்றது. 'நெஞ்சுறுத்தும் கானல்' நாடக ஆற்றுகை, கல்விப்புலப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றபோது இருவேறு நிலைகளில் உதவுவதாக அமைகின்றது. வெடிபொருள்கள் பற்றிய விழிப்புணர்வைத்தருவது ஒருநிலை, மற்றையது மாணவர்களின் அடங்கி அமிழ்ந்து போயுள்ள 'உளவலு'வை மீட்டெடுத்தல் செயற்பாட்டில் பங்களித்தல் பொதுவாகப் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் முறைகளை இருபிரிவுகளுக்குள் சுலபமாக அடக்கிவிட முடிகின்றது. ஒன்று நேரான அணுகுமுறை மற்றையது எதிரான அணுகுமுறை. இங்கு இந்த ஆற்றுகை முறையில் வெடிபொருள்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் அமைந்த அணுகுமுறை பெரிதும் எதிர்நிலை சார்ந்தே நிற்கின்றது. இரு அணுகுமுறைகளும் சரியான விழிப்புணர்வு நிலையை ஏற்படுத்துமாயினும் அது சார்ந்த மனப்பதிவுகள் வெவ்வேறு உணர்வு நிலைகளுடன் பதியப்பட்டுவிடுகின்ற வாய்ப்புக்கள் இருக்கின்றன.

இந்த நூலில்வருகின்ற 'முடக்கம்' என்கின்ற நாடக ஆற்றுகையும் முன்சொன்ன வழிமுறையிலே நின்று விழிப்புணர்வு நிலையை, வெடிபொருள்கள் பற்றி ஏற்படுத்தி விடுகின்ற வெளிப்பாட்டைக் கொண்டிருக்கிறது.

இரு நாடகங்களுக்கான ஆற்றுகைகளும் அவற்றைப் பெறுமானம் குன்றாத நிலையில் முழு அரங்கப்பார்வையை வெளிக்கொணர்ந்து படிப்பவர்களுக்கு முழு அனுபவ உணர்வைத் தோற்ற வைக்கக்கூடிய நூல் உருவாக்கமும் உண்மையில் வரவேற்கக்கூடிய பயன்மிக்க நடவடிக்கைகள் தான். இந்த விடயங்கள் குறித்த இலக்குகளை அடையும் பாதையை விரைவுபடுத்திவிடுவதுடன் மேலும் பலரை இச்செயற்பாடுகளுடன் இணைந்துகொள்ள உந்தலையும் தருகின்றது.

**த.சிவகுமாரன்.**



நூல்: **தார்மீகக் கோபங்கள்**
ஆசிரியர்: **கோப்பாய் சிவம்**
வெளியீடு: இணுவில் கலை இலக்கிய வட்டம்

சமூகத்தில் காணப்படும் முரண்பாடுகளைக் காணும்போது ஓர் இலக்கியவாதிக்கு எழுகின்ற மனித உணர்வுகள், பொங்கி எழும் கோபங்கள் என்பவற்றை வெளிக்காட்டிப் பல நல்ல விடயங்களையும் பிரச்சினைகளையும் அவற்றுக்கான தீர்வுகாணும் வழிமுறைகளையும் தமது 18 சிறுகதைகளின் தொகுப்பான 'தார்மீக கோபங்கள்' என்ற நூலின் மூலம் சமூகத்துக்கு முன்வைத்துள்ளார் அதன் ஆசிரியர் கோப்பாய் சிவம்.

1975 தொடக்கம் 1986 வரையான 12 வருட காலங்களில் ஊடகங்கள் மூலம் பிரசுரித்த 18 சிறுகதைகளை நூலுருவாக்கி, மற்றொரு இலக்கியப் படைப்பை ஆவணப்படுத்தியுள்ளார்.

1985இல் 'நியாயமான போராட்டங்கள்' என்ற சிறுகதைத் தொகுதியை வெளியிட்ட ஆசிரியர் தமது இரண்டாவது சிறுகதைத் தொகுதியான 'தார்மீக கோபங்கள்' என்ற நூலை இணுவில் கலை இலக்கி வட்டத்தினூடாக வெளியிட்டுள்ளார்.

மறுமலர்ச்சி எழுத்தாளர் பிரம்மஸ்ரீ பண்டிதர் ச.பஞ்சாட்சரசர்மாவின் மகனான கோப்பாய் சிவம் தந்தையாரைப் போன்று தமக்கெனப் பாணியொன்றை அமைத்துக் கொண்டு இலக்கியப் பணியாற்றி வருகின்றார்.

சிறுகதை, கவிதை, குறுநாவல், சைவசமயம் பற்றிப் பல்வேறு நூல்களை அவ்வப்போது எழுதி வெளியிட்டு வரும் கோப்பாய் சிவம் ஆற்றல்மிக்க ஆளுமைமிக்கதோர் எழுத்தாளர் தாம் கொண்டுள்ள இலக்கிய ஆர்வத்தைத் தமது அறிவு, அனுபவங்களுக்கு ஏற்றவகையில் ஈடுபடுத்தித் தனக்கெனத் தனிவழி அமைத்துச்செயற்படுபவர்.

சமுதாயச் சீரழிவுகள், பொருளாதாரக் கொடுமைகள், சாதாரண மனித ஆவல் நிறைந்த ஆசைகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், பெண்ணுரிமைகள் எனப் பல்வேறு வகைப் பிரச்சினைகளை முன்வைத்து அவற்றுக்கான தீர்வுகளைத் தேடிக்கொள்ளும் வகையில் தமது சிறுகதைகளை ஆக்கியுள்ளார்.

உள்ளத்தில் எழும் பல கேள்விகளுக்கு முற்றுமுழுதான முடிவுகளைக் காணாதுவிட்டாலும் அவற்றுக்கான விடைகளைக் காணத் தூண்டும் அளவுக்கு கோப்பாய் சிவத்தின் சிறுகதைகள் அமைந்துள்ளன. ஒவ்வொரு கதைகளிலும் மனித மனங்களின் உணர்வுகள் வெளிப்படுவதை அவதானிக்கமுடிகிறது.

கதைகளில் கூறப்படும் கதாபத்திரங்கள் எம் கண்முன் நடமாடும் மனிதர்கள் போலவே காட்சி தருகின்றனர். 'தார்மீக கோபங்கள்' வெறும் கற்பனை அல்ல. அவை எமது அன்றாட வாழ்கை நிகழ்வுகள் என உணரவைக்கின்றன.

**- விஸ்வபாரதி**

### கோயிலாக்கண்டிக் கடலில்

# சுதந்திரமாக மீன்பிடிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை17

கோயிலாக்கண்டிக் கடலில் மீனவர்கள் சுதந்திரமாகத் தொழிலில் ஈடுபட நடவடிக்கை எடுக்குமாறு கோரி மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டை அப்பகுதி மீனவர்கள் சார்பாகக் கைதடி நாவற்குழி தெற்கு ஸ்ரீமகாவிஸ்ணு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் நேற்றுமுன்தினம் செய்துள்ளது.

அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக் கப்பட்டிருப்பதாவது:-

கைதடி நாவற்குழிப் பகுதியில் சுமார் 180 மீனவக் குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்கள் கோயிலாக்கண்டிக் கடலிலேயே தமது மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வந்தனர். ஆனால், படையினர் குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் மீனவர்கள் தொழிலில ஈடுபட அனுமதி மறுத்துள்ளனர். இதன்காரணமாக அம்மீனவக் குடும்பங்கள் பலத்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன.

அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், இராணுவ உயரதிகாரிகள் மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரிடம் இத்தடையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் இதுவரை எவ்விதமான ஆக்க பூர்வ நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, இத்தடையை நீக்கி மீனவர்கள் சுதந்திரமாகத் தொழிலில் ஈடுபடுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கொள்ளவேண்டும் - எனறுள்ளது.

இதேவேளை, இதுதொடர்பாக இப்பகுதி மக்களுக்கும், யாழ். மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதிக்கும் இடையில் மிகவிரைவில் சந்திப்பொன்றை நடத்திப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்குரிய நடவடிக்கைகளை மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது என மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலக இணைப்பாளர் றோகித பிரியதர்சன தெரிவித்தார்.

(8-5)


## உதவி முகாமையாளர் தேவை

யாழ் நகரில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு உதவி முகாமையாளர் தேவை. யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட க.பொ.த (சாதாரணம், உயர்தரம்) படித்த இருபாலாரும் 26.07.2004 இற்கு முன் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும்.

*விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:*

விளம்பர இல.2328
மே/பா உதயன் (34156) (21-13-14)



## யாழ். மக்களே! இதோ உங்களுக்காக!

★ தச்சுவேலை உபகரணங்கள்
10", 12",14",16" சைனா மிசின்கள்
★ எலக்ரிக் டிசைன் ரவுட்டர்கள்
★ றில்லர்கள் ★ கிரைண்டர்கள்
★ வளைவு வெட்டும் வான்சோ

☞ ஏனைய தச்சுவேலைக்கான உபகரணங்களும் உதிரிப்பாகங்களும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விவரங்களுக்கு: சுதா றேடேர்ஸ்
*உரிமையாளர்:* கி.சுதாகரன்
அரசடி வீதி, நல்லூர், யாழ்.
(34076) (37-21-14-13)



## விற்பனைக்கு உண்டு

நல்ல பராமரிப்பில் உள்ள பெரிய ஆட்டுக்கடாக்கள் விற்பனைக்குண்டு

தொடர்பு:
21, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி (34164)(40-21-13-14)





தனது முதலாவது பிறந்த நாளை இன்று (17.07.2004) சனிக்கிழமை தனதில்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகிறார்.
இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பாமார், மாமாமார், அத்தைமார், அன்ராமார் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் சீரும் சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

*82/7,* 3ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

T.விமல்.
ஆதித்தியா கிராபிக்ஸ்,
கட்டைப்பிராய்.

(34129)


## வரலாறு காணாத மலிவு விற்பனை

*கொழும்பு ஜெயா புக் சென்ரரின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது தடவையாக வரலாறு காணாத மலிவு விற்பனை நடைபெறவுள்ளது.*

**நாள்: 2004 ஜூலை 19 முதல் 29 வரை**

**நேரம்: தினமும் காலை 9.00 மணிமுதல் 6.00 மணிவரை (புதிய நேரம்)**

**இடம்: யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்**

☑ சகலருக்கும் இலங்கை நூல்களுக்கு 10% கழிவு வழங்கப்படும்.
☑ பிறநாட்டு வெளியீடுகளுக்கு 15% கழிவு வழங்கப்படும்.
☑ மொத்தமாகக் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் இலங்கை வெளியீடுகள் தவிர பிறநாட்டு வெளியீடுகளை (ஒவ்வொன்றிலும் ஆகக் குறைந்தது 10 பிரதிகள்) கொள்வனவு செய்வோருக்கு விஷேட கழிவாக **20%** வழங்கப்படும்.

பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்பக்கல்லூரிகள், கல்வியியற்கல்லூரி, பொதுநிறுவனங்கள்; பிரதேசசபை நூலகங்கள், தனியார் கல்விநிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களிற்குக் கடன் அடிப்படையில் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்குரிய ஒழுங்குகள் செய்து தரப்படும்.

*தொடர்புகளிற்கு: வணிக மாணவர் மன்றம், யாழ்.பல்கலைக்கழகம்.* (C/36016)(43-13-14-21)


### வெங்காயச் செய்கைக்குக் கடனுதவி

பெரியவிளான் விவசாயிகள் சம்மேளனத்தின் உறுப்பினர்களுக்கு வெங்காயச் செய்கையை ஊக்குவிப்பதற்கு இலங்கை வங்கியின் காங்கேசன் துறைக் கிளை கடனுதவி வழங்கவுள்ளது.

கீரிமலை கமநல சேவை கேந்திர நிலையப் பெரும்பாக உத்தியோகத்தரினதும், பெரிய விளான் விவசாயிகள் சம்மேளனத்தினதும் சிபார்சின் பேரில் இக் கடனுதவி வழங்கப்படவுள்ளது.

பண்ணாலை விவசாயிகள் சம்மேளனம், தெல்லிப்பழை கிழக்கு விவசாயிகள் சம்மேளனம் ஆகியவற்றின் உறுப்பினர்களுக்கும் அண்மையில் வெங்காயச்செய்கைக்கான கடனுதவி இவ்வங்கிக் கிளையினால் வழங்கப்பட்டது. (8-135)

### கோயிலாக்கண்டியில் கலந்துரையாடல்

தென்மராட்சி தெற்கு தனங்கிளப்பு, மறவன்புலோ பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் கால்நடை உரிமையாளர்களுடனான கலந்துரையாடல் நாளை காலை 9 மணிக்கு கோயிலாக கண்டி, மகாலட்சுமி வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலர் செ.சிறநிவாசன், பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் மற்றும் தென்மராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளா ஆகியோர் இதில் கலந்துகொள்ளவுள்ளனர். இக்கலந்துரையாடலில் மேற்படி பகுதிகளைச் சேர்ந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அதற்கான தீர்வுகள் என்பன பற்றி ஆராயப்படவுள்ளதால் சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறிவித்துள்ளது.

(ஐ-ஒ,201,31)

### மாதாந்த உதவிப்பணம் பெறுவோருக்கு

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கு இம்மாதத்திற்கான கொடுப்பனவு அந்தந்தத் தபால் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்கள், புற்று நோயாளர், காச நோயாளர் மற்றும் தொழு நோயாளர்கள ஆகியோர் தங்கள் பிரிவு தபால் அலுவலகங்களில் இக்கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்று பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. (8-135)

### வீதியைத் திருத்தக் கோரிக்கை

பெரியவிளானிலிருந்து உயரப்புலம் செல்லும வீதி மோசமாகச் சேதமடைந்த நிலையில் உள்ளது. இவ்வீதியைப் புனரமைத்துத் தருமாறு உயரப்புலம ஸ்ரீமுருகன் சனசமூக நிலையம் வலி.தென் மேற்கு பிரதேசசபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகப் பொறுப்பதிகாரியை கடிதம் மூலம் கேட்டுள்ளது. (8-135)

## பிரிட்டிஷ் தூதரகம் விடுத்துள்ள அறிவிப்பு

கொழும்பு,ஜூலை17

கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்தில் இம்மாதம் 20ஆம் திகதி மற்றும் 21ஆம் திகதிகளில் (எதிர்வரும் செவ்வாய், புதன்கிழமைகளில்) விஸா வழங்கும் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

பிரிட்டிஷ் தூதரகம் நேற்றுமுன்தினம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் இவ்வாறு தகவல் வெளியிடப்பட்டிருக்கின்றது.

இவ்விரு தினங்களிலும் தவிர்க்கமுடியாத மிக அவசிய தேவை என்று கருதப்படும் விஸாவுக்கான விண்ணப்பங்கள் மாத்திரமே பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும் என்று தூதரகம் அறிவித்துள்ளது.

குறித்த இரு நாள்களிலும் ஏற்படும் அசௌகரியங்களுக்கு அதன் வருத்தத்தையும் தெரிவிக்கின்றது. (க)

## அரசாங்க அறிவித்தல்

**சுகாதார சேவைத்திணைக்களம், யாழ்ப்பாணம்.**

### *சீருடைத்துணிகள், வைத்தியசாலைத்துணிகள் வழங்கல்*

சுகாதாரத் திணைக்களத்திற்குச் சீருடைத்துணிகள், வைத்தியசாலைத் துணிகள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் என்னால் 06-08-2004ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு உடனேயே திறக்கப்படும். கேள்விப்பத்திரங்களைப் பெற விரும்புவோர் 19-07-2004ஆம் திகதி திங்கட்கிழமைமுதல் 05-08-2004 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரையும் விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூபா 100/-, மீளளிப்புடன் கூடிய கேள்விப் பிணைப்பணமாக ரூபாய் 1000/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பிப்பவர் எம்மால் கோரப்படும் மாதிரிகளுக்கு அமைவாக மாதிரித் துணிகளுடன் விண்ணப்பிக்க வேண்டும். தெரிவுசெய்யப்படும் கேள்விகாரர் இருவார காலத்திற்குள் எமது பணிமனையில் ஒப்படைக்க வேண்டும்.

வைத்திய கலாநிதி
**இ.தெய்வேந்திரன்,**
பதில் மாகாணப் பிரதிப்பணிப்பாளர்,
சுகாதார சேவைகள்,
யாழ்ப்பாணம்.

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (C/36019) (21-14-13)

## கேள்வி அறிவித்தல்

**பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனை**
**சுகாதார சேவைகள் திணைக்களம் - யாழ்ப்பாணம்**

### தளபாடங்கள், உபகரணங்கள் வழங்கல்

பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனைக்கு மரத்தளபாடங்கள், இரும்புருக்குத் தளபாடங்கள் வழங்குவதற்கான கேள்விப பத்திரங்கள் என்னால் 18.08.2004ஆம் திகதி 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு உடனேயே திறக்கப்படும். இதற்கான கேள்விப்பத்திரங்களைப் பெறவிரும்புவோர் மீளளிக்கப்படாத பிணைப்பணமாக ரூபா 200/= உம் மீளளிக்கப்படக்கூடிய பிணைப்பணமாக ரூபா 5000/= உம் செலுத்தி 19.07.2004ஆம் திகதிமுதல் இப்பணிமனையில பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்கள் 17.08.2004ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை வழங்கப்படும். இக்கேள்விப்பத்திர உறைகள் அரக்கு முத்திரை இடப்பட்டு இடதுபக்க மேல் மூலையில் "பிரதிமாகாணப் பணிப்பாளர் பணிமனைக்குத் தளபாடங்கள், உபகரணங்கள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் திறக்கும் போது கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம். ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விதாரர் ஒரு மாதகாலத்திற்குள் குறிப்பிடப்பட்ட பொருள்களைத் தாங்களே எமது பணிமனையில் ஒப்படைக்க வேண்டும்.

மரத்தளபாடங்கள் யாவும் வேப்பமரத்தினால் அல்லது முதல்தர மரத்தினால் செய்யப்படல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் எமது பணிமனை நேரத்தில் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

வைத்திய கலாநிதி
**இ.தெய்வேந்திரன்,**
பதில் மாகாணப் பிரதிப்பணிப்பாளர்,
சுகாதார சேவைகள் - யாழ்ப்பாணம்.

*ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C/36018)(42-21-14-13)

## 6ஆம் மாத நினைவஞ்சலி

மண்ணில் 13 - 02 - 1931



விண்ணில் 17 - 01 - 2004

### அமரர் இராஜரட்ணம் சொலமன் இராஜகிளி

(இளைப்பாறிய பொறுப்பாளர், மரத்திணைக்களம், யாழ்ப்பாணம்)

*"புகழ் புரிந்த இல்லிலோர்க்கில்லை*
*இகழ்வார்முன் ஏறுபோல் பீடு நடை"*

எமது அன்புத் தெய்வத்தின் நினைவாக இன்று (17-07-2004) சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ். அன்னை அடைக்கலமாதா ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*52,மாட்டின் றோட்,*
*யாழ்ப்பாணம்.* (34174)(42-21-14-13)

திருமதி இராஜகிளி றோஸ்
(மனைவி - லண்டன்)

# அன்பும் ஒளியும் பெருக்கெடுக்கும் கதிர்காமக் கந்தன் திருத்தலம்

இன்று கதிர்காமம் முருகன் தலத்தில் கொடியேற்றத்துடன் வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகின்றது. கதிரமலை என அழைக்கப்படும் முருகப்பெருமானின் தென்னிலங்கைத் திருத்தலத்தின் வருடாந்த மகோற்சவங்கள்

## இன்று கொடியேற்றம்

வருடா வருடம் ஜுலை மாதத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிப் பதினைந்து நாள்கள் தொடர்ந்து இடம்பெற்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறுவது வழக்கமாகும்.

சரித்திரப் புகழ்பெற்ற இத்திருத்தலத்தில் வருடாந்த மகோற்சவத்தின் முடிவில் இடம்பெறும் தீர்த்தோற்சவம் இலங்கை வாழ் இந்துக்களால் மட்டுமன்றி மற்றும் பல சமயத்தவர்களாலும் வழிபாடு செய்யப்படும் ஒரு புனித நிகழ்வாகும்.

### தொன்மை வரலாறு

முருகப் பெருமான் கோயில்கொண்டிருக்கும் திருத்தலங்களுள் கதிர்காமம் பெருமை வாய்ந்ததும் பழைமை வாய்ந்ததுமான தலம் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் பலவுள. சங்க நூல்கள், திருமுருகாற்றுப்படை, திருப்புகழ் ஆகியவற்றில் கதிர்காமத் தலம் பற்றிக் குறிப்பிடப்பட்டிருப்பதிலிருந்து, இத்தலத்தின் தொன்மையையும் சிறப்பினையும் தெரிந்துகொள்ள இயலும். தமிழ் வேந்தனாம் இராவணன் காலத்தில் ஏறக்குறைய 4000 வருடங்களுக்கு முன்னர் கதிரையம்பதியில் கந்தக் கடவுளுக்கு ஆலயம் உருவானதாக வரலாற்றின் மூலம் தெரிந்துகொள்ள முடிகின்றது.

இலங்கையின் தென்கிழக்கில் அமைந்துள்ள திசாமகரகமவிலிருந்து 20 கிலோமீற்றர் தொலைவில் மாணிக்க கங்கைக் கரையில் இத்தலம் அமைந்துள்ளது.

தற்போது இங்குள்ள கோயில் கி.பி. 1634 ஆம் ஆண்டுவரை இலங்கையில் ஆட்சிசெய்த இரண்டாம் இராஜசிங்கனால் கட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

கதிர்காமம் என்பதற்கு ஒளியும் அன்பும் நிறைந்த இடம் (கதிர்+காமம்) என்பது பொருளாகும்.


வேடர் வழிவந்த கப்புறாளை எனப்படுவோர் வாய்கட்டிப் பூசை செய்யும் மரபு ஆண்டாண்டு காலமாக இங்கு கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இங்கு கருவறையில் என்ன இருக்கின்றதென்பதைப் பக்தர்களால் காணமுடியாது. பக்தர்கள் கருவறையின் நுழைவாயிலில் தொங்கும் திரைச்சீலையில் இருக்கும் வள்ளி தெய்வானையுடன் கூடிய முருகப்பெருமானின் சித்திரத்தை மட்டுமே பார்க்கமுடியும்.

இயந்திரப் பெட்டிஒன்றினை வைத்து வழிபட்டு வந்த முத்துலிங்கசுவாமி என்ற முருக பக்தர் அவ்விடத்திலேயே முக்தியடைந்ததைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட முத்துலிங்கசுவாமி கோயில் இன்றும் அங்கு காணப்படுகின்றது. முத்துலிங்க சுவாமிகள் அமைத்த இயந்திரப் பெட்டியே இன்றும் விழாக்காலத்தில் வீதியுலா வருகின்றது.

### திருப்புகழில் சிறப்பு

காவடிக் கந்தன் எனச் சிறப்பு நாமம் கொண்ட கதிர்காமக் கந்தனை அருணகிரிநாதரும் தம் திருப்புகழில் சிறப்பித்துப்பாடியுள்ளார். கதிர்காமத்தில் மலைமீது வீற்றிருந்து அருள்புரியும் முருகனை "கறையானைக் கிளையோனே! கதிர்காமப் பெருமானே!" என்று தனது திருப்புகழ் வரிகளால் அவர் ஏற்றிப் போற்றியுள்ளார்.



கதிர்காம ஆலயத்தின் அருகே கதிரமலையிலும் முருகப்பெருமானுக்குக் கோயில் உண்டு. ஆலயத்தின் அருகே தெய்வானை அம்மன் ஆலயமும், வள்ளியம்மை ஆலயமும் உள்ளன. இங்கிருந்து நான்கு மைல் தொலைவில் செல்லக் கதிர்காமமும் மாணிக்கப்பிள்ளையார் ஆலயமும் உள்ளன.

இற்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய தூர இடங்களிலிருந்தும் வருடாந்த மகோற்சவங்களில் கலந்து முருகனைப் போற்றி அவனருள் பெறும்பொருட்டு முருக பக்தர்கள் கால்நடையாகவே புறப்பட்டுவிடுவார்கள். பொதுவாக லௌகீக வாழ்க்கையில் தாம் தமது குடும்பத்தவர்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைச் சரிவர நிறைவேற்றி தமது பிற்கால வாழ்க்கையை ஆத்மீக நோக்கில் கழிக்கச் சித்தம் கொள்ளும் முருக பக்தர்கள் கதிர்காமக் கந்தனை கண்ணால் கண்டு தொழுது துதிக்க அத்தனை தொலைதூரங்களிலிருந்து மாதக்கணக்காகக் கால்நடையாக யாத்திரை செய்து கதிர்காமம் சென்றடைந்து தரிசித்தமை இன்றைய நம் இளைய இந்து சமுதாயத்தினரில் பலருக்கு வியப்பை ஏற்படுத்தக்கூடும். ஆனால், தொடர்ந்து பல தடவைகள் வருடாவருடம் கதிர்காமத்துக்குப் பாதயாத்திரை செய்து முருகனைத் தரிசித்த எத்தனையோ முருக பக்தர்கள் வாழ்ந்த பூமி இந்த யாழ்ப்பாணம் என்பதில் சைவ சமயத்தவர்க்குப் பெருமையளிக்கும் விடயமாகும்.

### யாத்திரைத் தலம்

இன்று நவீன போக்குவரத்து வசதிகள் ஏற்பட்டதைத் தொடர்ந்து சிரமங்கள் எதுவுமின்றி விரைந்து சென்று கதிர்காம முருகனைத் துதிக்கும் பாக்கியம் நமக்கு வாய்த்துள்ளது. ஆனால், சுமார் முப்பது வருடங்களுக்கு முன்னர் இவ்வித போக்குவரத்து வசதிகள் குறைவாகக் காணப்பட்ட வேளையில் இவ்விதம் முருக பக்தர்கள் பலர் ஒன்றுகூடி முருக நாம பஜனை செய்தவாறு பாதயாத்திரை புறப்படும் வேளையில் அடியார்க்கு அடியவர்களாகக் குடாநாட்டு சைவமக்கள் அவர்கள் பாதயாத்திரை செய்யும் பாதையில் தங்கி இளைப்பாறவும் சிரம பரிகாரம் செய்யவும் ஆன வசதிகளைத் தாமே விரும்பி முன்வந்து செய்து கொடுத்தனர். அம்முருக பக்தர்கள் கதிர்காமம் சென்று கந்தனைத் தொழுது பெறும் அனுக்கிரகத்தின் ஒருபகுதி அந்த அடியார்களுக்குத் தமது யாத்திரை மேற்கொள்ளும் வழியில் தேவைப்படும் வசதிகளைச் செய்து கொடுத்து உபசரிப்பதன் மூலம் தமக்கும் கிட்டுமென அடியார்க்கு அடியவர்களான குடாநாட்டுச் சைவமக்கள் நம்பினர்.

திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த முருகன் அடியவர்கள் இவ்விதம் பாதயாத்திரை மேற்கொள்ளும் வழி கல்லும் முள்ளும் நிறைந்த, கொடிய வன விலங்குகள் உலாவும் காட்டு மார்க்கமாக அமைந்திருந்தது. இவ்விதம் தமது பாதயாத்திரையின் போது இடைவழியில் எதிர்ப்படும் இடையூறுகள் எதற்கும் அஞ்சாது முருகநாமத்தை உச்சரித்த வேளையில் எதிர்ப்பட்ட இடர்கள் நீங்கித் தமது பயணத்தைத் தொடர முடிந்ததாகப் பக்தர்கள் தமது அனுபவங்களைப் பல சந்தர்ப்பங்களில் பக்தியுடன் பகிர்ந்துள்ளனர்.

முன்னைய நாள்களில் கதிர்காம யாத்திரை என்பது சிரமமும் தாமதமும் கொண்டதாக அமைந்தது மட்டுமன்றி, உற்சவ காலங்களிலும் பாரம்பரிய நடவடிக்கைகள் ஒழுங்காகக் கடைப்பிடிக்கப்பட்டதன் மூலம் பக்திபூர்வ நிகழ்வுகளாக அமைந்தன. அவ்வேளையில் எவ்வித ஆடம்பரங்களோ, ஏனைய வசதி வாய்ப்புக்களோ கதிர்காமத்தில் அமைந்திருக்கவில்லை. இறை சிந்தனையும், நம்பிக்கையும் மிக்கவர்களாய் பலவித கஷ்டங்களைத் தாங்கித் தன்னைத் தரிசிக்க வந்த பக்தர்களுக்கு கதிர்காமக் கந்தன் தன் ஆசி அருளை அளளி வழங்கத் தவறியதில்லை.

அந்த்வகையில், கதிர்காமம் சென்று கந்தனைத் தரிசிக்க இயலாத சைவ அடியார்கள் இவ்வாண்டு வருடாந்த உற்சவம் ஆரம்பமான இன்றைய கொடியேற்றத்தினத்திலும் எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதியன்று இடம்பெறவுள்ள தீர்த்தத் தினத்திலும், அவர்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ அங்கங்கு இருந்தபடியே கதிர்காமக் கந்தனை மனதால் துதித்து அவன் அருள் பெறுவார்களாக. ★

**பொன்வேலன்**

# மன்றம் நிறைகின்றது; மனம் நெகிழ்கின்றது

**திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் 'ஞானசௌந்தரி' இசைநாடகம் அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் மன்ற அரங்கில் இரவு 7.30 மணிக்கு மேடையேறுகின்றது. நாடக ரசிகர்களுக்கு ஒரு முன்னூட்டலாக இந்தத் தொகுப்பு வெளியிடப்படுகிறது.**

கலைப்படைப்புக்கள் ஒரு மனிதனின் உள்ளத்தை தனது வீச்சினால் நெகிழ வைத்து அவனுக்குள் குடிகொள்கின்றன. திருமறைக் கலாமன்றத்தின் ஞானசௌந்தரி இசைநாடகமும் அவ்வாறு தான் எனக்குள் ஓர் அனுபவத்தை ஏற்படுத்தி இருந்தது. இந்நாடகம் கடந்த 9,10, 11 ஆம் திகதிகளில் தொடர்ச்சியாக மூன்று நாள்கள் திருமறைக்கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்பட்டது. இசைநாடக வரலாற்றின் ஒரு சுருக்கமான அறிவிப்புடன் ஆரம்பமாகிய இவ்ஆற்றுகை தனது முதல் காட்சியுடனும் தனது காண்பியக் கவர்ச்சியுடனும் இசை லயத்துடனும் இதமாக அரங்கை நோக்கி அனைவரது புலன்களையும் இழுத்துவிட்டது.

இந்தியாவில் சங்கரதாஸ் சுவாமிகளால், இசைநாடகமாக எழுதப்பட்ட பல இசைநாடகப் பிரதிகளில் ஒன்று இவ்ஞானசௌந்தரி. இதன் கதைப் பின்புலத்தை நோக்குவதற்கு அப்பால் ஆற்றுகை நிறைவினையும் அந்நிறைவின் பின்புலத்தையும் இங்கு கருத்தில் எடுக்கவேண்டியது அவசியமாகின்றது. தர்ம மகாராஜாவின் பாத்திர அறிமுகத்துடன் நகர்த்தப்படும் ஆற்றுகையில் திட்டமிடப்பட்ட, நெறிமுறைப்படுத்தப்பட்ட கதையினதும், காட்சியினதும் கட்டமைப்பைக் காணலாம். பார்வையாளரின் புலனுணர்வுகள் அரங்கினோடு தொடர்புறாவண்ணம் நேர்த்தியான வகையில் வேகத்துடனும், விவேகத்துடனும் காட்சிப் புலங்கள் நுகர்வுத் திருப்தியுடன் நகர்த்தப்பட்டமை ஆற்றுகையின் வெற்றியில் கணிசமான பங்களிப்பைப் பெறுகின்றன.



இசைநாடகத்தின் சிறப்பும், இயங்கு நிலையும் இசையினதும் அசைவினதும் இணைந்த இரண்டறு நிலையில் வெற்றிபெறும் என்பது இவ் ஆற்றுகையில் மிகத் தெளிவாக எடுத்தாளப்பட்டிருந்தது. ஒவ்வொரு நடிகரும் தாம் ஆள் மேற்கொண்ட தத்தமது பாத்திர வெளிப்பாட்டிற்குப் பொருத்தமுற வெளிப்பாட்டுத் தளத்திற்குக் கொண்டுவந்திருந்தனர்.

காட்சி அமைப்புக்கள் முப்பரிமாணக் காண்பியத்தை ஏற்படுத்தும் வண்ணம் வடிவமைக்கப்பட்டு அணிசேர்த்து நின்றது. கட்டுத்திரைகள் வெட்டுத்திரைகள் என்ற மரபு சார்ந்த (இங்கு மரபு என்பது மறுவாசிப்பிற்கு உரியதாகக் கொள்ளலாம்) கூறுகளில் இருந்து வெளியேறி இன்னுமொரு பரிமாணத்திற்கு இசைநாடகத்தை நகர்த்தியிருந்தமை ஒவ்வொரு கூறிலும் செலுத்தப்பட்ட அரங்கியல் அக்கறையையும், ஆளுமையையும் காட்டி நின்றது. அரங்கியலாளர்களால் அல்லது அப்படியாகத் தம்மைக் காட்டிக்கொள்வதற்காக அறிமுறைக் கண்ணாடிகளை மாட்டிக்கொண்டு வரும் ஆய்வாளர்களுக்குச் சிலவேளை காட்சிப் பின்புலங்கள் அவசியமற்றவை என்றோ அல்லது மரபு மீறிவிட்ட - மாயத்தனம் நிறைந்த பார்வையாளரின் கற்பனையை மட்டுப்படுத்துகின்ற - அரங்கியல் வழுவென்ற கருத்து வெளிப்பட்டு நிற்கலாம். அது அப்படியென்றால் ஆடையமைப்பில் கூட கற்பனை வளர்ச்சியை மட்டுப்படுத்தாது பார்வையாளருக்குத் திறந்துவிட வேண்டுமென்பதால் "பிலேந்திரன்" போன்ற அரச பாத்திரங்களை சமகால உடையுடன் மேடையில் உலாவவிட்டு நடிகனின் நடிப்பால் அரச உடையில் அவனைப் பார்ப்போர் கற்பனை செய்யட்டுமென விட்டுவிடலாமா என்ற கேள்வியும் கிண்டலாகவேனும் எழவே செய்யும். அரங்கு என்பதற்கு "மாயைத்தனம் நிறைந்த" என்ற கருத்து உண்டென்ற வகையிலும் அதற்கு விசமத்தனமாகக் கருத்துக்களைக் கொடுத்து சுவைஞரிடமிருந்து அந்நியப்படுத்திவிடலாகாது என்ற தார்மீகப் பொறுப்பிலும் இவ்ஞானசௌந்தரி ஆற்றுகை அரங்கேறியிருந்தது பொருத்தமே.

ஒப்பனை, வேடஉடை, ஒலி, ஒளி போன்ற ஏனைய அரங்க மூலகங்களும் கணிசமான பங்கை ஆற்றுகைக்கு வழங்கின. அத்தோடு, பாத்திர உணர்வு நிலைக்குப் பொருத்தமான இராகங்களை இணைத்திருந்தமை ஆற்றுகையின் வீச்சோடு பயணிப்பதில் தடையேதும் இல்லாத நிலையைத் தோற்றுவித்திருந்தது. ★

**மரபன்**

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

கலர்மீன்கள், தொட்டிகள், அழகுப்பொருள்கள், குருவிகள், கூடுகள், பூங்கன்றுகள், சாடிகள், டாஸ்கண்ட், கொக்கஸ்பனில் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:40/11, சீனியர்லேன், தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (34148)

புறொயிலர் இறைச்சிக்கோழி கல்பேட்ஸ் விற்பனைக்குண்டு. தொடர்பு: சிவகுமாரன் (பெற்றோல செற் அருகில்), புலவனார் வீதி, கல்வியங்காடு. (34190)

எம்மிடம் புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:கிருஷ்ணா, பொன்னாலை வீதி, விதானை வளவு, மானிப்பாய். (34183)

தரமான Prima Broiler குஞ்சுகள், பேட்டுக குஞ்சுகள் 19.07.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறைக் கிளையிலும் Suddi Farm, வட்டுக்கோட்டையிலும் பெற்றுக் கொள்ளலாம். முன்கூட்டியே பதிவுசெய்யவும். க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33931)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு NEW R.S.K. மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். T.P.: 077 6063164 அல்லது NEW R.S.K. மானிபபாய் வீதி, மதவடி, உடுவில். (34183)

14 போத்தல் பால் கறக்கும் ஜேசி இன மாடும், கன்றும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சுவானியார் கிறிஸ்ரி, 27/13, நாகராசா லேன், பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். (34189)

## வீடு விற்பனைக்கு

"குருவளை", அளவெட்டி தெற்கில் வீட்டுடன் 8 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 08, நாவலடி லேன், திருநெல்வேலி. T.P.:077 6309947. (34151)

## வாகன விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள Yamaha mate 50 Y.C.L.S. model மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 29/3, இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம் (சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கு அருகில் உள்ள வீதியில்). தொ.பே. இலக்கம்:0777 116132. (34193)

## முகாமைத்துவத்துறை யாழ்.மாணவருக்கு 'அஸாறிம்' நிறுவனம் உதவிடும்

யாழ்ப்பாணத்திலுள்ள மாணவர்கள் லண்டன பல்கலைக்கழகப் பட்டங்களுக்காகக் கல்வி கற்பதற்கும், இலங்கையில் அரச மற்றும் கூட்டுத்தாபனங்களில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்குமான ஒரு திட்டத்தை அக்குயினாஸ் தென் ஆசிய பிராந்திய முகாமைத்துவ நிறுவனம் (Aquinas South Asian Regional Institute of Management) செயற்படுத்த முன வந்துள்ளது.

அஸாறிம் (ASARIM) என்று சுருக்கமாக அழைக்கப்படும் இந்நிறுவனத்தின் தலைவர் கை.டி.பொன்கலன்ட் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறவிருக்கும் கூட்டத்தில் தமது திட்டம் பற்றி மாணவர்களுக்கும், பெற்றோருக்கும் விளக்கம் அளிக்கவிருக்கின்றார்.

லண்டன் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய பட்டங்களுக்கான பாடங்கள் முதலில் இந்நிறுவனத்திலேயே வழங்கப்படும். ஆனால், யாழ்ப்பாணத்திலும் ஒரு வளாகத்தை நிறுவுவதற்கு அஸாறிம் திட்டமிட்டுள்ளது.

இந்நிறுவனத்தின் தலைவர் ஹாவார்ட் பல்கலைக்கழக அறிஞரும் வங்கியாளருமாவர். இவர் உலக வங்கி மற்றும் சர்வதேச வங்கிகளுடன் சேர்ந்து பணிபுரிந்துள்ள அனுபவம் மிக்கவரும்கூட.

யாழ்ப்பாண மாணவர்களுக்கென அவர் தயாரித்துள்ள திட்டங்கள் விரிவானவை. யாழ்ப்பாண மாணவர் மத்தியில் காணப்படும் அபரிமிதமான திறமைகளைக் குறிப்பாக, தகவல் தொழில்நுட்பத்துறை திறமைகளை ஒருமுகப்படுத்தவும அவர்கள் இங்கும் வெளிநாடுகளிலும் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள உதவவும் அவர் விரும்புகிறார்.

கொழும்பில் கல்வியைத் தொடரவிரும்பும் மாணவர்களுக்கு அங்கு தங்கும் விடுதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் அஸாறிம் விருப்பம கொண்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் யாழ்ப்பாண வளாகம் ஆரம்பிக்கப்பட்டவுடன் மாணவர்கள் இங்கேயே இந்தப் பாடங்களைக் கறக்க் கூடியதாகவிருக்கும்.

கணனியியல் மற்றும தகவல் துறைகளில் பி.எஸ்ஸி. (B.Sc.) நெறிகளில படிக்கும் மாணவர்கள் தமது பட்டத்துக்கான கல்வியை முடிப்பதற்கு லண்டனுக்குச் செல்ல வேண்டியும் இருக்கும்.

அஸாறிம் திட்டத்தின முக்கிய அம்சங்களில் ஒன்று என்னவென்றால் பட்ட பாடநெறிக்கான விரிவுரைகளுடன் சகல மாணவர்களும் சுயேச்சையான தனிப்பட்ட வளர்ச்சிக்குரிய திட்டங்களுமுண்டு.

மாணவர்களை முகாமைத்துவ மட்டங்களில் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள உதவுவதுடன், ஆங்கிலத்தில் மிகத் திறமையுடன் தொடர்பாடல்களை மேற்கொள்ளவும் உதவுவது இத் திட்டத்தின் நோக்கமாகும்.

நிதி வசதியற்ற மாணவர்கள் விரிவுரைகளுக்குரிய கட்டணங்களைச் செலுத்த கடன் வசதிகளுக்காகவும் விண்ணப்பிக்க முடியும்.

(ப)

## விளையாட்டு விழாவும் ஒன்றுகூடலும்

ஜெயப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவுவிழாவை யொட்டிய விளையாட்டு விழாவும், ஒன்றுகூடலும எதிர்வரும் 24 ஆம் திகதி இடம்பெறவுள்ளன.

அன்றையதினம் காலை 9 மணி முதல் 11 மணிவரை சைக்கிள், முச்சக்கரவண்டி ஓட்டப் போட்டிகள் யாழ். பழைய பூங்கா வீதியிலும், கலை நிகழ்வுகள், பரிசில வழங்கல், சிறப்புக் கூட்டம் என்பன சென்ஜோன்ஸ கல்லூரி மைதானத்திலும நடைபெறவுள்ளன.

நிகழ்வில் இலங்கை யு.எஸ்.எய்ட்ஸ் மிசன் பணிப்பாளர் கலாநிதி கரல பேக்கர் கௌரவ விருந்தினராகவும் இலங்கை மோட்டிவேசன் அறக்கொடை நிதிய உதவிப் பணிப்பாளர் திருமதி இராணி சாமுவேல் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர். மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் வலுவிழநதோர் உடனடியாகத் தமது பெயர்களைப் பதியுமாறு கேட்கப்பட்டுள்ளது.(ஐ-201.30)

## VAN விற்பனைக்கு

டொல்பின் ரக TOYOTA HIACE VAN (Dual AC) விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:

Tel. 222 6678.
0777 550885

(34180) (34-14-12-21)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குக் காணி தேவை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குப் பீடம் ஒன்றை ஸ்தாபிப்பதற்குச் சுமார் 50 பரப்புக் காணி தேவைப்படுகின்றது. திருநெல்வேலி பிரதான வளாகத்திலிருந்து 10 கிலோமீற்றர் சுற்றாடலுக்குள் இருப்பது விரும்பத்தக்கது. நன்கொடையாகவோ, நிதானவிலையிலோ தருவதற்கு விரும்புவோர் அனைத்து விவரங்களுடனும் 31.08.2004ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.

துணைவேந்தர்,
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

16. 07. 2004
(சி-36022) (24-12-19-21)

## வேலை வெற்றிடம்

*ஒருங்கிணைந்த உணவுப் பாதுகாப்புத் திட்டம், நெடுங்கேணி*

**பதவி: திட்ட முகாமையாளர்**

நெடுங்கேணிப் பிரதேசத்தில் நடைபெறும் ஒருங்கிணைந்த உணவுப் பாதுகாப்புத் திட்டத்தில் திட்ட முகாமையாளர் பதவி வெற்றிடமாக உள்ளது.

*கல்வித் தகைமை:* முகாமைத்துவத்தில் பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

*அனுபவம்:* ஆகக் குறைந்தது 3 வருடமாவது முகாமைத்துவ அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

*தொடர்பாடல்:* ஆங்கிலத்திலும், தமிழிலும் சரளமாக உரையாடக் கூடியவராகவும் மொழி பெயர்க்கும் ஆற்றல் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

*கணனியியல்:* Ms Word, Excel உபயோகிக்கத் தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.

*சம்பளம்:* 17,000.00 (கலந்தாலோசிக்கப்படும்) போக்குவரத்திற்காக வாகனம் வழங்கப்படும்.

தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் நெடுங்கேணியில் தங்கியிருந்து வேலை செய்தல் மிக முக்கியமான ஒரு விடயமாகும்.

விண்ணப்ப முடிவு திகதி: **25-07-2004** இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டும்.

*விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:*

**ஒருங்கிணைந்த உணவுப் பாதுகாப்புத் திட்டம்**
**வட பிராந்திய சேவா லங்கா மன்றம், யாழ்.வீதி, பரந்தன், கிளிநொச்சி.**

(34194) தொ.பே.இல.071-2373365 (21-14-12)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இலங்கை
## கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மருத்துவபீட கட்டடத் தொகுதியில் அவசர திருத்த வேலைகள் மற்றும் சில மேம்படுத்தல் பணிகளை நிறைவேற்றுவதற்கான அரக்கிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கட்டட நிர்மாண வேலைகளுக்கான இக்றாட் (ICTAD) நிறுவனத்தில் எம் 7 (M7) அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் கேள்விப்பத்திரங்கள் பெறத் தகுதியுடையவராவர்.

கேள்விப்பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உதவிப் பதிவாளர்/நிர்வாகம் அவர்களிடமிருந்து 26.07.2004வரை செல்லுபடியான ஒப்பந்தகாரர் பதிவுப் புத்தகத்தையும் யாழ்ப்பாணப பல்கலைகழக காசாளர் கருமபீடத்தில் பின்வரும் வைப்பீடுகளுக்கான தொகையைப் பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டையும் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

1. மீளளிக்கப்படும் வைப்புத் தொகை ரூபா 5,000/=
2. மீளளிக்கப்படாத வைப்புத் தொகை ரூபா 250/=

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 10.08.2004 அன்று மாலை 3.00 மணிக்கு முன் *தலைவர், கேள்விச்சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்* அவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது *யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும்.* எவ்வாறாயினும் மேலுறையில் பணிவிவரம் எழுதப்படல் வேண்டும்.

தேவைப்படின் கேள்விப்பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நிர்வாகக் கிளையில் வழமையான அலுவலக நேரங்களில் கட்டணம் ஏதும் இன்றிக் கேள்விதாரர்கள் பரிசீலிக்க முடியும்.

துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
16-07-2004

தபால் பெட்டி இல.-57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(C/36023)(42-12-21-19)

## DIPLOMA IN BEAUTY CULTURE & ADVANCE COURSE ஆரம்பம்

### நவீனமுறையிலான அழகுக் கலை வகுப்புகளும் பயிற்சிகளும்

கொழும்பு Moon Beauty Care நடத்துநரும், நடன ஆசிரியையும் கொழும்பில் அழகுக் கலை வகுப்புகளையும் சிகிச்சைகளையும் நடத்திக்கொண்டிருப்பவருமான திருமதி B.அகிலா அவர்களால் நடத்தப்படும்.

**Facials:** 20 வகையான Facials (Galvanic & High Frequency) உட்பட

**Face Care:** Pigmentation, Pimple Treatment, Threding & Waxing, Pimple Face Facial.

**Hair Care:** 30 வகையான Hair Style உட்பட Seal Massage, Henna Treatment, Hair Colouring, Dying, Straightening, Perming & Curling Dandtruff, Dull Hair Treatments அத்துடன் கூந்தல் வளர் தைலம் தயாரிக்கும் முறை.

**Eye Care:** Eye massage, Under Eye Treatment, Eye Brow, Shapping.

**Body Care:** Manil Cure, Pedi Cure.

**Make Up:** Oil Make Up, Normal Stick, Danel Film, Bridle Dressing & MakeUp.
Hindu (பலவகை சிகை அலங்காரமும், நாகஜடையும்)
Christian, Sinhalese, Gujarath

**Mehenthy:** Arabian Cultural, Body Art & Stone Work, Nail Art.

- ❊ கண் கருவளையத்தை நிரந்தரமாக நீக்குதல் (Infra red Lamp)
- ❊ முகத்தில் காணப்படும் வெட்டுக்காயங்கள், மாறாவடுக்களை நீக்கும் சிகிச்சை முறை (Glycolic)
- ❊ பாலுண்ணிகள், காய்களை அகற்றும் சிகிச்சைமுறை
- ❊ கரும்புள்ளிகளை அகற்றல் (Spot Treatment)
- ❊ பொடுகு நீக்கும் முறை (High Frequency)
- ❊ நிரந்தரமாக முடியை நீட்டுதல்-(Rebondling)
- ❊ முகத்தில் படிந்திருக்கும் கருமையை அகற்றுதல் (Pigmenatation)
- ❊ முகத்திற் காணப்படும் துவாரங்களை நீக்குதல் (Open Pores)

இவற்றை உள்ளடக்கியதாக மூன்று அல்லது நான்கு மாதங்களைக் கொண்ட பயிற்சிநெறியாக இந்தக் Course அமையும்.

☞ பயிற்சி முடிவில் டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.

| ஆரம்பமாகும் இடம்: | காலம் (புதிய நேரம்) |
|---|---|
| CME Tuition Center ஐயனார் வீதி, பருத்தித்துறை. | 18.07.2004 காலை 10.30 மணி |
| இல.94, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் (இந்து சமய குருகுலம் அருகில்) | 21.07.2004 காலை 11.00 மணி |
| மயூ கொமினிக்கேசன், யூனியனடி, உடுப்பிட்டி | வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன. |
| ஏசியன் கல்வி நிறுவனம், புத்தூர்ச் சந்தி, மீசாலை. | பின்னர் அறிவிக்கப்படும். |

- ★ உடுப்பிட்டியில் புதிதாகச் சேரவிரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும்.
- ★ எடிசன் அக்கடமியில் பதிவுகளை மேற்கொண்டவர்களும் புதிதாகச் சேரவிரும்புபவர்களும் தொடர்புகொள்ளவும்.
- ★ CME Tuition Centre இல் பதிந்தவர்களும் புதிதாகச் சேரவிரும்புபவர்களும் 18.07.2004 ஞாயிறு காலை 10.30 மணிக்கு சமுகந்தரவும்.

**மேலதிக விவரங்களுக்கு:**
**திருமதி B.அகிலா அவர்களுடன் தொடர்புகொள்ளவும்.**
**Tel: 021 2263365**
**0777570138**

(34-21-12-14) (34196)

# இஸ்ரேலிய இனவாதம் மீது இடியென வீழ்ந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு!



மேற்குக் கரை ஊடாகச் செல்லும் தடுப்புச் சுவர்

சிறுபான்மை இனத்தவரை அடக்கி, ஒடுக்கி அந்த இனத்தின் தாயக மண்ணை ஆக்கிரமித்து அட்டூழியம்புரியும் அரசுகளுக்கு ஓங்கி ஒரு 'குட்டு' வைத்துள்ளது ஐ.நாவின் சர்வதேச நீதிமன்றம்.

பலஸ்தீனர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் மேற்குக் கரைப்பகுதியிலிருந்து இஸ்ரேலுக்குள் பலஸ்தீன தீவிரவாதிகள் நுழைவதைத் தடுக்கும் நடவடிக்கை என்ற பெயரில் இஸ்ரேல் சுமார் 700 கிலோ மீற்றர்கள் நீளமான தடுப்புச் சுவரை எழுப்பி வருகிறது. இந்தத் தடுப்புச் சுவா தமது மண்ணை ஆக்கிரமித்து எல்லையை விரிவுபடுத்தும் நடவடிக்கை என்று பலஸ்தீனர்கள் எதிர்ப்புக் குரல் எழுப்பினர்.

இந்தநிலையில் இஸ்ரேல் அமைக்கும் தடுப்புச்சுவர் சட்ட்விரோதமானது என்றும் பலஸ்தீனப் பிரதேசத்தை ஆக்கிரமிக்கும் நடவடிக்கை என்றும் சர்வதேச நீதிமன்றம் கடந்த 9 ஆம் திகதி தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பு ஆக்கிரமிப்பாளர்களுக்கும் அவர்களுக்த 'முண்டு' கொடுககும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கும் 'நெத்தியடியாகஅமைந்துள்ளது.

### மிகநீண்ட சுதந்திரப்போர்

பிரிட்டனின் ஆட்சியின் கீழ் இருந்தது 'பலஸ்தீனம்' என்ற பரந்த பெரும் நிலப்பரப்பு. இரண்டாம் உலக யுத்தத்தின்பின்னர் ஜேர்மனியிலிருந்து வெளியேறிய மற்றும் உலகின் பல பகுதிகளிலும் பரவிக்கிடந்த யூதர்களை ஒன்றுதிரட்டி அமெரிக்கா, பிரிட்டன், போன்ற நாடுகள் பலஸ்தீனத்தில் குடியேறின. இதனால், அங்கு யூதர்கள் பெரும்பான்மையினர் ஆகினர். அப்பகுதிக்கு 1949 ஆம் ஆண்டு இஸ்ரேல் என்று பெயரிட்டு இஸ்ரேலியர் தலைமையில் தனிநாடு ஒன்று உருவாக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த அரபுநாடுகள் இஸ்ரேல் மீது போர்ப்பிரகடனம் செய்தன. யுத்தம் மூண்டது.

அப்போது ஐ.நா.தலையிட்டு யூதப்பகுதி மற்றும் பலஸ்தீனப்பகுதி என்று பிரித்து நிலைமையை ஓரளவு சமாளித்தது.

ஆனால், 1967 ஆம்ஆண்டு இஸரேலுக்கும் அரபுநாடுகளுக்கும் இடையே மீண்டும் யுத்தம் வெடித்தது. அரபுப் பிரதேசத்தில் காலூன்ற விரும்பிய அமெரிக்கா இஸ்ரேலுக்கு அனைத்து உதவிகளையும் வழங்கியது.

இதனையடுத்து, சினாய் பாலைவனப்பகுதி, கோலன்குன்று, பலஸ்தீனர்கள் பெரும்பான்மையாகவுள்ள ஜோர்டானின் மேற்குக் கரை மற்றும் காஸா ஆகிய பகுதிகளை இஸ்ரேல் கைப்பற்றியது

அன்றுமுதல் உலகின் நீண்டகால சுதந்திரப் போராட்டங்களில் ஒன்றான பலஸ்தீன விடுதலைப் போராட்டம் புதிய உத்வேகம் எடுத்துத் தொடர்கிறது.

மேற்குக்கரை மற்றும் காஸாவில் பெயருக்கு மட்டும் சுயாட்சி வழங்கியுள்ள இஸ்ரேல் அங்கு யூதக்குடியிருப்புகளை அதிகம் அமைத்து வருகிறது.

### பலஸ்தீனக் கிளர்ச்சி

இத்தகைய சூழ்நிலையில் தான் 2002 ஆம் ஆண்டு அப்போதைய எதிர்க்கட்சித் தலைவரும், தற்போதைய பிரதமருமான ஏரியல் ஷரோன், பலஸ்தீனர்களின் கடும் எதிர்ப்பை உதாசீனப் படுத்திவிட்டு ஜெருசலேமில் உள்ள சர்ச்சைக்குரிய இடத்தில் அமைந்த மசூதி ஒன்றுக்குச் சென்றார்.

இதனால், ஆத்திரமுற்ற பலஸ்தீனர்கள் பெரும் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

அந்தக் கிளர்ச்சி இஸ்ரேலில் தற்கொலைத் தாக்குதல்கள், பலஸ்தீனப் பிரதேசத்தில் இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கை, பலநூறு உயிர்கள் பலி என்று விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது.

இதற்கிடையில், பலஸ்தீனர்களுக்கு தனிநாடு அமைப்பது உள்ளிட்ட யோசனைகளுடன் நீண்டகால அமைதித் திட்டமொன்றை அமெரிக்கா முன்வைத்துள்ளது. அந்தத் திட்டம் 'சாண் ஏறினால் முழம் சறுக்கும்' நிலையில் தள்ளாடிக் கொண்டிருக்கிறது.

### தடுப்புச் சுவர்

இதற்கிடையில் மேற்குக் கரைப் பிரதேசத்திலிருந்தே பலஸ்தீனத் தீவிரவாதிகள் இஸ்ரேலுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்துகிறார்கள் என்றும் -

ஆகவே, தனது மக்களை தாக்குதல்களிலிருந்து பாதுகாக்க மேற்குக் கரையின் பலஸ்தீனப் பகுதிக்கும் யூதப்பகுதிக்கும் இடையே தடுப்புச்சுவர் ஒன்றை அமைக்கப் போவதாகவும் -

2002 ஆம் ஆண்டு இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் அறிவித்தார்.

அத்துடன் அதே ஆண்டு ஜூன் மாதம் தடுப்புச்சுவரின் கட்டுமானப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டன. அன்றிலிருந்து இந்தத் தடுப்புச் சுவர் குறித்த விமர்சனங்களும் வெளிவரத் தொடங்கின.

மேற்குக் கரையில் சுமார் 700 கிலோ மீற்றர்கள் நீளத்துக்கு இந்தத் தடுப்புச்சுவரை அமைக்க இஸ்ரேல் திட்டமிட்டது. அதில் 640 கிலோமீற்றர்கள் வரையான கட்டுமானப் பணிகள் முடிவடைந்துவிட்டன.

'கொங்கிறீட்' அத்திவாரமிடப்பட்டு சுவர் எழுப்பப்பட்டது. இருபுறமும் கம்பிவேலிகளும் இடப்பட்டன. அவற்றுக்கிடையே மணல்கொட்டப்பட்டு, அதனூடாக யாராவது சென்றால் அவர்களது காலடித்தடங்களை கண்டுபிடிக்க ஏற்பாடானது.

சுமார் 8 மீற்றர்கள் உயரமான சுவர் 'கொங்கிறீட்' பலகைகளை இணைத்து அமைக்கப்பட்டது. நெருக்கமாகக் கண்காணிப்புக் கோபுரங்கள் வேறு.

இப்படி அமைக்கப்பட்ட தடுப்புச்சுவர் 1967 ஆம் ஆண்டு யுத்தத்துக்கு முன் யூதப்பகுதியிலிருந்த எல்லையைத் தாண்டி பலஸ்தீனப் பகுதிக்குள் - ஆக்கிரமிப்பாக - அமைக்கப்பட்டதும் பலஸ்தீனப் பகுதிக்குள் இருந்த யூதக்குடியிருப்புகள் பலவற்றை இஸ்ரேலுடன் இணைக்கும் வகையில் தடுப்புச் சுவர் 'சுற்றிவளைத்து' நிறுவப்பட்டதும் பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்தன.

### எதிர்வாதங்கள்

பலஸ்தீனப் பகுதியை ஆக்கிரமிப்பதில்லை என்ற இஸ்ரேலின் நிலைப்பாட்டையும் அரபு நாடுகளுடன் சமாதானத்தை ஏற்படுத்தும் எண்ணத்தையும் இந்தத் தடுப்புச்சுவர் குழிதோண்டிப் புதைத்துவிட்டதாகவே விமர்சகர்கள் கருதினர்.

அதுமட்டுமன்றி நூற்றுக்கணக்கான பலஸ்தீன விவசாயிகள் மற்றும் தொழிலாளர்க்ள் தமது மண்ணுடனான தொடர்புதுண்டிக்கப்பட்டு பொருளாதார நெருக்கடி தோற்றுவிக்கப்பட்டது.

குறிப்பாகத் தடுப்புச் சுவரால் பாதிக்கப்பட்டது 'பழக்கூடை' என்று வர்ணிக்கப்படும் 'குல்குல்யா' நகராகும். பழத்தோட்டங்கள் நிறைந்த இந்த பலஸ்தீன நகரம் தடுப்புச் சுவரால் மூன்று பக்கங்களிலும் அடைக்கப்பட்டது. இங்கு வாழும் சுமார் 40 ஆயிரம் பலஸ்தீனர்கள் தடுப்புச் சுவரில் அமைக்கப்பட்ட ஒருசோதனைச் சாவடி ஊடாகவே இஸ்ரேலியப் பகுதிக்குள் சென்று வரமுடியும். அதுமட்டுமன்றி இப்பிரதேசத்தில் உள்ள இரண்டாவது பெரிய விநியோகப் பாதை தடுப்புச் சுவரால் துண்டிக்கப்பட்டது.

இதனால், பலஸ்தீன விவசாயிகள் தமது பண்ணைகளுக்கு நீர்வளம் பெறவும், உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தவும் முடியாது அல்லலப்பட்டனர்.

### ஆக்கிரமிப்பு

தடுப்புச்சுவர் அமைக்கப்பட்ட இடமும் பலஸ்தீனர்களின் கடும் எதிர்ப்புக்குக் காரணமாகிவிட்டது.

பலஸ்தீனப் பகுதியின் 58 சதவீத நிலப் பரப்பை யூதப்பகுதியுடன் இணைக்கும் வகையில் தடுப்புச் சுவர் அமைக்கப்பட்டிருப்பதால், எதிர்காலத்தில் பலஸ்தீன இராச்சியம் அமையும் போது இதனையே எல்லையாகக் கொண்டு தம்மை மேற்குக் கரையின் மிகுதி 42 சதவீத நில்ப்பரப்புக்குள் முடக்கி விடும் இஸ்ரேலின் சதித் திட்டமே இது என்று பலஸ்தீனர்கள் வாதிட்டனர்.

ஆனால், இஸ்ரேலோ, இத்தடுப்புச் சுவர் பாதுகாப்புக் காரணங்களுக்காகவே அமைக்கப் படுகிறது. அதை வைத்து எதிர்காலத்தில் எல்லை வகுக்கும் திட்ட மெல்லாம் கிடையாது என்று கூறியது.

### சட்டபூர்வ நடவடிக்கைகள்

இந்தப் பிரச்சினையை மனித உரிமை அமைப்புக்கள் கையிலெடுத்த பின்பே சட்ட நடவடிக்கைகள் வலுப்பெற்றன. இஸ்ரேலில் உள்ள மனித உரிமை அமைப்புகள் இஸ்ரேலிய நீதிமன்றங்களில் தடுப்புச் சுவர் அமைப்பதற்கு எதிராக வழக்குகளைத் தொடுத்தன.

இதன் முக்கிய விளைவாக இஸ்ரேலிய உயர் நீதிமன்றம் கடந்த பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி தடுப்புச் சுவர் விவகாரத்தை விசாரணைக்கு ஏற்றது. இந்த விசாரணையின் சட்ட சம்பிரதாயங்கள் தொடர்கின்ற போதும் கடந்த ஜூன் மாதம் இஸ்ரேலிய உயர் நீதிமன்றம் தனது இடைக்காலத் தீர்ப்பில், ஜெருசலேமின் வடமேற்குப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 30 கிலோ மீற்றர்கள் நீளமான தடுப்புச் சுவர் பலஸ்தீனர்களுக்கு சிரமங்களை அளிப்பதால் அதனை மாற்றியமைக்க வேண்டும் என்று தெரிவித்தது.

இது தடுப்புச் சுவரை எதிர்க்கும் மனித உரிமை அமைப்புகளுக்கும் உற்சாகமளிப்பதாக அமைந்தது.

### அமெரிக்காவின் நிலை

மேற்காசியாவில் தடுப்புச்சுவர் விவகாரம் கொதித்துக் கொண்டிருக்க ஜனநாயகம், மனித உரிமை, தீவிரவாத எதிர்ப்பு என்றெல்லாம் 'படம்' காட்டும் அமெரிக்கா, தனது செல்லப் பிள்ளையான இஸ்ரேலை தட்டிக் கொடுத்தது.

கடந்த ஏப்ரல் மாதம் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் தடுப்புச் சுவர் குறித்த அமெரிக்காவின் நிலைப்பாட்டை பின்வருமாறு விளக்கினார்.

'தடுப்புச் சுவர் பாதுகாப்புக்காக அமைக்கப் படுகிறதே தவிர, அரசியல் எல்லை அல்ல. அது தற்காலிகமானதே தவிர நிரந்தரமானதல்ல.

இறுதித் தீர்வுகிட்டும் போது எல்லை வகுக்கப்பட்டால் பாதுகாப்புக் காரணங்களுக்காக தடுப்புச் சுவர் அமைக்கப்பட்ட பாதை கவனத்தில் கொள்ளப்படும். ஆகவே பலஸ்தீனர்கள் பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதை நிறுத்த வேண்டும் என்றார் அமெரிக்க அதிபர்.

### ஐ.நாவின் நிலை

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் தடுப்புச் சுவரைக் கண்டித்து மனித உரிமைகளுக்கான ஐ.நா. அமைப்பு அறிக்கை வெளியிட்டது. அதில தடுப்புச் சுவர் சட்ட விரோதமானதும் விதிகளுக்கு முரணான இணைப்பு நடவடிக்கை என்றும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

தடுப்புச் சுவருக்கும் இஸ்ரேலியப் பகுதிக்கும் இடையே வாழும் சுமார் 2 இலட்சத்து 10 ஆயிரம் பலஸ்தீனர்கள் தமது தாய் மண்ணுடன் தொடர்பு கொள்வதை, தொழில் வாய்ப்புப் பெறுவதை, பாடசாலை செல்வதை இந்தத தடுப்புச் சுவர் தடுத்துவிட்டதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

ஆனால், இந்த அறிக்கை ஒரு தலைப்பட்சமான, அரசியல் மயமான, விரோத மனப்பான்மை கொண்ட ஒன்று என்று இஸ்ரேல் கூறியது.

### சர்வதேச நீதிமன்றிடம்...

இந்தநிலையில், கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் சர்வதேச நீதிமன்றத்திடம் தடுப்புச் சுவர் விவகாரத்தை ஐ.நா. பொதுச்சபை கொண்டு சென்றது. தடுப்புச் சுவர் விவகாரம் குறித்து ஆலோசனை அறிக்கை தரும்படி அபபோது சர்வதேச நீதிமன்றத்திடம் ஐ.நா. பொதுச் சபை கோரியது.

ஆனால், இதற்கு இஸ்ரேல், அமெரிக்கா ஆகிய நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற மேற்றுலக அமைப்புகளும் முட்டுக்கட்டை போட முயற்சிததன.

பலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான பிரச்சினை அரசியல் ரீதியானதே தீவிர சட்டரீதியானதல்ல என்றும் -

ஆகவே, தடுப்புச் சுவர் விவகாரம் குறித்து ஆராய சர்வதேச நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என்றும் - அவை வாதிட்டன. ஆனால், இந்த எதிர்ப்பை நிராகரித்த சர்வதேச நீதிமன்றம் 'அரசியல் நிலைப்பாட்டின் அடிப்படையில் அமைந்த சட்ட விவகாரம்' இது என்று கூறி தடுப்புச் சுவர் விவகாரத்தை விசாரித்தது.

### தீர்ப்பு

இந்த விவகாரத்தில் சர்வதேச நீதிமன்றம் முக்கியமான ஒரு விடயத்தை முதலில் ஆராய வேண்டியிருந்தது. மேற்குக் கரையில் அமைக்கப்பட்ட கட்டுமானத்தை எப்படிக் குறிப்பிடுவது என்பதே அதுவாகும். பலஸ்தீனர்கள் கூறுவது போன்ற சுவரா? இஸ்ரேல் கூறுவது போன்ற வேலியா? ஐ.நா. பொதுச் செயலாளர் கோபி அனான் கூறுவது போன்று தடையா? இதற்கு 'அது சுவர்' என்று சர்வதேச நீதிமன்றம் தீர்மானித்தது.

இறுதியாக பல்வேறு நாடுகளையும் சேர்ந்த 15 நீதியரசர்களைக் கொண்டதும், நெதர்லாந்தின் ஹேக் நகரில் இயங்கி வருவதுமான சர்வதே நீதிமன்றம், தடுப்புச் சுவர் தொடர்பான தனது தீர்ப்பை கடந்த 9 ஆம் திகதி வெளியிட்டது.

அந்தத் தீர்ப்பின் முக்கிய விடயங்கள் வருமாறு:-

- பலஸ்தீனப் பகுதியை ஆக்கிரமித்து இஸ்ரேல் அமைத்து வரும் தடுப்புச் சுவர் சர்வதேச சட்டங்களுக்கு முரணானது. (இதனை அமெரிக்க நீதியரசர் தொமஸ் பர்ஜென்டல் தவிர்ந்த 14 நீதியரசர்கள் ஏற்றனர்)
- இஸ்ரேல் தடுப்புச் சுவரை உடனடியாக அகற்ற வேண்டும். (இதனையும் அமெரிக்க நீதியரசர் ஏற்கவில்லை)
- நான்காவது ஜெனீவா உடன்படிக்கையின் பிரகாரம் யுத்தகாலத்தில் பொதுமக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்ட வேண்டும். இதன் அடிப்படையில் தடுப்புச் சுவர் கட்டுமானப் பணிக்கு பிற நாடுகள் உதவக் கூடாது. (இதனை அமெரிக்க நீதியரசருடன் நெதர்லாந்து நீதியரசர் பீற்றர் எச்.குயிச்மன்ஸ்ஸூம் எதிர்த்தார்)

உலக வலம்

- தடுப்புச் சுவரால் இப்பகுதியில் எழுந்துள்ள சட்டவிரோத சூழ்நிலையை முடிவுக்குக் கொண்டு வர ஐ.நா. பொதுச்சபை மற்றும் பாதுகாப்புச் சபை ஆகியவை வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

இவ்வாறு 15 பேர் கொண்ட நீதியரசர்கள் குழு பெரும்பான்மை ஆதரவின் அடிப்படையில் தீர்ப்பளித்தனர்.

### இனி என்ன?

சர்வதேச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு உடனடியாக இஸ்ரேலைக் கட்டுப்படுத்தாது. ஆனாலும், பலஸ்தீனர்களுக்கு இது பலம் சேர்க்கும். அமெரிக்காவோ வழக்கம் போல,

'இந்தத் தீர்ப்பால் நாம் மேற்கொண்டுள்ள மேற்காசிய சமாதான முயற்சிக்குப் பாதிப்பு ஏற்படப் போகிறது என்று முதலைக் கண்ணீர் வடிக்கிறது.

இந்த நிலையில் சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பை நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு ஐ.நாவுக்கு ஏற்பட்டுள்ளது. இதன்படி ஐ.நா.பாதுகாப்புச் சபை இத் தீர்ப்பை அங்கீகரிக்க வேண்டும். ஆனால், ஜனநாயகம், தீவிரவாத எதிர்ப்பு என்றெல்லாம் பிளந்து கட்டும -


பலஸ்தீனர்கள் மீது இன ஒழிப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ள இஸ்ரேலுக்கு ஆதரவளிக்கும் - அமெரிக்கா, பாதுகாப்புச் சபையில் சர்வதேச நீதிமன்றத் தீர்ப்பு தீர்மானமாக நிறைவேற விட்டு விடுமா? என்பதற்கு இல்லை என்பதே அனைவரும் ஏற்றுக்கொள்ளும் விடையாகும்.

பலஸ்தீனர்களின் சுய நிர்ணய உரிமைக்கு சாவு மணி அடித்து தனி மனித உரிமைகளை புதைத்து, ஐநா.உடன்படிக்கைகளுக்கு விரோதமாக, சர்வதேசச் சட்டங்களை தூக்கியெறிந்து விட்டு சர்வதேச நீதிமன்றத் தீர்ப்பை ஏற்க முடியாதென்று கூறுகிறது இஸ்ரேல். அதற்கு ஒத்து ஊதுகிறது அமெரிக்கா.

இந்த நிலையில் சர்வதேச நீதிமன்றத் தீர்ப்பை ஐ.நா. நிலை நாட்டுமா?

★

### தடுப்புச் சுவரின் அமைப்பு



## ஆசிரியர் ஆளணிச்சேர்ப்பு போட்டிப் பரீட்சை - 24.07.2004

வடமராட்சி லயன்ஸ் கழக ஆதரவில்

### இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

இடம் :யா/தேவரையாளி இந்துக் கல்லூரி - கரவெட்டி

காலம் : 17, 18.07.2004 (சனி, ஞாயிறு)

| | விரிவுரை | 17.07.2004 | 18.07.2004 |
|---|---|---|---|
| பொது அறிவு | திரு.க.கௌரிஹரசன் (ஆசிரியர்) | 11.00-1.00 | 9.00-11.30 |
| உளச்சார்பு | திரு.க.கனகரத்தினம் (பிரதேச செயலர்) | 3.30-6.00 | 2.30-6.00 |

லயன் V.S. சிவநாதன் (செயலாளர்).

(சி.36026)(40-12-16) - வடமராட்சி லயன்ஸ் கழகம்.

## துடுப்பாட்டப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

கொமர்ஷல் வங்கியின் அனுசரணையுடன் யாழ்ப் பாண மாவட்டப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங் கம் நடத்தும் 16 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டமும் பரிசளிப்பு நிகழ்வும்

காலம் : இன்று 17.07.2004 சனிக்கிழமை

இடம்: யா/சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானம்

மோதும் அணிகள் சென். பற்றிக்ஸ் கல்லூரி எதிர் யாழ் இந்துக்கல்லூரி

பிரதம விருந்தினர்: E.S.P. நவரட்ணம் (E.S.P நிறுவன உரிமையாளர்).

(சி/36036)(40-12-16)

Jayoda **ஜயோதா** ජයෝද

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7269952 முதல் 7282607 வரை

சீட்டிழுப்பு இல. 50 திகதி 15-07-2004

வெற்றி எண்கள் **903880** சுப்பர் எண் **19**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,26,24,700/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,26,24,700/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 50,000/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 113 | 5,000/- | 5,65,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,129 | 500/- | 5,64,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,260 | 50/- | 5,63,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,11,600 | 10/- | 11,16,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 118 | 1,000/- | 1,18,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,126 | 100/- | 1,12,600/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,154 | 20/- | 2,23,080/- |
| மொத்தம் | 1,36,521 | | 48,57,180/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 48,57,180/-

இந்த திங்கட்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட்

ரூ. **1,29,37,825/-**

தொடர் இல. 6308051 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 ஜுலை 19 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

7272382-0-79
7278494-0-36
7276154-7-22
7276779-3-02
7273224-8-76

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் ஏரம்பமூர்த்தி (இராமையா)

மூளாயைப் பிறப்பிடமாகவும் பன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்காலிகமாக டென்மார்க்கில் வசித்தவருமாகிய நாக லிங்கம் ஏரம்பமூர்த்தி நேற்று (16-07-2004) வெள்ளிக்கிழமை டென் மார்க்கில் இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் மூளாயைச் சேர்ந்த நாகலிங்கம் - லட்சுமிப்பிள்ளை தம்பதிக ளின் மகனும் காமாட்சிப்பிள்ளையின் பாசமிகு கணவரும் ரமேஸின் தந்தையும் திருமதி சிவானந்தன் (மலேசியா), திருமதி லோ.மகேசன் (மலேசியா) காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை (மலேசியா) ஆகியோரின சகோதரனும் காலஞ்சென்ற அன்னப்பிள்ளை கந்தையா மற்றும் திருமதி சரஸ்வதி கோபாலசாமி, திருமதி பாக்கியலட்சுமி சண்முகம், காலஞ் சென்ற கணேஸ்வரி மயில்வாகனம் ஆகியோரின் மைத்துனரும் கணப திப்பிள்ளை கோபாலசாமியின் (தும்பளை) சகலனும் யாதவன், ராகவன், ரஜீவன், ராட்சகன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 24-07-2004 சனிக்கிழமை டென் மார்க்கில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம.சற்குணசிங்கம் (மைத்துனர்).

*திகிரி,*
*தும்பளை, பருத்தித்துறை.*

(34207)(40-12-16)

## நல்லூர் பிரதேச சபை

## வேலைகளிற்கான கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளிற்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் (ICTAD) தரம் M-9 பதிவுச்சான்றிதழ் வைத்திருப்பவர்களிடம் இருந்து கோரப்படுகின்றது. கீழ்க்குறித்த வேலை களுக்கான கேள்விவைப்புப் பணத்தையும் கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலு வலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:- 19.07.2004 திகதி தொடக்கம் 29.07.2004 திகதி பி.ப. 3.00மணிவரை
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி:- 30.07.2004 ந.ப. 12.00 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி :- 30.07.2004 பி.ப. 2.00 மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்).
04. கேள்வியை ஏற்கவோ, மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
05. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை செயலாளர், நல்லூர் பிரதேச சபைக்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப்பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்னும் விலாசத் திற்கு 2ஆம் பந்தியில் குறிப்பிட்டதற்கு அமைவாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
6. மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மீளளிக்கப்படாத வற் வரி |
|---|---|---|---|---|
| 01. | கோயில் வீதி. 1ஆம். 2ஆம் வீதி. கல்லிட்டுத்தாரிடல் | 2650.00 | 500.00 | 75.00 |
| 02. | சி.சி.த.கலவன் பாடசாலை வீதி. கல்லிட்டுத்தாரிடல் | 4700.00 | 500.00 | 75.00 |
| 03. | சைவப்பாடசாலை வீதி 1ஆம் குறுக்கு வீதி. கல்லிட்டுத்தாரிடல் | 2050.00 | 500.00 | 75.00 |
| 04. | செல்வநாயகம் வீதி. கல்லிட்டுத்தாரிடல் | 2450.00 | 500.00 | 75.00 |
| 05. | நேதாஜி வீதி. கல்லிட்டுத்தாரிடல் | 4750.00 | 500.00 | 75.00 |
| 06. | நாமகள் வீதி கல்லிட்டுத்தாரிடல் | 3400.00 | 500.00 | 75.00 |
| 07. | பரவக்குளம் வீதி கல்லிட்டுத்தாரிடல் | 3250.00 | 500.00 | 75.00 |
| 08. | கேணியடி வீதி கல்லிட்டுத்தாரிடல் | 2400.00 | 500.00 | 75.00 |
| 09. | கொக்குவில் குறுக்கு வீதி கல்லிட்டுத்தாரிடல் (ஊனமுற்றோர் புனர்வாழ்வுக்கழக வீதி) | 1250.00 | 500.00 | 75.00 |
| 10. | பெட்டி மதகு அமைத்தலும் கேற் வேலையும் - கொக் குவில் சந்தை. | 3700.00 | 500.00 | 75.00 |
| 11. | செபஸ்தியார் வீதி 2ஆம் முறை தாரிடல் | 1500.00 | 500.00 | 75.00 |

**கூறுவிலை கோரல்**

EPSON - LQ 2180 - PRINTER - A3 Size

குறிப்பிட்ட PRINTER வழங்க விரும்புவோர் அதற்கான கூறுவிலையை சுயமாகத் தயாரிக்கப்பட்ட தங்களது நிறுவன கடிதத் தலைப்பில் 30.07.2004 ந.ப.12.00 மணிக்கு முன் கிடைக்கத்தக்கதாக எமக்கு அனுப்பிவைக்கு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

தலைமை அலுவலகம்,
நல்லூர் பிரதேச சபை.
16.07.2004

பொன்னையா வைரமுத்து
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

(சி/36035)(40-12-16-33)

## ஆயுள் காப்பீட்டுக் கூட்டுத்தாபனம் (இலங்கை) வரை.

## ஓராண்டு நிறைவுப் பூர்த்தி விழா

கடந்த 09.07.2004 இல் ஓராண்டு நிறைவுகாணும் தாபனம்

காலம்: இன்று (17.07.2004) சனிக்கிழமை

ஜெனரல் மனேஜர் S.S.மதியாபரணன்

அவர்களின் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறும்.

## எமது காக்கும் கரங்கள்

கடந்த ஓராண்டாக எங்களுடைய சேவையை மிகவும் திறம்பட வழங்கியுள்ளோம்.

யாழ். வாழ் மக்களே!

நீங்களும் எங்கள் கூட்டுத்தாபனத்தில் அங்கத்தினராக இணைந்து உங்கள் வாழ்க்கையில் பல நன்மைகள் அடைந்திட முன்வாருங்கள். உங்களுக்காகச் சேவைசெய்ய நாம் காத்திருக்கின்றோம்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், நலன்விரும்பிகள், எங்கள் காப்புறுதி பிரதம தலைமை முகவர்கள் மற்றும் முகவர்கள் ஆகியோருக்கு எமது ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு மகிழ்ச்சி கலந்த நன்றிகளைத் தெரிவித்து வாழ்த்துக்களை கூறுவதில் பெருமிதமடைகின்றோம்.

எங்கள் சேவை உங்கள் தேவைக்கே

### ஆயுள் காப்பீட்டுக் கூட்டுத்தாபனம் (இலங்கை) வரை

55, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

(R.G. கட்டடம், முதலாம்மாடி) Tel: 6325, 6326, 7797.

(34198)(34-12-40-16)

# கொழும்பில் கைதான தமிழ் இளைஞர் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில்

கொழும்பு, மோதரப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் என்று கருதப்படும் இளைஞர் விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

வவுனியா நொச்சிக்குளத்தைச் சேர்ந்த தவராசா ரமேஷ் (வயது22) என்ற வாலிபரே நேற்று முன்தினம் மோதரைப் பகுதியில் தனது உறவினர் ஒருவரின் விலாசத்தைத் தேடி அலைந்து கொண்டிருந்தபோது ஓட்டோச் சாரதிகளால் பிடிக கப்பட்டுப் பின்னர் பொலீஸாரிடம் ஒப்படைக் கப்பட்டார்.

பொலீஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது தான் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் என்பதை ஒப்புக்கொண்ட அந்த இளைஞன் தனது உறவினர் ஒருவரைச் சந்திப்பதற்காக தான் கொழும்புக்கு வந்தார் எனவும் பொலீஸாருக்குத் தெரிவித்துள்ளார்.

நேற்று புதுக்கடை மஜிதிரேட் நீதிமன்றில் ஆயர் செய்யப்பட்ட தவராசா ரமேஷ் எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக் கப்பட்டார்.

இவரின் கைது பற்றி கொழும்பு மாவட்டப் பிரதிப் பொலீஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத் தெரிவித்ததாவது:

விடுதலைப் புலிகளின் அடையாள அட்டையையும் சயனைட்டையும் வைத்திருந்ததற்காக யாரையும் கைது செய்யமுடியாது.

இருப்பினும் குறிப்பிடப்பட்ட நபர் மீது சந்தேகம் எழுந்தால் விசாரணைக்கு உட்படுத்த முடியும். எனவே மோதரையில் கைது செய்யப்பட்டவரிடம் ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றப்படாவிட்டாலும் அவர் தொடர்பாக மேலதிக தகவல்கள் பெறுவதற்காகவே விளக்க மறியலில் வைக்கப்பட்டார் என்றார்.

சிங்கள நாளிதழ் ஒன்றும் அதன் சகோதரப் பத்திரிகையான ஆங்கில நாளிதழ் ஒன்றும் ஜனாதிபதியை கொலை செய்வதற்காகவே கொழும்புக்கு விடுதலைப் புலிகளால் அனுப்பி வைக் கப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதல் நபர் இவர் எனச் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆனால் குறிப்பிட்ட இளைஞர் தற்கொலைத தாக்குதல் நபர் என்பதைக் குறிப்பிடும் தகவல் ஏதும் விசாரணைகளில் தெரியவரவில்லை என்று மூத்த பொலீஸ் அதிகாரி தெரிவித்தார்.

(ஐ-க)

# மாகாண முதலமைச்சர்களாக நேற்று ரெஜினோல்ட், மஹிபால பதவியேற்பு

மேல் மாகாணத்தின் புதிய முதலமைச்சராக ரெஜினோல்ட் கூரே நேற்றுச் சத்தியப்பிரமாணம செய்து, பதவியேற்றுக் கொண்டார்.

மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலான முன்னிலையில் அவர் சத்தியப்பிரமாணம் செய்தார்.

ரெஜினோல்ட் கூரே முன்னரும் மேல் மாகாண முதலமைச்சராகப் பதவி வகித்தவர். கடந்த பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு, எம்.பியாகத் தெரிவானதுடன் ஊடகத்துறை அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார். பின்னர் அப்பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்டார்.

அதேவேளை, சப்பிரகமுவ மாகாணத்தின் முதலமைச்சராக மஹிபால ஹேரத் நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். மாகாண ஆளுநர் சாலிய மத்தியூ முன்னிலையில் அவா பதவியேற்றார்.

மஹிபால ஹேரத் சப்ரகமுவ மாகாணத்தில் எட்டாவது முதலமைச்சர் என்பது குறிப்பிடத் தக்கது.

ஊவா மாகாண முதலமைச்சராக ஏ.எம்.புத்ததாச பதவியேற்பார் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், நேற்று சத்தியப்பிரமாண வைபவம் இடம்பெறவில்லை.

புதிய முதலமைச்சரின் பெயர் தனக்கு இன்னும் அறிவிக்கப்படவில்லை என ஊவா மாகாண ஆளுநர் சீ.நந்தா மெத்தியூ எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(ஐ-க)

# அத்தியடி வீட்டில் நள்ளிரவு நகை, பணம் கொள்ளை

வலி.வடக்கு,ஜூலை17

வட்டு ஜன்னல் கம்பியை உடைத்து உட்புகுந்த திருடர்கள் சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், பணம் என்பனவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு நேரம் அத்தியடிப்பிள்ளையார் ஆலயக்குருக்கள் வி.பிரபாகர ஐயர் வீட்டில் இந்தத் துணிகரக் கொள்ளை இடம்பெற்றுள்ளது.

திருமணம் நடைபெற்று மூன்றாம் நாள் பருத்தித்துறையில் உள்ள பெண் வீட்டிற்கு மணமகனுடன் உறவினர் அனைவரும் சென்றிந்த வேளையில் வீட்டில் இந்தக் கொள்ளை இடம் பெற்றுள்ளது.

வீட்டுக்காவலுக்காக வயோதிபப் பெண் ஒருவர் மட்டுமே தங்கயிருந்தார். யன்னல் கம்பி ஊடாக உள்நுழைந்த திருடர்கள் தங்க நகைகள் மற்றும் 60 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைக் கொள்ளையடித்துக் கொண்டு வீட்டின் உட்புறம இருந்த கதவைத் திறந்து வெளியேறமுற்பட்டனர்.

கதவு திறக்கும் சத்தம் கேட்டு எழுந்த வயோதிப மாது சத்தமிடவே கத்திமுனையில் அவரைப் பயமுறுத்தியதுடன் அவரின் கைகளில் இருந்த தங்கக் காப்பையும் பலாத்காரமாக கழற்ற முற்பட்டுள்ளனர்.

வயோதிப மாது பயத்தில் சத்தம் இட்டதைத தொடர்ந்து அவரை நிலத்தில் தள்ளி வீழ்த்தி விட்டு கொள்ளையர்கள் அகப்பட்டதைக் கொண்டு தப்பியோடியுள்ளனர்.

இக்கொள்ளை தொடர்பாக யாழ்பொலீஸ் நிலையத்திலும், கிராம அலுவலரிடமும் முறையிடப்பட்டுள்ளது.

(ஐ-86)

## சாவ.இந்துவுக்கு புதிய அதிபர் நியமனம்

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபராக பளைக் கோட்டக் கல்வி அலுவலராக கடமையாற்றிய அகைலாயபிள்ளை மாகாண கல்விப்பணிப்பாளரினால் நியமிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் கடமைகளைப் பொறுப பேற்றுள்ளார்.

கல்லூரி அதிபாராகக் கடமையாற்றிய இகயிலைநாதன் கடந்த மாதம் இளைப்பாறியதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு புதிய அதிர் நியமிக்கப்பட்டுள்ளார்.

(எ-117-31)

## பதவி ஏற்பு நிகழ்வு

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் 2004/2005 வருட புதிய நிர்வாக சபையினரின் உத்தியோக பூர்வ பதவியேற்பு வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சித்தன்கேணி வட்டுக் கோட்டை பிரதான வீதியிலுள்ள கழக அலுவலகத்தில் நடை பெறவுள்ளது.

கழகத் தலைவர் லயன் ரி.வி.சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக வடபிராந்திய லயனஸ் கழக செயலாளர் லயன் செ.ஞானராஜா கலந்து-கொள்வார்.

கௌரவ விருந்தினராக முன்னாள் வலயத் தலைவர் டாக்டர் எஸ்சதாசிவம் கலந்துகொள்வார்.

(எ-135)

SHAMROCK
J/EACHCHAMODDAI Road.
A/L 2006
தமிழ்
செய்யுட்
கோவை
Sat. Sun. - 4.30 p.m.
Mr.S. சிவா
Logic
Mr.கலைச்செல்வன்.
(34175)(36)

# மரண அறிவித்தல்கள்

## செல்வி மரியா மக்டலீன் சின்னப்பு (ஞானம்)



**புனித பத்திரிசியார் கல்லூரியின் இளைப்பாறிய ஆரம்பப் பிரிவு தலைமை ஆசிரியை**

கொழும்புத்துறை, வளன்புரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது சில்லாலையை வசிப்பிடமாகவும் கொண்ட மரியா மக்டலீன் 15.07.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியர் சின்னப்பொடி சின்னப்பு, இரத்தினம் செபமாலை தம்பதியினரின் அன்பு மூத்தமகளும் திருமதிகள் பவுலினம்மா அந்தோனிப்பிள்ளை, காலஞ்சென்ற ஆரோக்கியம் தவராசா லில்லி கிறிஸ்டீன் - பொன்ராசா (கனடா), மேரி யோசப்பின் - ஸ்காவ்வர் (லண்டன்) மற்றும் அன்ரன் மரியராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 17.07.2004 இன்று பி.ப. ஒரு மணிக்கு இல்லத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியுடன் யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு பிற்பகல் 3.30 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டதன் பின் நல்லடக்கத்திற்காக புனித மரியாள் பேராலய சேமக்காலைக்கு எடுத்துச செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சில்லாலை தெற்கு,*
*சில்லாலை*
*பண்டத்தரிப்பு.* (34211)(36-11-18)

தகவல்:
இ.செபமாலை
(தாயார்).

## நாகராசா கந்தசாமி

வேலணை மேற்கு, 7 ஆம், வட்டாரத்தை நிரந்தர வதிவிடமாகவும கலாசாலை வீதி (3 ஆம் ஒழுங்கை) திருநெல்வேலியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட நாகராசா கந்தசாமி அவர்கள் 13.07.2004 செவ்வாய்க்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் பள்ளம்புலத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நாகராசா - பார்வதி தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கணபதிப் பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும் கலாவதி, இளந்திரையன் (கனடா), இளமுகிலன் (கனடா), கலாநிதி (கனடா), இளரஞ்சிதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் திருநாவுக்கரசு, இந்துமதி (கனடா) , லதா (கனடா), முருகதாஸன (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சொர்ணம்மா, கோணேஸ்வரி மற்றும் மகேஸ்வரி காலஞ்சென்றவர்களான செந்தில்நாதன், லோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு, நடராசா மற்றும் குலராசா, அன்னலட்சுமி, நடனசுந்தரம் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அருமைச் சகோதரனும் அன்னலட்சுமியின் அன்பு மைத்துனரும் கருணாநிதி, சிவமலர், காலஞ்சென்ற தயாநிதி ஆகியோரின் சிறியதந்தையும் சுபாஜினி (யாழ். பல்கலைக்கழகம்), கிருபதாரணி (யாழ்.பல்கலைக்கழகம்), கிருபாகரன், தனுஷ்யா, பவித்ர்ஷன், தக்ஷிகா, சர்மியா, திபானி, திவேக்கா, நிதுர்ஷன், ஜெனுஷன், சோபியா, சிவாஜினி, பர்வதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.07.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று புதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*3 ஆம் ஒழுங்கை,*
*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.* (34219)(36-11-18)

தகவல்:
செ.திருநாவுக்கரசு
(மருமகன்).

## திருமதி புவனேஸ்வரி முத்துலிங்கம்

அல்வாயை வசிப்பிடமாக் கொண்ட திருமதி புவனேஸ்வரி முத்துலிங்கம் காலமானார்.

அன்னார் முத்துலிங்கம்(ஓய்வுபெற்ற லிகிதர்) அவர்களின் அன்பு மனைவியும் பத்மாசனி, கந்தவேள் (கனடா), சறோஜினிதேவி (மிருகவைத்தியர்,கரவெட்டி), நிர்மலாதேவி (ஆசிரியை யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்), குமரவேள் (லண்டன்), கோமளா (ஆசிரியை தேவரையாளி இந்துக் கல்லூரி), அமரவேள்(அமரர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசரத்தினம், வசந்தி (கனடா), மகேந்திரராஜா, யோகராசா (யாழ்.நீதிமன்றம்), றொபீனா (லண்டன்), சரவணன் (கட்டார்) ஆகியோரின் மாமியாரும் பரமேஸ்வரி, சதானந்தனின் அன்புச் சகோதரியும் ஆவார்.

இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*பெரியார் பகுதி,*
*அல்வாய் கிழக்கு,*
*அல்வாய்.* (சி-36037)(43-11-18-36)

தகவல்:
யோகராசா
(மருமகன்).

## கார்திகேசு முருகேசு - சின்னத்துரை



(ஓய்வுபெற்ற அதிபர்)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்கச் சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கா.மு.சின்னத்துரை அவர்கள் 14.07.2004 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் வள்ளியம்மையின் (ஓய்வுபெற்ற தாதி) அன்புக் கணவரும் இராஜராஜேஸ்வரி, புவனராஜேஸ்வரி ( மேல் நீதிமன்றம், வவுனியா), நகுலராஜேஸ்வரி (லண்டன்), கேதீஸ்வரராசா (M.S.K. Communication,Trinco) ,குருபரராஜா ( P.O.B கொழும்பு), பாலராஜேஸ்வரி (ஜேர்மனி), மங்களராஜேஸ்வரி (ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயம்), சக்தீஸ்வரராசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரன் (கிராமசேவையாளர் J/79 சிறாம்பியடி), உமாசரன் மற்றும் விஜயகுமாரன் (லண்டன்), ரதிகலா, துஷ்யந்தினி (கொமர்ஷல் வங்கி, யாழ்ப்பாணம்), நித்தியராசா(ஜேர்மனி), கருணானந்தன்(M.P.C.S. Kayts), சாந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பரசன்னா, பிரசாத், பிரதாப், பிரதீப், சோபிதா, சஜந், அஜந், பிரிஜந், சாஜிவீணா, ஆதவன், ஆரணி, ஆர்த்திகா, ஆருண்யா, ஆருஜா, மகிழ்ருதன், சானவி, ஜாலுகா, ஜனார்த்தனன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.07.2004 ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 10.30 மணிக்கு தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.31, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,*
*சுண்டுக்குளி,*
*யாழ்ப்பாணம்.* (34218)(36-11-18)

தகவல்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**அமரர் கந்தையா துரைராசா**

(இளைப்பாறிய தபாலாழியர்)

தாயின்மடி 12.09.1926 — இறைவன்அடி 17.06.2004

அன்போடு பேசி ஆதரவாய் எமை
அழைத்து – பெரும்
பண்போடு வாழ்ந்து மறைந்த அன்புத்
தெய்வமே – உன்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

முல்லையடி, பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எமது தெய்வம் அமரர் கந்தையா துரைராசாவின் இறப்பு செய்திகேட்டு துயர்உற்றோர், எமக்கு ஆறுதல் வழங்கியோர், உறவினர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் 17ஆம் திகதி 31ஆம் நாள் நினைவு நிகழ்வில் 19ஆம் திகதி அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளுவதோடு மதியஹ போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்போடு அழைக்கின்றோம்.

*முல்லையடி,*
*பளை.* (34212)(36-11-18)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவு கூறல்



**ஆசிரியர் திரு.பாஸ்கரலிங்கம்**
**அவர்களின் அன்புத் தந்தையார்**
**அமரர் திரு.காசிநாதர்**
அவர்களின் 31 ஆம் நாள் நினைவை யொட்டி அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த் திக்கின் றோம்.

மலர்வு: 11 ✿ 11 ✿ 1909
உதிர்வு: 17 ✿ 06 ✿ 2004

A2Z கணனி மையம்
வரணி,
நிர்வாகி, ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(34210)(36-11-18)

**விற்பனைக்கு**
9 ஸ்ரீ XXXX தொடர் இலக்கமுடைய மொறிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு: இல. 16, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 7654
0777 111694, 0776219840
(34206)(36)

**லக்சுமி சினிமா** இணுவில்
கார்த்திக் தனுராய்
தலைவாசல் விஜய், ரஞ்சித் இன்னும்
பலர் நடிப்பில்
இன்று
தினசரி: 11.00, 3.00, 7.00 (பி.நே)
(C-36291)(36)

[illegible] சங்கானை
அர்ஜுன், ரஞ்சிதா நடித்த
ஜெய் ஹிந்
தினசரி: 11.00, 2.45, 6.00 (பி.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு
THE GURU இரவு 8.45 (பி)
(ரீஸ்)
(C-36291)(36)

**ராஜா** யாழ்ப்பாணம்
சரத்குமார், சாக்ஷி, விஜயகுமார் நடித்த



மானஸ்தன்
(ரீஸ்)
புதியநேரம்: 10.30,2.30,6.30,9.30. மட்டும்

**நாகம்ஸ்** சுன்னாகம்
அர்ஜுன், அபிராமி, பிரகாஸ்ராஜ் நடித்த
வானவில்
காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பி.நே.)
(C/35739)(36)

# வடக்கு-கிழக்கில் செயற்படுத்தப்படும் உலக உணவுத் திட்டம் ஸ்தம்பிக்கும்

## எச்சரிக்கிறார் திட்டத்தின் இலங்கைக்கான பிரதிநிதி

கொழும்பு,ஜூலை17

அகதிகளுக்கான ஐநா தூதரகத்தின் உலக உணவுத் திட்டம் இலங்கையில் ஸ்தம்பிதம் அடையக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கையை உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான பிரதிநிதி ஜெப்டக் டிக் விடுத்துள்ளார்.

புனரமைப்பு, மீள்குடியமர்த்துகை, அகதிகள் விவகார அமைச்சின் செயலாளர் எம்.எஸ் ஜயசிங்கவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் அவர் இது தொடர்பான தனது கவலையை வெளிப்படுத்தியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் உணவு, நிவாரணம் வழங்கும் பிரிவே உலக உணவுத் திட்டமாகும். இதன் மூலம் கடந்த இரண்டு வருட காலமாக யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரண்டு கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான ஐம்பதாயிரம் மெற்றிக் தொன் அளவிலான உலர் உணவு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டம் மூலம் கடந்த இரண்டு வருடகாலமாக வடக்கு-கிழக்கு உட்பட மாவட்டங்களில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அபிவிருத்தி வேலைகளுக்கு உலர் உணவு வழங்குதல், தாய்சேய் போசாக்கின்மை ஒழிப்பு, பாடசாலை மாணவர்களுக்கான பகல் உணவு வழங்குதல் போன்ற எண்ணற்ற வேலைத்திட்டங்கள் உலக உணவுத் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இவை அனைத்தும் வடக்கு-கிழக்கு மக்களின் நலன்கருதி அப்போதைய புனரமைப்பு அமைச்சராகக் கடமையாற்றிய டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவின் பங்களிப்புடன் செயற்படுத்தப்பட்டன யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மககளுக்கு 2004 ஆம் ஆண்டிலும் பெருமளவிலான உணவை பகிர்ந்தளிக்க எமது அமைப்பு நடவடிக்கை மேற்கொண்டது.

புனரமைப்பு, மீள்குடியமர்த்துகை, அகதிகள் விவகார அமைச்சின் கீழ் இயங்கிய உலக உணவுத் திட்டத்தின் பணிப்பாளராக டி.எச்.ஜே. சேனாதீர கடமையாற்றினார். அவர் உலக உணவுத் திட்டத்தின் கீழ் இதற்கென விசேடமாக பயிற்றுவிக்கப்பட்டவர்.

ஆனால், உலக உணவுத் திட்டத்தின் வேண்டுகோளையும் பொருட்படுத்தாமல் சேனாதீரவின் பதவிக் காலத்தை அரசு நீடிக்காததால் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள எமது வேலைத்திட்டங்கள் ஸ்தம்பிதம் அடையலாம்.

கடந்த இரண்டு வருடகாலமாக உலக உணவுத் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியவர் சேனாதீர. அவரது பதவிக் காலத்தை நீடிக்கும்படி ஜனாதிபதியின் செயலாளரிடமும், புனரமைப்பு, மீள்குடியமர்த்துகை அமைச்சின் தற்போதைய பொதுப் பணிப்பாளர் ஹரீம் பீரிஸிடமும் நாம் கேட்டிருந்தோம்.

எமது எந்த வேண்டுகோளையும் பொருட்படுத்தாது, உலக உணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த விசேட தகுதியும் அனுபவமும் பெற்ற அதிகாரி ஒருவரை அரசு நீக்கிவிட்டது. அவருக்குப் பதிலாக அனுபவமற்ற தகுதியில் குறைந்த ஒருவரை நியமிப்பதால் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பலகோடி பெறுமதியான வேலைத்திட்டங்கள் ஸ்தம்பிதமடையலாம் என்ற சந்தேகம் எமக்கு எழுந்துள்ளது.

இலங்கை அரசினால் எடுக்கப்படும் தீர்மானங்களில் நான் தலையிடுவது முறையற்ற செயல். எனினும், இவ்வாறு அனுபவமும், தகுதியும் மிக்க அதிகாரிகளின் சேவையை பெறாது விடுவதால் எமது வேலைத்திட்டங்கள் ஸ்தம்பிதம் அடையக் கூடிய சாத்தியக் கூறுகள் தோன்றுகின்றன. எனவே, அதற்கான கவலையைத் தெரிவிப்பது எனது கடமையும் பொறுப்புமாகும் - என்றுள்ளது.

இந்தக்கடிதத்தின் பிரதிகள் நிதியமைச்சின் கீழ் இயங்கும் இலங்கையின் வெளிநாட்டு செலாவணி பணிப்பாளர், புனரமைப்பு அமைச்சின் பொதுப்பணிப்பாளர், கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, அம்பாறை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் அரச அதிபர்கள் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

உலக உணவுத்திட்டம் வடக்கு - கிழக்குப் பகுதிகளிலேயே பெருமளவில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## மட்டு., அம்பாறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தன் ஆகியோர் இதில் கலந்து கொள்ளவுள்ளனர் என்றும் -

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் அவர்கள் கலந்துரையாடுவார்கள் என்றும் -

அண்மையில் வன்னி சென்றுள்ள மட்டு. - அம்பாறை மாவட்டச் சிறப்புத் தளபதி த. ரமேஷ், மட்டு-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் ஆகியோர் இதில் கலந்து கொள்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.(ஒ)

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெர்னாண்டோபுள்ளேயும் விவசாய, கால்நடை, காணி நீர்ப்பாசன அமைச்சர் அனுர திஸாநாயக்கவும் இந்தியா செல்கின்றனர்.

அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே, இந்தியாவில் புதிய வர்த்தக உறவு பற்றி பல சுற்றுப்பேச்சுக்களில் கலந்துகொள்ளும் அதே வேளை, அமைச்சர் திஸாநாயக்க இரு நாடுகளுக்கும் இடையிலான விவசாய முயற்சிகளை வலுப்படுத்தும் கலந்துரையாடல்களில் பங்குகொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ராஜபக்ஷ பிரதமராகப் பதவியேற்றதன் பின் மேற்கொள்ளும் முதலாவது உத்தியோக பூர்வ விஜயம் இது.

## சமாதானத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சை ஆரம்பிக்க அமெரிக்கா அழுத்தம் கொடுக்கவேண்டும்.

★ வடக்கு- கிழக்கு மக்களின் மீள்குடியமர்வு மனிதாபிமானப் பணிகளை சீராக முன்னெடுக்க இடைக்கால நிர்வாக அமைப்பு ஒன்றை அமைக்க அரசுக்கு அமெரிக்கா ஆலோசனை வழங்க வேண்டும்.

இந்தச் சந்திப்பின்போது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 15 இற்கு மேற்பட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு அமெரிக்க அதிகாரியிடம் மகஜர்களை கையளித்தனர்.

அரசு - புலிகள் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்க அமெரிக்கா, இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று அந்த அமைப்புகளும் கோரியுள்ளன.

(மற்றொரு செய்தி 2ஆம் பக்கத்தில்) (ஒ)

BRIGHTMAN
நாவலர் வீதி, யாழ்நகர்.
புதிய பிரிவு
சரளமாக உரையாட
சிங்களம்
By: லீலாகிருஸ்ணன்.
ஆரம்பம்: 18.07.2004
SUN.-1.30p.m.(o.t)
(SAT., SUN.-1.30)

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசினால் இது முதலில் நடை முறைப்படுத்தப்பட்டது. இப்போது அது வெள்ளி விழா ஆண்டில் நடைமுறையில் இருக்கின்றது.

1979இல் இது தற்காலிக ஏற்பாடுகள் சட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டாலும் 1982இல் அது நிரந்தர ஏற்பாடுகள் சட்டமாக ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையிலான அரசினால் அங்கீகரிக்கப்பட்டது.

இந்தச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலேயே அது ஜனநாயக விரோதமான - நீதிமுறைமைகளுக்குப் புறம்பான - மோசமான - சட்டம் என்று உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் இயங்கும் மனித உரிமைகள் அமைப்புகளினாலும், அரசியல் கட்சிகளினாலும், தொழிற் சங்கங்களினாலும் சட்டத்துறையினராலும் விமர்சிக்கப்பட்டது.

எனினும், பொலீஸாரும், ஆயுதப்படையினரும் அதிகாரிகளும் நீதித்துறைச் செயற்பாட்டைத் தம் விருப்பப்படி கையிலெடுத்து தான்தோன்றித்தனமாகச் செயற்படுவதற்கு வழிசெய்யும் இந்தச் சட்டம் முழு அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

நாட்டின் நீதித்துறையையே கேவலப்படுத்தும் மிக மோசமான பல நிகழ்வுகளுக்கு சட்டப்பாதுகாப்பும் நீதியற்ற அங்கீகாரமும் வழங்கிய இந்தச். சட்டம் இப்போது யுத்தநிறுத்தத்தை ஒட்டி நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்தாலும் அது நிறைவேற்றப்பட்டு 25 ஆண்டுகள் கழியும் இச்சமயத்தில் அச்சட்டத்தை இல்லாதொழிக்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் முனைப்பாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்கான மக்கள் இயக்கம் ஒன்றை பாரிய அளவில் நடத்துவதற்கு முஸ்தீபுகள் எடுக்கப்படுவதாகத் தெரிகின்றது.

கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவின் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையமும், மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கான நிலையமும் இதற்கான முன்முயற்சிகளை எடுத்துள்ளன.

இவ்விவகாரத்தை மக்கள்மயப்படுத்தி முன்னெடுப்பதற்கான வழிவகைகள் குறித்துப் புத்திஜீவிகள் மற்றும் பிரமுகர்களுடன் ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஒன்றை இந்நிறுவனங்கள் நாளை மறுதினம் கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நடத்தவுள்ளன.

(க)

# குடாநாட்டில் மாணவர் எண்ணிக்கை கவலை தரும் வகையில் வீழ்ச்சி

## செயலகக் கூட்டத்தில் அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை17

குடாநாட்டில் மாணவர்களின் எண்ணிக்கை கவலை தரும் அளவிற்கு குறைந்துவிட்டது.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன்.

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று யாழ்.செயலகத்தில் இடம்பெற்றது, இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்:

குடாநாட்டின் கல்விநிலை குறித்து ஆராயப்பட்டபோது 1995ஆம் 2லட்சத்து 40 ஆயிரமாக இருந்த குடாநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை, தற்போது ஒரு லட்சத்து 40 ஆயிரமாகக் குறைந்துள்ளமை கவலையளிக்கின்றது என்று யாழ்.அரச அதிபர் தெரிவித்தார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.அலுவலகப் பணிப்பாளர் எஸ்.சீனிவாசன் கூறுகையில், குடாநாட்டின் வீதி அபிவிருத்திக்கோ அல்லது புனரமைப்புக்கோ நிதி ஒதுக்கப்படுவதில்லை என்றும் வீதிப்பராமரிப்புக்காக வருடாந்தம் 2 கோடியே 28 லட்சம் ரூபா மட்டும் ஒதுக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ்.சதுர்முகன் கருத்துத் தெரிவிக்கையில் - யாழ். வைத்தியசாலையில் படுக்கைகள் பற்றாக்குறையாக உள்ளதால், பலநோயாளர்கள் தரையில் படுக்க நேரிட்டுள்ளது என்றும்-

சிறுவர் சிகிச்சை விடுதி சீரமைக்கப்படுவதும், அதிதீவிர சிகிச்சைப்பிரிவுக்கென புதிய கட்டடம் அமைக்கப்படுவதும் அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி விரைவில் வழங்கப்படாவிட்டால் மாவட்ட அபிவிருத்திக்குழு நிதிநெருக்கடியைச்சந்திக்க நேரிடும் என்று கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஜி.ஜி.கஜேந்திரகுமார், சுரேஷ்பிரேமச்சந்திரன், டக்ளஸ் தேவானந்தா ஆகியோரைத் தவிர மற்றய அனைவரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். அத்துடன் தமிழீழ நிர்வாக சேவையின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் எஸ்.விஜிதரன், மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி ஆகியோரும் செயலக அதிகாரிகள், பிரதேச செயலர்கள், திணைக்கள அதிகாரிகள் எனப் பலரும் இக்கூட்டத்தில் பங்கேற்றனர். (ஒ-202-204)

## சச்சு மாஸ்டரைசுட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மரண விசாரணையின் பின்னர் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

காயமுற்று மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கம் தியாகராசா முரளிதரனின் உடல் நிலை தேறிவருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ)

## இயக்கங்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சச்சு மாஸ்டர் சிறையில் இருந்த சமயம் அவரைச்சந்திப்பதற்கு இராணுவம், பொலீஸ் மற்றும் புலனாய்வுத்துறை அதிகாரிகள் அடிக்கடி வந்து சென்றனர். இதனால் அவர் ஒரு துரோகி என்று நான் கருதினேன். அதனால் அவரைத் தீர்த்து கட்டுவதற்கு முடிவு செய்தேன்.

அதன்படியே அன்றைய தினம் அவரையும் அவரது சகாக்கள் இருவரையும் சுட்டேன் என்றார்.

## கிழக்கு நிலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை.

சட்டம், ஒழுங்கை நிலைநாட்டப் படையினரும் பொலீஸாரும் முயன்று கொண்டிருக்கிறார்கள்.

கருணாவிவகாரம் சமாதான முயற்சிகளைப் பாதிக்காது. கருணாவுக்கு உத்தியோக பூர்வமாக அரசு உதவி எதையும் வழங்கவில்லை. கருணாவிவகாரத்தால் சமாதானத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று எவரும் என்னிடம் கூறவில்லை என்றார் அவர். (ஒ-3)

BEACON யாழ்.நகர்
நாக.தமிழிந்திரனின்
தமிழ் வகுப்புகள் வழமைபோல்
வழமையான நேர அட்டவணைப்படி
நடைபெறும். -நிர்வாகி.
(34192)

பாடசாலை மாணவர்களுக்கான டொச் வகுப்புகள்
ஆரம்பம்
3,4,5,6ஆம் வகுப்புகளுக்கு
BERN, ZURICH
ஆகிய பெரு நகரங்களில்
லிங்கம் மாஸ்ரரின் கற்பித்தலில்
தொடர்பு: 062 7974164 - 079 3344733
4665, OFTRINGEN, SWISS.
(33927)

COMPUTER EXPRESS
Institute of Information Technology
Maniam's Building 15.சிராம்பையடி வீதி,
யாழ்ப்பாணம். (off Stanly Road)
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
காலம் 4மாதம்
QUICK BOOKS PRO
ACCPAC
MYOB
ஆரம்பம் 24-07-2004
(சி-36014)

CAREER .COM
aat STAGE III
விரிவுரைகள் ஆரம்பம்: 25-07-2004
aat STAGE I& II
புதிய அனுமதிகள் 30-07-2004வரை ஏற்றுக் கொள்ளப்படும். அலுவலக நேரம் : திங்., புதன்., வெள்ளி., சனி, ஞாயிறு. 10a.m., 2 p.m.
# 79, Main Street,Jaffna.
(சி-36029)

ஆசிரியர் போட்டிப் பரீட்சை – 2004
வழிகாட்டி நூல்
விசேட பதிப்பு
முற்றிலும் எதிர்பார்க்கை உளச்சார்பு, பொது அறிவு வினா - விடை
P.உமாசங்கர் ரூ.60 மட்டும்
சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்
(34216)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.07.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.